# உதயன்

32 பக்கங்கள் சுடர் 28 கதிர் 033 வள்ளுவர் ஆண்டு 2043 மார்கழி 14 சனிக்கிழமை (29/12/2012) UTHAYAN - A Lively National Tamil Daily விலை ரூபா: 25.00

www.onlineuthayan.com





# வெள்ளத்தால் மக்கள் அந்தரிப்பு

## வடக்கில் ஒரு லட்சம் பேர் பாதிப்பு



முல்லையில் படகு மூலம் மீட்கப்பட்ட மக்கள்

புதுக்குடியிருப்பு, டிசெ. 29

தொடர்ந்து பெய்யும் மழை மற்றும் வெள்ளம் காரணமாக வடமாகாணத்திலுள்ள ஐந்து மாவட்டங்களிலும் சுமார் 28,297 குடும்பங்களைச் சேர்ந்த 101,569 (ஒரு லட்சத்து 1,569) பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த 35 ஆயிரம் பேர் நலன்புரி நிலையங்களில் தற்காலிகமாகத் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

சுமார் 20 ஆயிரத்துக்கு மேற்பட்ட வீடுகள் முற்றாகவும், பகுதியாகவும் சேதமடைந்துள்ளதாக ஒவ்வொரு மாவட்டங்களிலும் உள்ள இடர் முகாமைத்துவப் பிரிவின் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

பார்க்க பக்கம் 4

## கிணற்றில் தவறி வீழ்ந்து இருவர் சாவு

யாழ்ப்பாணம், டிசெ.29

வெவ்வேறு இரு சம்பவங்களில் கிணற்றினுள் தவறி வீழ்ந்து இருவர் உயிரிழந்துள்ளனர்.

இதில் கிளிநொச்சி ஸ்கந்தபுரத்தைச் சேர்ந்த ஜெயராஜ் சிந்துஜன் (வயது-3), வட்டுக்கோட்டை சங்கரத்தையைச் சேர்ந்த கு.அன்ரனி (வயது-66) ஆகிய இருவருமே உயிரிழந்தவர்களாவர்.

இப்போது மழைகாலம் நிலவுவதாலும், நீர்நிலைகள் நிரம்பிக் காணப்படுவதாலும் அவை தொடர்பில் அவதானமாகச் செயற்படுவது அவசியமெனவும், குறிப்பாகப் பெற்றோர்கள் தமது பிள்ளைகள் குறித்து மிக அவதானமாகச் செயற்படுமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

உயிரிழந்தவர்களில் வட்டுக்கோட்டையைச் சேர்ந்த கு.அன்ரனியின் சடலம் பிரேத பரிசோதனைகளுக்காக யாழ். போதனா வைத்திய சாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (த-4-18)

## கைதடியில் விபத்து; சாரதி காயம்

யாழ்ப்பாணம், டிசெ.29

கைதடிப் பாலத்தில் இரு வாகனங்கள் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் 'ஹைஏஸ்' வாகனச் சாரதி காயமடைந்து, யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் இடம்பெற்றது. சம்பவத்தில் வவுனியா கட்டக்காட்டுப் பகுதியைச் சேர்ந்த ஆர்.தர்சஹீர் (வயது-31) என்பவரே காயமடைந்தார்.

நல்லூரிலிருந்து வவுனியா நோக்கிச் சென்றுகொண்டிருந்த பஸ் ஒன்று கைதடிப்

பார்க்க பக்கம் 4

# புனர்வாழ்வு சட்டவிரோதம்

## தமிழ் மாணவர்களுக்கு அநீதி சரத் பொன்சேகா குமுறல்



கொழும்பு, டிசெம்பர் 29

அவசரகாலச்சட்டம் நடைமுறையில் இல்லாத நிலையில், நீதிமன்ற உத்தரவுமின்றி எந்தச் சட்டத்தின் பிரகாரம் யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் புனர்வாழ்வு முகாமுக்கு மாற்றப்பட்டுள்ளனர் எனக் கேள்வி எழுப்பியுள்ள முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா, தமக்கு வழங்

பார்க்க பக்கம் 4

## படகுகளின் உதவியுடன் மீட்கப்பட்டனர் மக்கள்

### புதுக்குடியிருப்பு வசந்தபுரத்தில்

புதுக்குடியிருப்பு, டிசெ. 29

வெள்ளத்தினால் சூழப்பட்டு வெளியேற முடியாத நிலையில் தவித்த புதுக்குடியிருப்பு வசந்தபுரம் கிராம மக்கள் படகுகளின் மூலமாக மீட்கப்பட்டதாகத் தெரிய வருகின்றது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் மிகப் பெரிய குளமாகிய முத்துஐயன்கட்டுக் குளம் நிரம்பியதால் அதன் இரண்டு வான் கதவுகளும் ஐந்து அடி திறந்துவிடப்பட்டுள்ளன. இதனால் பண்டாரவன்னி, பேராறு, வசந்தபுரம், முத்துவிநாயகர்புரம் முதலாம், இரண்டாம் கண்டங்கள் என்பன வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. இந்த நிலையில் முத்துவிநாயகர்புரம் முதலாம், இரண்டாம் கண்டங்களைச் சேர்ந்த மக்கள் நள்ளிரவு ஒரு மணியளவில் இரவோடு இரவாக வெளியேறிப் பாடசாலைகள், பொதுமண்டபங்கள், ஆலயங்கள், சனசமூக நிலையங்கள் என்பவற்றில் தஞ்சமடைந்துள்ளனர். இவர்க

பார்க்க பக்கம் 4

## முல்லைத்தீவு - முள்ளியவளை போக்குவரத்து முற்றாகத் தடை

முல்லைத்தீவு, டிசெ. 29

முள்ளியவளை விதியில் ஐந்து அடி உயரத்தில் நீர் பாய்ந்து செல்வதால் முல்லைத்தீவுக்கும் முள்ளியவளைக்கும் இடையிலான போக்குவரத்துக்கள் முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

கடும் மழை காரணமாக முல்லைத்தீவு நந்திக்கடல் வெளியில் வீதிக்கு மேலாக ஐந்து அடி உயரத்தில் வெள்ள நீர் பாய்ந்து செல்கின்றது. இதனால் வாகனங்கள் எதுவும் செல்ல முடியாத நிலையில் முல்லைத்தீவுக்கும் முள்ளியவளைக்கும் இடையிலான போக்குவரத்து முற்றாகவே தடைப்பட்டுள்ளது.

இதேவேளை மடவாள சிங்கன் குளம் உடைப்பெடுத்து வான் பாய்வதால் முறிப்புக்குளத்தின் நீர்மட்டம் 16 அடியையும் தாண்டியுள்ளது. இதனால் முறிப்புக் குளத்தின் வான் பகுதியில் ஆறு அடி உயரத்தில் நீர் பாய்ந்து செல்கின்றது. இதனால் இங்குள்ள பாற்பண்ணைப் பகுதியைச் சேர்ந்த 22 குடும்பங்கள் வெளியேற்றப்பட்டு முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரியில் தங்கவைக்கப்பட்

பார்க்க பக்கம் 4

## காவடி எடுத்த குடும்பஸ்தர் வீதியில் மயங்கி வீழ்ந்து சாவு

### காரைநகரில் நேற்றுத் துயரம்

காரைநகர், டிசெ.29

காரைநகர் ஈழத்துச் சிதம்பரத் தீர்த்தத் திருவிழாவுக்குக் காவடி எடுத்து நேர்த்திக்கடன் செலுத்தச் சென்ற பக்தர் ஒருவர் காவடி ஆடிக்கொண்டிருந்த வேளையில் திடீரென மயங்கி வீழ்ந்து உயிரிழந்தார்.

இந்தச் சோகச் சம்பவம் நேற்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் காரைநகர் மருதடிப் பிள்ளையார் கோயிலுக்கு அண்மையில் இடம்பெற்றது.

பார்க்க பக்கம் 4

## மண்டைதீவில் 4 வயது சிறுமி வன்புணர்வின் பின் கொலை

யாழ்ப்பாணம், டிசெ.29

நான்கு வயதுச் சிறுமி ஒருவர் வன்புணர்வின் பின்னர் கழுத்து நெரிக்கப்பட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளார். அவரது சடலம் நேற்றுத் தோட்டக் கிணறு ஒன்றில் இருந்து மீட்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தக் கொடூரச் சம்பவம் மண்டைதீவு 2 ஆம் வட்டாரப் பகுதியில் இடம்பெற்றுள்ளது. இந்தச் சம்பவத்தால் அந்தப் பகுதியில்

பார்க்க பக்கம் 4

# ஐ.நாவை மதிக்காவிட்டால் கடுமையான எதிர்விளைவு

## அரசை எச்சரிக்கிறார் கரு ஜெயசூரிய

கொழும்பு, டிசெ.29

ஐ.நாவும் பொதுநலவாய அமைப்பும் விடுத்த கோரிக்கைகளுக்குத் தொடர்ந்தும் செவிமடுக்காவிடில் அரசு நாட்டின் பிரதான பிரச்சினைகளை உதாசீனம் செய்து வருமானால் புதிய ஆண்டில் கடும் விளைவுகளுக்கு முகம்கொடுக்க வேண்டி வரும் என்று ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் கரு ஜெயசூரிய எச்சரித்துள்ளார்.

நாட்டின் மகாநாயக்க தேரர்கள் மற்றும் இதர சமயத்தலைவர்களைக் கூட

பார்க்க பக்கம் 4

## கஜேந்திரகுமாரை விசாரணைக்கு வருமாறு பயங்கரவாத குற்றத் தடுப்புப் பிரிவு அழைப்பு

கொழும்பு, டிசெ.29

யாழ். பல்கலைக்கழக மாணவர்களின் விடுதலைக்கான கூட்டமைப்பின் முன்னணிச் செயற்பாட்டாளர்களுள் ஒருவரான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தை இன்று விசாரணைக்கு வருமாறு பயங்கரவாத விசாரணைப் பிரிவினர் அழைப்பு விடுத்துள்ளனர்.

கொழும்பிலுள்ள தலைமைக் காரியாலயத்தில் மேற்படி விசாரணைக்கென இன்று முற்பகல் 11 மணிக்கு வரவேண்டும் என நேற்றுமுன்தினம் கொழும்பிலுள்ள அவரது வீட்டுக்கு விடுக்கப்பட்டுள்ள அறிவித்தலினூடாகத்

பார்க்க பக்கம் 4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# '13' ஐ நீக்கினால் மு.கா.எதிர்க்கும்

## அரசுக்கு அளித்துவரும் ஆதரவும் மீள்பரிசீலனை செய்ய வேண்டிய நிலை ஏற்படும் என்கிறார் ஜெமீல்



அம்பாறை,டிசெ.28

*அரசமைப்புக்கான பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்தை நீக்கினால் கடுமையாக எதிர்ப்போம். அத்தகைய முயற்சிகள் முற்றாக முறியடிக்கப்பட வேண்டும்.*

*இவ்வாறு கிழக்கு மாகாணசபையின் முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர் ஏ.எம்.ஜெமீல் தெரிவித்தார்.*

நிந்தவூர், 23 ஆம் பிரிவு விவசாயிகள் அபிவிருத்தி சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கத்தின் பதினோராவது வருடாந்த பொதுச் சபைக் கூட்டம் கடந்த புதன்கிழமை நடைபெற்றது.

அந்தக் கூட்டத்தில் பிரதம பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ் வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அரசமைப்புக்கான பதின் மூன்றாவது திருத்தச் சட்டம் ஒழிக்கப்பட வேண்டும். அதனூடாக மாகாண சபைகளையும் இல்லாதொழிக்க வேண்டும் என இனவாதக் குரல்கள் எழுப்பப்பட்டுள்ளன.

சிறுபான்மையினர் எதிர் நோக்கியுள்ள பல்வேறு அரசியல் பிரச்சினைகளுக்கு மத்தியில், அரசிலுள்ள சில அமைச்சர்களும் அர சமைப்புக்கான பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்தை இல்லாதொழிக்க வேண்டும் என்று கூறுவது கவலைதரும்விடயம்.

எனினும் அத்தகையதொரு நிலை ஏற்படுவதை ஒருபோதும் நாம் அனுமதிக்க முடியாது.

இந்த நாட்டில் சிறுபான்மை மக்களுக்குள்ள ஒரேயொரு அரசமைப்புத் திருத்தச் சட்டம் அதுவாகும்.

அதன்மூலம் சிறுபான்மை மக்களுக்குள்ள குறைந்த அதிகார நிலையம் மாகாண சபையாகும்.

அதையே இல்லாதொழிக்க முனைவது சிறுபான்மை மக்களுக்கு இழைக்கும் துரோகச் செயற்பாடாகும்.

அந்தவகையில் பதின் மூன்றாவது அரசமைப்புத் திருத்தச் சட்டத்தை இல்லாதொழிக்கும் எத்தகைய நடவடிக்கைக்கும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவளிக்காது.

அந்த விடயத்தில் கைவைக்க முனையும் எந்த சக்திக்கும் முஸ்லிம் காங்கிரஸோ, நாமோ துணை போகப் போவதில்லை.

நாம் அரசில் அங்கம் வகித்தாலும் எத்தகைய விட்டுக் கொடுப்புமின்றி எமது நிலைப்பாட்டில் இறுதிவரை உறுதியாக நிற்போம். பதின்மூன்றாவது அரசமைப்புத் திருத்தச் சட்டத்தை நீக்க முனைந்தால் அரசுக்கு அளித்து வரும் ஆதரவை மீள்பரிசீலனைக்கு உட்படுத்த வேண்டிய நிலைமையும் ஏற்படும்.

அந்த விடயத்தில் உறுதியான நிலைப்பாட்டை முஸ்லிம் காங்கிரஸ் அரசுக்குத் தெளிவுபடுத்தியுள்ளது.

**கல்விக்கு முக்கியம்**

என்னைப் பொறுத்தவரை நான் கல்வித்துறைக்கு முக்கியத்துவமளித்து செயற்பட்டுவரும் ஒருவன். அதன் காரணமாகவும், மக்கள் பிரச்சினைகளில் முனைப்புடன் செயற்பட்டு வருவதாலும் கிழக்கு மாகாண சபையின் உறுப்பினராக மீண்டும் இரண்டாவது தடவையாகவும் தெரிவு செய்யப்பட்டுள்ளேன். மக்கள் என்மீது கொண்டுள்ள நம்பிக்கைக்கு ஏதுவாக என் சேவை களைத் தொடர்ந்தும் முன்னெடுப்பேன்.

விவசாயிகள், மீனவர்கள் தொடர்பிலும் என் பணிகளை விஸ்தரித்துச் செயற்படதிட்டமிட்டுள்ளேன்.

**அரிசி ஆலை**

அம்பாறை மாவட்டத்தின் கரையோரப் பிரதேச விவசாயிகள் தமது உற்பத்தி நெல்லை குறைந்த விலையிலேயே விற்பனை செய்ய வேண்டியதுரதிர்ஷ்ட நிலைமை தொடர்ந்து வருகின்றது.

அந்தவிடயத்தில் நான் அம்பாறை மாவட்ட செயலருக்கு எடுத்து விளக்கியுள்ளேன். கரையோரப் பிரதேசத்தில் பெரிய நவீன அரிசி ஆலை ஒன்றை நிர்மாணிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கோரியுள்ளேன். அதற்கு அவரும் இணக்கம் தெரிவித்துள்ளதால் எதிர்காலத்தில் அதற்கான முயற்சிகளும், நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படும்.- என்றார். (ச-30)

## தொலைந்துபோன பணம் உரியவரிடம் ஒப்படைப்பு

### நேர்மையை பாராட்டினார் ஏறாவூர் பொலிஸ் பதில் பொறுப்பதிகாரி



மட்டக்களப்பு,டிசெ.29

பஸ்ஸில் பயணித்துக் கொண்டிருந்தபோதுதொலைந்து போன 16,000 ரூபா ஏறாவூர் பொலிஸ் நிலையத்தில் வைத்து உரியவரிடம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை ஒப்படைக்கப்பட்டது.

அந்தச் சம்பவம் குறித்து பணத்தைத் தொலைத்த நபர் தெரிவித்ததாவது:-

வங்கியிலிருந்து எடுத்த 16,000 ரூபாவை காகித உறையில் வைத்து அது பணம் என்று தெரியாமலேயே வீட்டில் கொடுத்து விடுமாறு எனது தம்பியிடம் கொடுத்தேன்.

அந்தநிலையில் அவர் வாழைச்சேனையிலிருந்து கிரானுக்கு பஸ்ஸில் பயணித்துக்கொண்டிருந்தபோது பணம் தொலைந்துபோனது.

அவர் பஸ்ஸை விட்டிறங்கும்போதே பணம் தொலைந்து போனமை தெரியவந்தது. உடனடியாக பஸ் நடத்துனருடன் தொடர்பு கொண்டபோது யாரோ ஒருவர் பணத்தைக் கண்டெடுத்து அதனை ஏறாவூர் பொலிஸில் ஒப்படைத்ததாகக் கூறினார்.

உடனடியாக ஏறாவூர் பொலிஸ் நிலையத்துக்கு வந்து பணத்தைப் பெற்றுக் கொண்டேன்- என்றார்.

இதேவேளை பணத்தைக் கண்டெடுத்து அதனை ஏறாவூர் பொலிஸில் ஒப்படைத்தவரின் நேர்மையை ஏறாவூர் பொலிஸ் பதில் பொறுப்பதிகாரி ஆர்.ஏ.பி.பெரேரா பாராட்டியுள்ளார்.

அந்தப் பணம் உரியவரிடம் போய்ச் சேர வேண்டும் என்பதில் அவர் எடுத்துக்கொண்ட அக்கறை அனைவருக்கும் ஒரு முன் மாதிரியாக அமைய வேண்டும் என்று அவர் கூறினார். (ச)


## விபத்தில் ஒருவர் சாவு

மட்டக்களப்பு,டிசெ.29

மட்டக்களப்பு, களுவாஞ்சிக்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட களுதாவளை பிரதான வீதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

பட்டிருப்பைச் சேர்ந்த கிருஸ்ணபிள்ளை நிரஞ்சன் (வயது- 28) என்ற நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

மோட்டார் சைக்கிளில் சென்ற இந்த நபர் லொறியுடன் மோதுண்டு தூக்கி வீசப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ச)



கிண்ணியா பிரதேசத்தில் ஏற்பட்ட வெள்ள இடரால் பாதிக்கப்பட்டவர்களுக்கு கிழக்கு மாகாண முதலமைச்சர் நஜீப். ஏ. மஜீத் காசோலைகளை வழங்கியுள்ளார்.

## கடந்த வாரம் 72 பேர் கைது

யாழ்ப்பாணம், டிசெ. 29

நீதிமன்றினால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டவர்கள் உட்பட பல்வேறு குற்றச் செயல்களுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் யாழ்.மாவட்டத்தில் கடந்த வாரம் 72 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று யாழ். பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எம்.எம்.ஜெப்றி தெரிவித்தார்.

அவரது அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது :-

நீதிமன்றங்களினால் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 18 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். மதுபோதையில் வாகனம் செலுத்திய குற்றச்சாட்டில் 10 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். டெங்கு பரவும் வகையிலும் சூழல் மாசடையும் வகையிலும் செயற்பட்ட குற்றச்சாட்டில் 12 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மது அருந்திவிட்டு பொது இடத்தில் இடையூறு விளைவித்த குற்றச்சாட்டில் 6 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். சட்டவிரோதமாக மது விற்பனை செய்த குற்றச்சாட்டில் 5 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். யாழ். நகரில் கஞ்சா போதைப்பொருள் வைத்திருந்த குற்றச்சாட்டில் 2 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். சமாதானத்துக்குக் குந்தகம் ஏற்படும் வகையில் செயற்பட்ட குற்றச்சாட்டில் 2 பேர் கைது செய்யப்பட்டனர். சட்டவிரோதமாக மணல் ஏற்றிச் சென்ற குற்றச்சாட்டில் ஒருவர் கைதாகினார்.

பல்வேறு இடங்களிலும் திருடிய குற்றச்சாட்டில் 9 பேரும், பிறருக்கு அடித்துக் காயம் ஏற்படுத்திய குற்றச்சாட்டில் 5 பேரும், இருவேறு இடங்களில் 3 லட்சத்து 89 ஆயிரம் ரூபா பெறுமதியான காசோலை மோசடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் 2 பேருமாக 72 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். (4)

## சீரற்ற காலநிலையால் இதுவரை8 பேர் உயிரிழப்பு

மட்டக்களப்பு,டிசெ.29

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்தவாரம் முதல் ஏற்பட்ட சீரற்ற காலநிலையால் இதுவரை 8 பேர் உயிரிழந்துள்ளனர் என்று இடர் முகாமைத்துவ நிலையத்தின் மாவட்டப் பணிப்பாளர் எஸ்.இன்பராஜன் தெரிவித்தார்.

அதில் கோரளைப்பற்று, வாழைச்சேனை பிரதேச செயலர் பிரிவில் 3 பேரும், ஏறாவூர்பற்றில் இருவரும், மண்முனை மேற்கு, வவுணதீவில் ஒருவரும், மண்முனைப் பற்று, ஆரையம்பதி பிரதேச செயலர் பிரிவில் இருவரும் உயிரிழந்துள்ளனர் என்று அவர் கூறினார். வெள்ளத்தினால் 2,112 வீடுகள் முழுமையாகச் சேதமடைந்துள்ளன. அத்துடன் 3,426 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)


## அப்பியாசக்கொப்பிகள் மாணவருக்கு கிடைத்தன

மட்டக்களப்பு,டிசெ.29

நல்லாட்சிக்கான மக்கள் இயக்கத்தின் ஏற்பாட்டில் இலவச அப்பியாசக் கொப்பிகள் வழங்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை காத்தான்குடியில் நடைபெற்றது.

காத்தான்குடி ஹிஸ்புல்லா மண்டபத்தில் நடைபெற்ற அந்த நிகழ்வில், ஆயிரம் மாணவர்களுக்கு இலவச அப்பியாசக் கொப்பிகள் வழங்கப்பட்டன.

நல்லாட்சிக்கான மக்கள் இயக்கத்தால் மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை மாவட்டங்களிலுள்ள பிரதேசங்களில் 8000 மாணவர்களுக்கு அப்பியாசக் கொப்பிகள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 11,73,000 ரூபா பெறுமதி கொண்ட பொருள்கள் கடந்த வாரம் திருட்டு

## யாழ். சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தகவல்

யாழ்ப்பாணம், டிசெ.29

*யாழ்.குடாநாட்டில் கடந்த வாரம் பரவலாக இடம்பெற்ற 11 திருட்டுச் சம்பவங்களில் 11 லட்சத்து 73 ஆயிரத்து 400 ரூபாவுக்கு அதிகமான பெறுமதி வாய்ந்த பொருள்கள் திருடப்பட்டுள்ளன என்று யாழ். பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எம்.எம்.ஜெப்றி தெரிவித்தார். அவரது அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற வாராந்த ஊடகச் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:*

சுழிபுரம் கிழக்கில் கடந்த செவ்வாய்க்கிழமை வீடு ஒன்றினுள் புகுந்த திருடர்கள் 6 லட்சம் ரூபா பெறுமதியான நகைகளைத் திருடிச் சென்றுள்ளனர். இதுவே அதிக தொகையாகும்.

கடந்த 21 ஆம் திகதி உடுவில் கிழக்கில் வீடு ஒன்றிலிருந்து 3 லட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான தாலிக் கொடியைத் திருடிச் சென்றுள்ளனர். அத்துடன் அங்கிருந்த 3 ஆயிரம் ரூபா பணத்தையும் எடுத்துச் சென்றுள்ளனர்.

கொக்குவில் பகுதியில் வீடு உடைத்து உள்நுழைந்த திருடர்கள் அங்கிருந்த 80 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்களைத் திருடிச் சென்றுள்ளனர்.

யாழ். ஆஸ்பத்திரி வீதியில் வங்கி ஒன்றின் முன்பான நிறுத்தப்பட்டிருந்த 12 ஆயிரம் ரூபா பெறுமதியான பெண்கள் சைக்கிள் திருடப்பட்டுள்ளது.

கச்சேரி- நல்லூர் வீதியில் கடந்த புதன்கிழமை இரவு கடை உடைத்து 22 ஆயிரத்து 800 ரூபா பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டுள்ளன.

சாவகச்சேரி நுணாவில் பகுதியில் இரவு நேரம் கடையை உடைத்த திருடர்கள் 16 ஆயிரத்து 600 ரூபா பெறுமதியான பொருள்களைத் திருடிச் சென்றுள்ளனர். மோட்டார் சைக்கிள் ரயர் தலைக் கவசம், பற்றரிகள் என்பன இவ்வாறு திருடப்பட்டுள்ளன.

கச்சாய் தெற்கு, கொடிகாமத்தில் கடந்த வியாழக்கிழமை கடை உடைத்து பெறுமதிமிக்க மின்மோட்டார் திருடப்பட்டுள்ளது.

அச்சுவேலி பத்தமேனியில் ஒரே இரவில் வெவ்வேறு இடங்களில் இடம்பெற்ற திருட்டுக்களில் 22 ஆயிரம் ரூபா மற்றும் 23 ஆயிரம் ரூபா பெறுமதியான நீரிறைக்கும் உபகரணங்கள் திருடப்பட்டுள்ளன.

வல்வெட்டித்துறை இமையாணன் பகுதியில் 24 ஆயிரம் ரூபா பெறுமதியான இரண்டு ஆடுகளும் இரண்டு குட்டிகளும் திருடப்பட்டுள்ளன. பின்னர் அவை மீட்கப்பட்டதோடு சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

நெல்லியடியில் கடந்த புதன்கிழமை குலையன்பதி விநாயகர் ஆலயத்தில் இருந்து சுமார் 20 ஆயிரம் ரூபா பெறுமதியான நான்கு குத்துவிளக்குகள் திருடப்பட்டுள்ளன. சந்தேகத்தின் பேரில் 4 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று மேலும் தெரிவித்தார். (ம-4-86)

## பயிற்சியை நிறைவு செய்த மாணவருக்குச் சான்றிதழ்கள்



வலி. வடக்கு, டிசெ. 29

உடுவில் பிரதேச செயலர் பிரிவில் அமைந்துள்ள தொழில் பயிற்சி நிலையத்தில் கணினி மற்றும் தையல் பயிற்சிகளை நிறைவு செய்து வெளியேறிய மாணவிகளுக்கான சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு மருதனார்மடத்தில் அமைந்துள்ள துபவீ பயிற்சி மண்டபத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம் பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வலி தெற்கு உடுவில் பிரதேச சபைத் தலைவர் தி.பிரகாரம் கௌரவ விருந்தினராக திருமதி த.தயா சோமசுந்தரமும் உடுவில் பிரதேச செயலக மனித வலு ஆற்றல் அலுவலர் ஈ. ரஞ்சித் ராஜ்ஜூம் சிறப்பு விருந்தினராக உடுவில் பிரதேச செயலக நிர்வாகக் கிராம அலுவலர் நா.நவரத்தினராசா, அருட்தந்தை ரி.இராஜ்குமார், தொழிற்பயிற்சி அதிகார சபையின் கணக்காளர் எஸ். சுரேஸ்குமார் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

தையல் பயிற்சி நெறியை பூர்த்தி செய்த 21 மாணவிகளும் அளவெட்டியில் இடம் பெற்ற கணினிப் பயிற்சி நெறியை பூர்த்தி செய்த 16 மாணவிகளும் சான்றிதழ்களைப் பெற்றுக் கொண்டனர். (ம-86)

## கர்ப்பப்பைப் புற்றுநோய் ஆய்வுகூடம் சாவகச்சேரியில்

தென்மராட்சி, டிசெ.29

வடமாகாணத்தில் முதன் முறையாக யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரனின் முயற்சியால் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் பெண்களுக்கான கர்ப்பப்பை வாயில் புற்று நோய் பரிசோதனைகள் கூடம் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

யாழ்.குடாநாட்டில் உள்ள 30 வயதுக்கு மேற்பட்ட பெண்களுக்கு சாவகச்சேரி வைத்தியசாலை மகப்பேற்று பெண் வைத்திய பிரிவால் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. நேற்றைய ஆரம்ப நிகழ்வில் பெரும் எண்ணிக்கையாக பெண்கள் சிகிச்சைக்கு வருகை தந்திருந்தனர்.

இளவயது திருமணம், மற்றும் அதிக அளவு குழந்தைகளை பிரசவித்தோர், ஒன்றுக்கு மேற்பட்ட ஆண்களுடன் உறவுகளை மேற்கொண்டோர் போன்றோருக்கு கர்ப்பப்பை வாசல் புற்றுநோய் தாக்கும் அபாயம் காணப்படுகிறது.

இந்தப் புற்றுநோய் ஏற்பட்டு 15 தொடக்கம் 20 வருட காலத்தில் உடல் முழுவதையும் வேகமாக தாக்கி மரணத்தை ஏற்படுத்தும் வாய்ப்பு உருவாகிறது.

2012 இல் யாழ். பிராந்திய சுகாதார பணிப்பாளர் பணிமனையால் வெளியிடப்பட்ட புள்ளி விவரப் பிரகாரம் 2008 இல் இந்த நோயால் 41 பெண்கள் பாதிக்கப்பட்டு 5 பேர் மரணமடைந்துள்ளதாகவும், 2009 இல் 26 பேர் பாதிக்கப்பட்டு 3 பேரும், 2010 இல் 42 பேர் பாதிக்கப்பட்டு 5 பேரும் 2011 இல் 53 பேர் பாதிக்கப்பட்டு 5 பேரும் இறந்துள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்த நோயை ஆரம்பத்தில் காணப்படும் அறிகுறிகளைக் கொண்டு குணமாக்கக் கூடிய பரிசோதனை முறைகள், சிகிச்சை முறைகள் வந்துள்ளதால் இந்த நோயை இல்லாதொழிக்க பெண்கள் தாமாக முன்வந்து பரிசோதனையில் கலந்து கொள்ள வேண்டுமென குறிப்பிடப்பட்டுள்ளது.

பெண்களுக்கு இந்த நோயால் ஏற்படும் பாதிப்புக்கள், மரணங்கள் போன்றவற்றைத் தடுக்க அந்தந்தப் பிரதேசத்தில் உள்ள மாதர் சங்கங்கள், பெண்கள் அமைப்புக்கள் போன்றவை முன்வந்து செயற்பட வேண்டும் என்றும் கூறப்பட்டது.

1980 களில் யாழ்.போதனா வைத்தியசாலையில் பெண் நோயியல் வைத்திய நிபுணரால் இந்தப் பரிசோதனை நடத்தப்பட்டபோது பெரும் எண்ணிக்கையான பெண்கள் பயன்பெற்றதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-9)

## நிகழ்வுகள் இன்று

**அதிபர்கள் கூட்டம்**

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் அதிபர்களுக்கான கூட்டம் காலை 9 மணிக்கு வலயக் கல்வி அலுவலக கேட்போர் கூடத்தில் நடைபெறும். வருடாந்த திட்டமிடல் தொடர்பாக ஆராயப்படவுள்ளதாக வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிரேமகாந்தன் அறிவித்துள்ளார். (ம-9)

**ஒளிவிழா**

சாவகச்சேரி கத்தோலிக்க மக்களின் ஒளிவிழா நிகழ்வுகள் இன்றும் நாளையும் நடைபெறவுள்ளன. பங்குத் தந்தை அருட்பணி யோசப் பிரான்சிஸ் அடிகள் தலைமையில் இன்று சாவகச்சேரி லிகோரியார் தேவாலயத்திலும் நாளை மட்டுவில் லூர்து மாதா தேவாலயத்திலும் நடைபெறவுள்ளன. (ம-9)

**கலைநிகழ்வும் பரிசளிப்பும்**

கைதடி தென் கிழக்கு விநாயகர் முன்பள்ளியின் வருடாந்தக் கலைநிகழ்வும் பரிசளிப்புவிழாவும் பிற்பகல் 2 மணிக்கு கைதடி விக்னேஸ்வரா வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளன. (ம-14)

**கலந்துரையாடல்**

யாழ். மத்திய கல்லூரியில் சிங்களம், ஆங்கிலம் ஆகிய மொழிகளை 2012 பிரிவில் மேலதிக மொழிக் கல்வியாக பயின்ற ஆசிரியர்களுக்கான அவசர கலந்துரையாடல் காலை 9 மணிக்கு யாழ். மத்திய கல்லூரியின் இணைப்பு அலுவலகத்தில் நடைபெறவுள்ளது. (ம-14)

**கருத்தரங்கு**

வல்வை மாலுமிகள் நலன்புரிச் சங்கத்தின் கருத்தரங்கும் வருடாந்தப் பொதுக் கூட்டமும் காலை 9.30 மணிக்கு வல்வெட்டித்துறை தெணி ஒழுங்கை வி.டி.எ.சி. மண்டபத்தில் நடைபெறவுள்ளன. (ம-14)



நத்தார் பண்டிகையை முன்னிட்டு யாழ்.மறைமாவட்ட கத்தோலிக்கர்களின் யாத்திரைத் தலமான பண்டத்தரிப்பு புனித பற்றிமா அன்னை ஆலயத்தில் இம்முறை பாலன் குடில் மிகச் சிறப்பான முறையில் அமைக்கப்பட்டிருந்தது. அத்துடன் 40 அடி உயரமான நத்தார் மரமும் அமைக்கப்பட்டிருந்தது. (ம-130)

## வலிகாமம் வலயத்தில் பௌர்ணமி தின நிகழ்வு

வலி வடக்கு, டிசெ. 29

வட மாகாண கல்வித் திணைக்களத்தால் மாதாந்தம் நடத்தப்படும் பௌர்ணமி தினப் பெருவிழா வட மாகாண கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா தலைமையில் வலிகாமம் கல்வி வலயத்தில் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் வரவேற்புரையை வலிகாமம் கல்வி வலய பதில் கல்விப் பணிப்பாளர் ரி. ரவிச்சந்திரனும் சிறப்புரையை வட மாகாண கல்வித் திணைக்களத்தின் உதவிச் செயலாளர் ப.விக்கினேஸ்வரனும் நிகழ்த்தினர்.

மங்கல விளக்கை வட மாகாண கல்விப் பணிப்பாளர், வலிகாமம் பதில் கல்விப் பணிப்பாளர் மற்றும் உடுவில், சண்டிலிப்பாய், தெல்லிப்பழை கல்விக் கோட்டங்களின் பணிப்பாளர்கள் உட்பட பலர் ஏற்றி வைத்தனர்.

பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளுடன் வலிகாமம் கல்வி வலய ஆசிரியர்களின் இசைக் கச்சேரி மற்றும் நடன நிகழ்வுகளும் இடம் பெற்றன. (ம-86)

## சைக்கிள் திருடியவர் விளக்கமறியலில்

வலி.வடக்கு, டிசெ.29

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியில் நிறுத்தி வைத்திருந்த சுமார் 12 ஆயிரம் ரூபா பெறுமதியான சைக்கிளைத் திருடிச் சென்ற சந்தேகநபரை யாழ்ப்பாணம் பொலிஸார் கைது செய்துள்ளார்கள். யாழ். செலான் வங்கிக்கு அருகாமையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சைக்கிள் களவு போய்விட்டதாக சைக்கிள் உரிமையாளரால் பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டது.

இதனைத் தொடர்ந்து பொலிஸார் மேற்கொண்ட புலன் விசாரணைகளின் அடிப்படையில் சந்தேக நபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன் அவரிடம் இருந்து திருடப்பட்ட குறிப்பிட்ட சைக்கிளும் மீட்கப்பட்டுள்ளது.

சந்தேக நபர் யாழ்ப்பாணம் நீதிமன்றில் பொலிஸாரால் ஆஜர்செய்யப்பட்டதைத் தொடர்ந்து விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளார். (ம-86)

## வெள்ளத்தில் மிதக்கும் பளை பஸ் நிலையம்

பளை பஸ் நிலையம் எதற்கும் உதவாத நிலையில் வெள்ளம் தேங்கிக் காணப்படுகின்றது. சுமார் 50 லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட இந்த பஸ் நிலையத்தின் நிலைமை விமர்சனத்துக்குள்ளாகியுள்ளது. நிலத்தில் வெள்ளம் தேங்கி நிற்பது மட்டுமன்றிக் கூரைப் பகுதியும் சேதமடைந்து காணப்படு[illegible] தண்ணீர் [illegible]க்குள் வருவதாகவும் கூறப்பட்டது. (ம-9)

## வலி.கிழக்கு மயானங்களில் கொட்டகை வசதி இல்லை

### மழை காலத்தில் சடலங்களை எரியூட்ட முடியாத நிலை


நீர்வேலி, கோப்பாய் பகுதியில் உள்ள இந்து மயானங்களில் மழை காலங்களில் எரியூட்டுவதற்குப் பெரும் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளதாக மக்கள் கூறுகின்றனர். இங்கு கொட்டகை வசதிகள் எதுவும் இன்மையே இதற்குக் காரணம் என்று கூறப்படுகிறது.

கோப்பாய் சந்திக்கு அருகில் கைதடி வீதியில் உள்ள மயானத்திலும் மற்றும் நீர்வேலி வடக்கு, தெற்கு பகுதியில் உள்ள இரண்டு மயானங்களிலும் கொட்டகை வசதிகள் எதுவும் இதுவரை ஏற்படுத்தப்படவில்லை.

மழை காலங்களில் இந்த மயானத்துக்குச் சடலங்களை எரியூட்டச் செல்லும் மக்கள் கொட்டகை வசதிகள் எதுவும் இன்றி பெரும் சிரமப்பட்டு வருகின்றனர்.

அதேசமயம், கோப்பாய் மற்றும் நீர்வேலி தெற்கு இந்து மயானங்கள் மழை காலங்களில் வெள்ளக் காடாகக் காட்சியளிப்பதும் குறிப்பிடத்தக்கது. (ம-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



விசுவமடுவில் வீதியைக் குறுக்கறுத்தோடும் வெள்ளத்தால் பயணிக்கச் சிரமப்படும் பேருந்து



முல்லைத்தீவில் வெள்ளத்தில் மூழ்கியுள்ள கிராமங்களில் இருந்து மீட்கப்படும் மக்கள்

## கஜேந்திரகுமாரை...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிவிப்பு நேற்று முன்தினம் மாலையே விடுக் கப்பட்டுள்ளது. இருப்பினும் அன்றிரவு கஜேந்திரகுமார் பொன்னம்பலம் வெளி நாடு பயணமாகியுள்ளார்.

வெளிநாட்டுப் பயணம் சென்றுள்ள அவர் இதுதொடர்பில் கருத்துத் தெரிவிக்கையில்,

கொழும்பிலுள்ள எனது வீட்டுக்கு நேற்றுக்காலை (நேற்றுமுன்தினம்) தொலைபேசி அழைப்பொன்று வந்தது. அந்தத் தொலைபேசி அழைப்புக்கு எனது தாயார் பதிலளித்தார்.

பயங்கரவாத விசாரணைப் பிரிவிலிருந்து பேசுவதாகக் கூறிய ஒருவர், எனது முழுப்பெயரையும், விலாசத்தையும் பிரதிப் பொலிஸ்மா அதிபர் கோரியதாகக் கூறியுள்ளார்.

அத்துடன், யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் தொடர்பில் அறிக்கையொன்று தயாரிக்கப்படுகிறது. அந்த அறிக்கையை தன்னிடம் கையளிக்க வேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார்.

அதன் பின்னர் எனது அம்மா எனது முழுப் பெயரையும், விலாசத்தையும் குறித்த அதிகாரிக்கு வழங்கியுள்ளார்.

இந்தநிலையில், நேற்றுமுன்தினம் மாலை எனது வீட்டுக்கு அறிவித்தலொன்று வந்துள்ளது. அந்த அறிவித்தலில் 29 ஆம் திகதி சனிக்கிழமை மு.ப. 11 மணிக்கு (இன்று) கொழும்பிலுள்ள தலைமைக் காரியாலயத்திற்கு விசாரணைக்கு வருமாறு எனக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் இரவு நான் வெளிநாடு பயணமானேன். நான் நாடு திரும்பியவுடன் இந்த அழைப்புக் குறித்து ஆராய்ந்து நடவடிக்கை எடுப்பேன் - என்றார் கஜேந்திரகுமார்.

## ஐ.நாவை...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

உதாசீனம் செய்யும் அரசின் போக்கானது விரைவில் எதிர் விளைவுகளை உருவாக்கும் என்பதை அரசு உணர வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

ஒருசில அரச அதிகாரிகளின் விருப்பத்துக்கு ஏற்ற முறையில் நீதித்துறையையும் சட்டவாக்கத்துறையையும் நடத்தவேண்டாம். எல்லாவற்றுக்கும் மேலாக மக்களின் இறைமையை உயர்வாகக் கருதுங்கள், அதுவே சட்டத்தின் ஆட்சியைப் பாதுகாப்பதாக இருக்கும் என்றும் ஜயசூரிய கூறியுள்ளார்.

அரசின் மூன்று தூண்களிலும் மக்கள் நம்பிக்கை இழக்க நேருமானால் அது குழப்பகரமாக இருக்கும். அரசு தனது போக்கை மாற்றிக்கொண்டு சட்டத்தை மதிக்க வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அமைச்சர் ஒருவர் தமது காரைத் தவறான பக்கமாக ஓட்டிச்சென்று எதிரில் வந்த வாகனத்தின் மீது மோதிவிட்டு முறைப்பாடு செய்யவேண்டாம் என்று அந்த வாகனச்சாரதியை அச்சுறுத்திய சம்வத்தைக் குறிப்பிட்டுள்ள கரு ஜயசூரிய, இந்நாட்டில் சட்டம் எவ்வாறு மதிக்கப்படுகிறது என்பதற்கு இது ஓர் உதாரணம் என்றும் தெரிவித்துள்ளார்.

நாட்டின் சட்டமானது இன்று அரசையும் அதன் கையாள்களையும் ஒரு விதமாகவும், ஏனையவர்களை வேறு விதமாகவும் நடத்துகிறது என்று தெரிவித்தார் அவர். நாட்டில் ஜனநாயகத்தைத் தக்கவைத்துக்கொள்வதற்கு நீதித்துறையின் செயற்பாடுகள் முக்கியம் என்பதை அரசு உணர வேண்டும் என்று கூறினார். (ப)

## மண்டைதீவில்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

சம்பவம் பற்றித் தெரியவருவதாவது:

மண்டைதீவு 2 ஆம் வட்டாரப் பகுதியில் உள்ள புகையிலைத் தோட்டக் கிணறு ஒன்றை இறைப்பதற்காக சென்றவர்கள் அந்தக் கிணற்றுக்குள் சடலம் ஒன்று இருப்பதைக் கண்டு ஊர்காவற்றுறைப் பொலிஸாருக்குத் தகவல் கொடுத்தனர்.

பொலிஸார் இதுகுறித்து ஊர்காவற்றுறை நீதிவான் ஆர்.எஸ்.எம்.மகேந்திரராசாவின் கவனத்துக்குக் கொண்டு வந்தனர்.

சம்பவ இடத்துக்குச் சென்ற நீதிவான் சடலத்தைப் பார்வையிட்ட பின்னர் சந்தேகம் நிலவியதை அடுத்து பரிசோதனைக்கு உத்தரவிட்டார்.

இதையடுத்து யாழ்.போதனா வைத்தியசாலை சட்ட வைத்திய அதிகாரி எஸ்.சிவரூபன் அங்கு சென்று சடலத்தைப் பார்வையிட்டதுடன் முதற்கட்ட உடற்கூற்றுப் பரி சோதனையையும் மேற்கொண்டார். இதன்போது சிறுமி வன்புணர்வின் பின்னர் கழுத்து நெரிக்கப்பட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளதாக சட்ட வைத்திய அதிகாரி தெரிவித்தார்.

குறித்த சிறுமி நேற்றுமுன்தினம் ஒரு மணிக்குப் பின்னர் வீட்டில் இருந்து காணாமற் போனதாகவும் பெற்றோர் தேடியும் அவரைக் கண்டுபிடிக்க முடியவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது. சிறுமியைக் காணவில்லை என்று பெற்றோர் பொலிஸிடம் முறையிட்டுள்ளனர்.

இந்தநிலையில் நேற்று அவரது வீட்டுக்கு 200 மீற்றர் தூரத்தில் உள்ள தோட்டக் கிணறு ஒன்றில் இருந்து அவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். (த-4-5-17)

## கைதடியில்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

பாலத்தில் எதிரே வந்த வாகனத்தை விலத்திச் செல்ல முற்பட்டபோது, குறித்த 'ஹைஏஸ்' வானுடன் மோதிய தாகத் தெரிவிக்கப்பட்டது.

இதனால் வாகனங்களும் சேதத்துக்குள்ளாகின. சம்பவ இடத்துக்கு விரைந்த சாவகச்சேரிப் பொலிஸார் விசாரணை மேற்கொண்டனர். (த-4)

## காவடி...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

தற்போது கொழும்பில் வசித்துவருபவரும் காரைநகர் புதுவீதியைச் சேர்ந்தவருமான சண்முகம் சபா நடேசன் (வயது-53) என்வரே இவ்வாறு மரணமானவராவார்.

ஈழத்துச் சிதம்பரத் தீர்த்தத்திருவிழாவை முன்னிட்டு நேற்றுக்காலை 8.30 மணிக்கு காரைநகர் மணற்காடு முத்துமாரியம்மன் ஆலயத்தில் இருந்து ஈழத்துச் சிதம்பரத்தை நோக்கி சபா நடேசன் காவடி எடுத்து ஆடிக் கொண்டு சென்றுகொண்டிருந்தார். காரைநகர் மருதடிப் பிள்ளையார் கோயிலுக்கு அண்மையில் உள்ள வீதியில் இவர் சென்றுகொண்டிருந்த போது திடீரென மயங்கி வீழ்ந்துள்ளார். அந்த இடத்திலேயே அவர் உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

இவரது சடலம் காரைநகர் வலந்தலை வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுப் பின்னர் நேற்றுமாலை உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது. (த-16-17-250)

## முல்லைத்தீவு...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

டுள்ளனர்.

நேற்று அதிகாலை 3 மணியளவில் கரைதுறைப்பற்று பிரதேச செயலர் இவர்களை ஏற்றிச்சென்று பாடசாலையில் தங்கவைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-433)

## படகுகளின்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

ளில் 280 குடும்பங்களைச் சேர்ந்த 923 பேர் உள்ளடங்கியுள்ளனர்.

இதேவேளை வெளியேறாமல் இருந்த வசந்தபுரத்தைச் சேர்ந்த 50 குடும்பங்கள் வெள்ள நீரால் சூழப்பட்ட நிலையில் அவதிக்குள்ளாகினர். இவர்களைப் படகுகள் மூலமாக வெளியேற்றும் முயற்சியில் புதுக்குடியிருப்புப் பிரதேச செயலர் ஐ.பிரதாபன் ஈடுபட்டார். மீட்கப்பட்டவர்கள் மன்னாகண்டல் பாடசாலையில் தங்கவைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-400)

## புனர்வாழ்வு...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

கப்பட்டுள்ள அதிகாரத்தை பாதுகாப்புச் செயலாளரும், குற்றப் புலனாய்வுப் பிரிவும் தவறாகப் பயன்படுத்தக்கூடாது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டிலுள்ள சட்டதிட்டங்கள் அனைவருக்கும் சமனானதாக இருத்தல்வேண்டும். வடக்கு, கிழக்கு மக்களுக்கோ அல்லது எந்தவொரு தரப்புக்கோ இதில் பாகுபாடு இருத்தல்கூடாது என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

பயங்கரவாத தடுப்புப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்ட யாழ். பல்கலைக்கழக மாணவர்களுள் நால்வர் புனர்வாழ்வு முகாமுக்கு மாற்றப்பட்ட விவகாரம் மற்றும் பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றப் பிரேரணை தொடர்பில் 'உதயனு'க்கு கருத்து வெளியிடும்போதே ஜனநாயக தேசிய முன்னணியின் தலைவரும், முன்னாள் இராணுவத் தளபதியுமான சரத் பொன்சேகா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

யாரேனும் ஒருவரைக் கைதுசெய்வதாக இருந்தால் அந்த நடவடிக்கை, சட்டத்தின் பிரகாரம் முன்னெடுக்கப்படவேண்டும். எவ்வித பாகுபாடும் இருத்தலாகாது. ஏனெனில், சட்டம் யாவருக்கும் சமனானதொன்றாகும்.

நாட்டில் தற்போது அவசரகாலச்சட்டம் நடைமுறையில் இல்லை. எனவே, கைதுசெய்யப்பட்டவர்களை தடுத்துவைத்து விசாரணை நடத்துவதற்கோ, புனர்வாழ்வுக்கு உட்படுத்துவதற்கோ நீதிமன்றத்தின் உத்தரவு அவசியம். யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் புனர்வாழ்வு முகாமுக்கு நீதிமன்ற உத்தரவின்றியே மாற்றப்பட்டுள்ளனர். அப்படியானால், எந்தச் சட்டத்தின் பிரகாரம் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது?

பாதுகாப்புச் செயலாளரும், பாதுகாப்புத் தரப்பினரும் தமக்கு வழங்கப்பட்ட அதிகாரத்துக்கு அப்பால் சென்று சட்டவிரோதமான முறையில் இந்த விடயத்தில் செயற்பட்டிருப்பார்களானால் அது கண்டிக்கத்தக்கதாகும்.

அதேவேளை, பிரதம் நீதியரசருக்கு எதிரான குற்றப் பிரேரணையானது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பழிவாங்கல் நடவடிக்கை என நாம் ஆரம்பம் முதலே கூறிவருகின்றோம். பழிவாங்கல் நடவடிக்கைக்குப் புறம்பாக இதில் வேறொன்றும் இல்லை என்றும் குறிப்பிட்டார் சரத் பொன்சேகா.

## வெள்ளத்தால்...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

### முல்லைத்தீவு

இந்த அனர்த்தம் காரணமாக முல்லைத்தீவு மாவட்டமே பெரிதும் பாதிப்புக்குள்ளானதாகத் தெரிவிக்கப்படுகிறது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் சுமார் 11 ஆயிரத்து 261 குடும்பங்களைச் சேர்ந்த 36 ஆயிரத்து 19 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட இடர்முகாமைத்துவ நிலைய உதவிப் பணிப்பாளர் சி.எச்.ஜி.பிரியந்த தெரிவித்தார்.

ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவில் 2 ஆயிரத்து 147 குடும்பங்களைச் சேர்ந்த 6 ஆயிரத்து 796 பேரும், புதுக்குடியிருப்புப் பிரதேச செயலர் பிரிவில் 5,336 குடும்பங்களைச் சேர்ந்த 16,899 பேரும், கரைதுறைப்பற்றில் 2,338 குடும்பங்களைச் சேர்ந்த 8,063 பேரும், துணுக்காய் பிரதேசத்தில் 1,143 குடும்பங்களைச் சேர்ந்த 3,359 பேரும், மாந்தை கிழக்கில் 277 குடும்பங்களைச் சேர்ந்த 857 பேரும், வெலிஓயாவில் 20 குடும்பங்களைச் சேர்ந்த 45 பேரும் பாதிப்புக்குள்ளானதாகவும், இவர்கள் 50 தற்காலிக நலன்புரி நிலையங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்

வெள்ளநீர் வீதிகளில் மேவிப் பாய்வதால் வவுனியா - முல்லைத்தீவு, ஒட்டுசுட்டான், புதுக்குடியிருப்புக்கான போக்குவரத்து நண்பகல் தடைப்பட்டிருந்தது.

முல்லைத்தீவில் மட்டும் 16,150 வீடுகள் பெரும் சேதமானதாகத் தெரிவிக்கப்படுகிறது.

### கிளிநொச்சி

கிளிநொச்சி மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள வெள்ளப்பெருக்குக் காரணமாக கரைச்சி, கண்டாவளை, பூநகரி ஆகிய மூன்று பிரதேச செயலகங்களையும் சேர்ந்த சுமார் 2 ஆயிரத்து 68 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. இதில் ஆயிரத்து 228 குடும்பங்கள் இருப்பிடங்களை இழந்து நிர்க்கதியாகியுள்ளன.

கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவுகளில் உள்ள 344 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 381 பேர் 9 தற்காலிக நலன்புரி முகாம்களிலும் கண்டாவளை பிரதேச செயலர் பிரிவிலுள்ள 702 குடும்பங்களைச் சேர்ந்த 2 ஆயிரத்து 430 பேர் 14 நலன்புரி முகாம்களிலும் பூநகரி பிரதேச செயலர் பிரிவிலுள்ள 182 குடும்பங்களைச் சேர்ந்த 582 பேர் நலன்புரி முகாம்களிலுமாக சுமார் 25 தற்காலிக நலன்புரி முகாம்களில் ஆயிரத்து 228 குடும்பங்களைச் சேர்ந்த 4 ஆயிரத்து 373 பேர் தங்க வைக்கப்பட்டுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

இந்த மக்களுக்கான சமைத்த உணவுகள் மற்றும் அத்தியாவசியப் பொருள்களை வழங்கி வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

### வவுனியா

வவுனியா மாவட்டத்திலுள்ள 5 பிரதேச செயலர் பிரிவிலும் சுமார் 9,123 குடும்பங்களைச் சேர்ந்த 34,170 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். செட்டிக்குளம் பிரதேச செயலர் பிரிவில் 1,865 குடும்பங்களைச் சேர்ந்த 6,919 பேரும், நெடுங்கேணி பிரதேச செயலர் பிரிவில் 6,714 குடும்பங்களைச் சேர்ந்த 26,341 பேரும், வவுனியா சிங்கள பிரதேச செயலர் பிரிவில் 514 குடும்பங்களைச் சேர்ந்த 819 பேரும் பாதிக்கப்பட்டுள்ளதுடன் இவர்கள் 67 நலன்புரி நிலையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளதாக இடர்முகாமைத்துவ நிலைய உதவிப்பணிப்பாளர் ஜானக ஜயவர்த்தன தெரிவித்தார்.

### மன்னார்

மன்னார் மாவட்டத்தில் 5,865 குடும்பங்களைச் சேர்ந்த 23,300 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மன்னார் பிரதேச செயலர் பிரிவில் 248 குடும்பங்களைச் சேர்ந்த 906 பேரும், முசலி பிரதேச செயலர் பிரிவில் 2,960 குடும்பங்களைச் சேர்ந்த 12,868 பேரும், மடு பிரதேச செயலர் பிரிவில் 405 குடும்பங்களைச் சேர்ந்த 5,471 பேரும், நானாட்டான் பிரதேச செயலர் பிரிவில் 1,138 குடும்பங்களைச் சேர்ந்த 4,093 பேரும், மாந்தை மேற்கில் 1,105 குடும்பங்களைச் சேர்ந்த 3,942 பேரும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வீதிகளில் வெள்ளம் மேவிப்பாய்வதால் மன்னார் - யாழ்ப்பாணம், மன்னார் - மதவாச்சி வீதிகளின் போக்குவரத்து துண்டிக்கப்பட்டுள்ளது.

முசலிப் பகுதிக்கான தரைவழிப் போக்குவரத்து முற்றாகத் துண்டிக்கப்பட்டுள்ளது. தொடர்புகளும் துண்டிக்கப்பட்டுள்ளது.

விடத்தல்தீவிலுள்ள மக்கள் கடற்படை மற்றும் அரச அதிபர், நீர்ப்பாசனத் திணைக்கள அதிகாரிகள் ஆகியோரின் உதவியுடன் படகுமூலம் உயிர்ச்சேதம் இன்றி மீட்கப்பட்டதாக இடர்முகாமைத்துவ பிரதிப்பணிப்பாளர் எம்.ஏ.சி.முகமட்றியாஸ் தெரிவித்தார்.

(த-6-18-400-500)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நானாட்டான் மக்கள் பெரிதும் பாதிப்பு மழை நீடித்தால் நிலைமை மோசமாகும்

## தற்போது 750 குடும்பங்கள் 11 நலன்புரி நிலையங்களில்

மன்னார்,டிசெ.29

*தொடர்மழை காரணமாக மன்னார் நானாட்டான் பிரதேசம் பெரியளவில் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், இடம் பெயர்ந்த மக்களின் தேவைகள் சிலவற்றில் பற்றாக்குறை நிலவுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

மன்னார் மாவட்டத்தில் பெய்து வரும் தொடர் மழை காரணமாக நானாட்டான் பிரதேச செயலர் பிரிவில் உள்ள சுமார் 750 குடும்பங்கள் இடம் பெயர்ந்துள்ளதுடன் பல்வேறு விதமான அசௌகரியங்களுக்கும் உள்ளாகிய நிலையில் பாடசாலைகளில் தங்க வைக்கப்பட்டுள்ளார்கள்.

இதேவேளை நானாட்டான் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த அரச அலுவலர்கள், பிரதேச செயலர் தலைமையில் இடம் பெயர்ந்த மக்களின் நலன்களை கவனிப்பதில் இரவு பகலாக ஈடுபட்டு வருகின்றார்கள்.

நானாட்டன் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட பாடசாலைகள், கிராம அபிவிருத்தி சங்க கட்டடங்கள், பொது நோக்கு மண்டபங்கள் என 11 இடங்களில் 750 இற்கும் மேற்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த 2ஆயிரத்து 612 பேர் தங்க வைக்கப்பட்டுள்ளார்கள்.

நானாட்டான் பிரதேச செயலர் பிரிவில் உள்ள நானாட்டான் மகா வித்தியாலயம், மோட்டக்கடை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை, இராசமடு கிராம அபிவிருத்திச் சங்கக் கட்டடம், முருங்கன் மகா வித்தியாலயம், வங்காலை ஆனல்ட் மகா வித்தியாலயம், பரிகாரி கண்டல் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை-

சூரியகட்டைக்காடு றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை, அரசன் குளம் றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை, மாவிலங்கேணி றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை, ரகுல்புதுவெளி கிராம அபிவிருத்திச் சங்கக் கட்டடம், செம்மண்தீவு பொது நோக்குக் கட்டடம் என்பவற்றில் இந்த மக்கள் தங்க வைக்கப்பட்டுள்ளார்கள்.

இவர்களுக்கு வேண்டிய சமைத்த உணவு வகைகளை பொது அமைப்புகள் உடனடியாக வழங்குவதுடன் அரசாலும் சமைத்த உணவுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

மேலும் மழை தொடருமானால் வெள்ளத்தால் இடம் பெயரும் மக்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் எனவும் எதிர்பார்க்கப் படுவதாக அரச அதிகாரிகள் தெரிவித்துள்ளார்கள்.

இந்த நிலையில் நானாட்டன் பிரதேசத்தில் உள்ள ஆறு குளங்கள் உடைப்பெடுத்துள்ளன. இதன் காரணமாக இந்தப் பகுதிகளில் வாழ்ந்த மக்கள் வேறு இடங்களுக்கு இடம்பெயர்ந்துள்ளார்கள்.

கடந்த காலங்களில் இக் குளங்கள் உரிய முறையில் புனரமைப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாமையால் இத்தகைய சூழ்நிலை ஏற்பட்டுள்ளதாக அந்தப் பகுதிகளில் வாழும் மக்கள் தெரிவிக்கின்றார்கள்.

குளங்கள் பெருக்கெடுத்தமையால் பயிர்களும் பெரும் அழிவுக்கு உள்ளாகியுள்ளன. மேலும் பல குளங்கள் நிரம்பிய நிலையில் காணப்படுகின்ற போதிலும் இந்தக் குளங்கள் உடைப்பெடுக்குமானால் மேலும் துன்பத்துக்கு மக்கள் உள்ளாக வேண்டிய நிலைமை ஏற்படலாம் என பொது அமைப்புகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, நானாட்டன் பிரதேசத்தில் வெள்ளத்தால் இடம் பெயர்ந்து தங்க வைக்கப்பட்டுள்ள பெண்கள், சிறுவர்களுக்கான அடிப்படைத் தேவைகளில் பற்றாக்குறை காணப்படுவ்தாக முகாம்களில் தங்கியுள்ள மக்கள் தெரிவித்துள்ளார்கள்.

பெண்களுக்கான உடைகள் மற்றும் சிறுவர்கள், முதியவர்களுக்கான பால் மா வகைகள் பெரும் தட்டுப்பாடாக காணப்படுவதாகவும் இதனை உடனடியாக வழங்க பொது அமைப்புக்கள் நடவடிக்கைகளை மேற்கொள்ள முன்வரவேண்டும் எனவும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

திடீரென அதிகரித்த மழை மற்றும் வெள்ளத்தால் தாம் உடனடியாக தமது சிறுபிள்ளைகள் மற்றும் பெண்களுக்கு வேண்டிய அத்தியாவசியப் பொருள்களைக் கூட எடுத்து வர முடியாத நிலைமை ஏற்பட்டதாகவும் இதன் காரணமாக இத்தகைய பொருள்களின் தேவை காணப்படுவதாகவும் முகாம்களில் தங்கியுள்ள மக்கள் தெரிவித்துள்ளார்கள்.

(க-86)

### குளங்கள் உடைப்பெடுக்காது தடுக்கும் பணிகள்

நெடுங்கேணி பிரதேச செயலகத்துக்குட்பட்ட பல குளங்கள் உடைக்கும் நிலையிலுள்ளதால் அதனைத் தடுக்கும் பணிகள் முழுவீச்சில் இடம்பெற்று வருவதாக நேற்றைய தகவல்கள் தெரிவித்தன.

கனகராயன்குளம் 13 அடி நீர்மட்டம் உயர்ந்துள்ளதுடன் அணைக்கட்டில் துவாரங்களும் காணப்படுவதால் குளத்திலிருந்து நீர் வெளியேறுமாயின் சகல கிராமங்களிற்குள்ளும் நீர் புகக் கூடிய வாய்ப்பிருப்பதனால் மக்களை விழிப்புடன் இருக்குமாறு வவுனியா வடக்கு பிரதேச செயலர் கே.பரந்தாமன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

துவாரங்களை அடைப்பதில் நெடுங்கேணி பொறியியலாளர் எஸ்.நவநேசன் தலைமையிலான குழுவும் பொதுமக்களும் இராணுவத்தினரும் ஈடுபட்டுள்ளனர்.

இவை போன்று நெடுங்கேணிக்குளம், குளவிசுட்டான்குளம், பரசங்குளம், சின்னப்பூவரசங்குளம் ஆகியனவற்றிலும் உடைப்புக்கள் ஏற்பட்டதால் அங்கும் சீர்செய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

கடும் மழையால் பெருக்கெடுத்த வெள்ளம் சில வீடுகளினுள்ளும் வீதியோரத்திலும் தேங்கிக் காணப்படுகின்றது. இதனை பைக்கோ இயந்திரத்தின் உதவியுடன் ஆற்றுடன் கலக்கவிடுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுவதாகவும் பிரதேச செயலர் அவர் மேலும் தெரிவித்தார். (க-422)

## மாந்தை கிழக்குப் பிரதேசத்தில் 250 குடும்பங்கள் இடம்பெயர்வு

துணுக்காய்,டிசெ.29

தொடர்மழை காரணமாக மாந்தை கிழக்குப் பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த குடும்பங்கள் இடம் பெயர்ந்துள்ளன.

மழை வெள்ளத்தால் மோசமாகப் பாதிக்கப்பட்ட நட்டாங்கண்டல், சிறாட்டிகுளம், உழுவைநரி, பனங்காமம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த 250 குடும்பங்கள் இடம்பெயர்ந்து நட்டாங்கண்டல் அ.த.க.பாடசாலை, சிறாட்டிகுளம் அ.த.க.பாடசாலை, பனங்காமம் பொது நோக்கு மண்டபம் மற்றும் உறவினர், நண்பர்களின் வீடுகளில் தங்கியுள்ளன.

அவர்களுக்கு உலர் உணவுகளை வழங்கும் ஏற்பாடுகளை முல்லைத்தீவு அரச அதிபர் மேற்கொண்டுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை இவர்களுக்கான சமைத்த உணவுகளையும், தறப்பாள்களையும் வழங்குவ்தற்கான ஏற்பாட்டில் மாந்தை கிழக்கு பிரதேச செயலர் ஈடுபட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(க-415)

## தபால் நிலையத்துக்கு நிரந்தரமான கட்டடம் அமைத்து உதவுங்கள்

### தபால் மா அதிபருக்கு ஜெயபுரத்திலிருந்து கடிதம்

அக்கராயன்,டிசெ.29

ஜெயபுரம் கிராமத்தில் இயங்கிவரும் பல்லவராயன்கட்டு தபால் நிலையத்துக்கு நிரந்தரமான ஒரு கட்டடத்தை அமைத்து வழங்குமாறு ஜெயபுரம் கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் தபால் மா அதிபருக்கு எழுதிய கடிதத்தில் கேட்டுள்ளனர்.

பல்லவராயன்கட்டுக் கிராமம் முற்றாக உவரடைந்ததால் அங்கு வாழ்ந்த மக்கள் வெளியேறிய நிலையில் ஜெயபுரத்தில் பல்லவராயன்கட்டு தபால் நிலையம் இயங்கி வருகின்றது.

ஆனால் இதற்கு நிரந்தரமானதொரு கட்டடம் அமைக்கப்படாததால் இங்கு பணியாற்றுபவர்களும், பொதுமக்களும் பாதிப்புக்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இங்கு பூநகரிப் பிரதேச செயலகத்தின் உப பணிமனை, பிரதேச சபையின் உபபணிமனை, பொலிஸ் நிலையம், கைத்தொழிற் பயிற்சிப் பட்டறை, கடற்றொழில் சமாசம், கப்பல் கட்டும் தொழிற்சாலை, மகாவித்தியாலயம், கிராம அமைப்புக்களான கமக்கார அமைப்பு, முதியோர் சங்கம், மரண ஆதார சங்கம், கிராம அபிவிருத்திச் சங்கம், மாதர் சங்கம், ஜெயபுரம் வடக்கு, ஜெயபுரம் தெற்கு, கிராம அலுவலர் அலுவலகங்கள் என்பன இயங்கி வருகின்றன.

தபாலகத்துக்கென அரச காணியும் ஒதுக்கப்பட்டுள்ளது. எனவே ஜெயபுரம் தபால் நிலையத்துக்கு நிரந்தரமான ஒரு கட்டடத்தை அமைத்துத் தருமாறு அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-18)

### கிளிநொச்சி வீட்டுத்தோட்ட போட்டி முடிவுகள்

கிளிநொச்சி விவசாயத் திணைக்களம் நடத்திய சிறந்த வீட்டுத் தோட்டச் செய்கையாளர்களுக்கான போட்டியில் வெற்றியீட்டியவர்களின் பெயர் விவரங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

**கிராம வீட்டுத்தோட்டம்**

செல்வி.சண்முகம் நிர்மலா, நாதன் குடியிருப்பு புன்னை நீராவி, சிவப்பிரகாசம் விவேகானந்தன், நாதன் குடியிருப்பு புன்னை நீராவி, இராமச்சந்திரன் ரேணுகா செல்வா நகர் கிளிநொச்சி,

**பாடசாலை வீட்டுத்தோட்டம்**

பூநகரி நல்லூர் மகா வித்தியாலயம்.

**மாணவர்களுக்கான வீட்டுத் தோட்டம்**

செல்வராசா சஞ்சீவன், நிச்சாட்கமம் திருவையாறு, குகானந்தன் ரூபினி செல்வா நகர், நிமலநாதன் கஜேந்திரன்நாதன் குடியிருப்பு புன்னை நீராவி.

**அலுவலக வீட்டுத் தோட்டம்**

கால்நடை வைத்திய நிலையம், கண்டாவளை, விவசாய விரிவாக்க நிலையம், முரசுமோட்டை, கால்நடை வைத்திய அலுவலகம், கணேசபுரம் கிளிநொச்சி.

**அலுவலர் வீட்டுத்தோட்டம்**

வைரவநாதன் முருகமூர்த்தி, ஞானிமடம் பூநகரி, கோணமலைசேகர் உழவனூர் புன்னை நீராவி, கோடீஸ்வரன் மதுமிதா, புன்னை நீராவி. இவர்களுக்கு பணப் பரிசுகள், சான்றிதழ்கள், விவசாய உபகரணங்கள் என்பன வழங்கப்பட்டன. (க-18)

## ஆசிரியர் விடுதிகள் நான்கும் ஆசிரியர்களின் பயன்பாட்டில்

### பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர் தெரிவிப்பு

அக்கராயன்,டிசெ.29

அக்கராயன் மகாவித்தியாலயத்தில் அமைக்கப்பட்டுள்ள நான்கு ஆசிரியர்களுக்கான விடுதிகளையும் ஆசிரியர்கள் பயன்படுத்துவதாக பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் செயலாளர் எஸ்.பாஸ்கரனும் பாடசாலை அதிபர் க.மதுரநாயகமும் தெரிவித்துள்ளனர்.

மேலும் தற்போது பாடசாலைக்கான விடுமுறை காலம் என்பதால் இந்த விடுதிகள் காலியாகவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இங்கு இரு விடுதிகளை ஆண், பெண் ஆசிரியர்கள் பயன்படுத்துகின்றனர். இரு விடுதிகளை திருமணமான ஆசிரியர்கள் குடும்பமாகத் தங்குவதற்குப் பயன்படுத்துகின்றனர்.

இவற்றுள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் உதவியுடன் மேலும் இரண்டு விடுதிகள் அண்மையில் தான் புனரமைக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டன.

தற்போது விடுமுறை காலம் தொடர்வதாலும், மழைகாலம் என்பதாலும் விடுதிகளைச் சுற்றிவர புல் பூண்டு செடிகள் காணப்படுகின்றன.

பாடசாலை இயங்கத் தொடங்கியதும் இவை யாவும் அழிக்கப்பட்டு சுத்தம் செய்யப்படுகின்றமை வழமை எனவும் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர் மேலும் தெரிவித்துள்ளனர்.

(க-18)



வவுனியா கள்ளிக்குளம் பகுதியில் அமைக்கப்பட்ட பொதுநோக்கு மண்டபத்தை திறந்து வைத்ததன் [illegible] நிறுவனத்தின் இலங்கைக்கான பிரதிநிதியான [illegible] மற்றும் வவுனியா அரச அதிபர் பந்துல ஹரிஸ்சந்திர ஆகியோர் [illegible] நாட்டி வைக்கின்றனர். (க-400)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுவாமியே சரணம் ஐயப்பா



ஸ்ரீ சா கோபாலனுஜ ஐயப்ப பக்தசபை
(மதுரை)

அகில இலங்கை யாழ். மாவட்டம் தாவடி 18
ஆம் படி குருசாமி அ. இந்துதாசன்
யாத்திரை குழு 30 ஆவது மகரஜோதி
மண்டல பூர்த்தி பெருவிழா



**சகல பக்த, ஐயப்ப அடியார்களே!**

**நிகழும் நந்தன வருடம் மார்கழி மாதம் சனிக்கிழமை (29.12.2012) முற்பகல் 8.00 மணியளவில் தாவடி தெற்கு கொக்குவிலில் உள்ள குருசாமியின் இல்லத்தில் மகரஜோதி மண்டல பெருவிழா நடத்த திருவருள் கூடி உள்ளதால் அனைத்து ஐயப்ப பத்தர்கள், சாமிமார்கள், அடியார்கள் வருகை தந்து அபிசேகம், கூட்டு பஜனை, கணபதி ஹோமம் படிபூஜை, விமர்சையான கருப்பன் பூஜைகளில் கலந்து கொண்டு ஐயனின் திருவருளை பெற்றுய்யும் வண்ணம் வேண்டுவதுடன் சக்திபூஜை (அன்னதானம்) நிகழ்விலும் கலந்து சிறப்பிக்க அழைக்கின்றோம்.**

அனைவரும் வருக ஐயனின் அருள் பெறுக!

மானிப்பாய் வீதி,
தாவடி தெற்கு,
கொக்குவில். (27343)(3.14)

தாவடி 18ம் படி குருசாமி
அ. இந்துதாசன் யாத்திரைகுழு, இ.பிரசன்னா சுவாமிகள்
(0772601472, 776282671 கதிரைமலை சுவாமிகள்)

## சாவகச்சேரி, ஆதார வைத்தியசாலை சிற்றுண்டி நிலையம், துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலையம் என்பன நடத்துவதற்கான கேள்விப் பத்திரம் கோரல் - 2013

மேற்படி விடயம் சார்பாக சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை அபிவிருத்திச் சபை விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.


* கேள்விப் பத்திர விண்ணப்பங்களை சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை நீரிழிவுச் சிகிச்சைப் பிரிவில் ரூபா 250/= செலுத்திப் பெற்றுக்கொள்ள முடியும்.
* கேள்விப்பத்திர விண்ணப்பங்களை சரியான முறையில் பூர்த்தி செய்து எதிர்வரும் 2013.01.10 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன்னதாக செயலாளர், ஆதாரவைத்தியசாலை அபிவிருத்திச்சபை, சாவகச்சேரி என்ற விலாசத்துக்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைக்கவும்.
* தீர்மானம் எடுக்கும் முடிவு ஆதார வைத்தியசாலை அபிவிருத்திச் சபைக்கு உரியதாகும்.

நிர்வாகசபை
ஆதாரவைத்தியசாலை அபிவிருத்திச் சபை
சாவகச்சேரி.

(சி/2855)(3.14)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

பிறப்பு
17 * 08 * 1940



இறப்பு
02 * 11 * 2012

## அமரர் பெரியதம்பி சண்முகராசா
### (ஓய்வுபெற்ற தபாலதிபர்)

**அன்பின் திருவுருவமே ஆருயிர் தெய்வமே!
பாரினின் எமைப் பரிதவிக்கவிட்டு பாதியில் சென்றதேனோ
நாள்கள் முப்பத்தொன்று ஆனாலும் ஆறாது எம்துயர்- நின்
ஆன்ம சாந்திக்காக ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்**

கடந்த (02.11.2012) அன்று இறைபதமடைந்த எமது குடும்ப விளக்கு பெ.சண்முகராசா அவர்களின் பிரிவுத்துயரில் பலவழிகளிலும் கலந்து கொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதுடன், நாளை (30.12.2012) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் இடம்பெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கனேஸ்வரம், அளவெட்டி வடக்கு,
அளவெட்டி (கருவேப்பிலை
பாடசாலை அருகில்) (27342)(9.14) **குடும்பத்தினர்.**

## வலிகாமம் மேற்கு பிரதேச சபை
# பொது அறிவித்தல் - 2013

**01. படவரைஞராகப் பதிவு செய்தல்**

2013ஆம் ஆண்டு படவரைஞராகப் பதிவு செய்வதற்கு விரும்புவோரும் ஏற்கனவே எமது சபையில் பதிவு செய்துள்ளவர்களும் 2013 ஆம் ஆண்டு ஜனவரி 31ஆம் திகதிக்கு முன்னர் தமது பதிவுகளை மேற்கொள்ளவும், புதுப்பித்துக்கொள்ளவும் தலைமை அலுவலகத்துடன் அலுவலக நேரத்தில் தொடர்பு கொள்ளவும்.

**02. வியாபார உரிம அனுமதிப்பத்திரம் - 2013**

இப்பிரதேச எல்லைக்குள் வியாபாரம் செய்வோர் மற்றும் எமது பிரதேசத்திற்குப் பொருள்களை விநியோகிப்போர் உரிய விண்ணப்பப்படிவத்தை சங்கானை, சுழிபுரம், வட்டுக்கோட்டை, அராலி ஆகிய உப அலுவலகங்களில் 2013 ஆம் ஆண்டு ஜனவரி 20 ஆம் திகதிக்குள் பெற்று அதனைப் பூரணப்படுத்தி அவ்அவ் உப அலுவலகங்களில் சமர்ப்பித்து உரிய கட்டணங்களை 31.03.2013ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தி வியாபார அனுமதிப் பத்திரத்தை (Trade License) பெற்றுக்கொள்ளவும். 31.03.2013 ஆம் திகதிக்கு முன்னர் வியாபார அனுமதிப்பத்திரத்தை பெற்றுக்கொள்ளாதவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**03. ஆதன வரி அறிவித்தல் - 2013**

5.1 1987ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க பிரதேச சபைகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் உரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் படி 2012ஆம் ஆண்டு அறவிடப்பட்ட ஆதன வரி வீதத்தின் பிரகாரம் 2013ஆம் ஆண்டிற்கான ஆதன வரி அறவீடு மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய 2013ஆம் ஆண்டிற்கான ஆதன வரியை 31.01.2013ஆம் திகதிக்கு முன்னர் செலுத்துவோர் ஆண்டுக்கான மொத்த வரியில் 10% கழிவினைப் பெற்றுக் கொள்ள முடியும் என்பதோடு ஒவ்வொரு காலாண்டிற்குமுரிய வரியை அந்தந்த கந்தாயத்தின் முதல் மாத முடிவிற்குள் செலுத்துவோருக்கு காலாண்டு வரியில் 5% கழிவு வழங்கப்படும் என்பதையும் அறியத்தருகின்றேன். குறிப்பிட்ட திகதிக்குள் ஆதன வரியை செலுத்த தவறின் 15% விறாந்துக் கட்டணம் ஆதன வரியுடன் சேர்த்து அறவிடப்படும். எனவே குறித்த ஆதன வரிகளை 31.01.2013 ஆம் திகதிக்கு முன் அந்தந்த உப அலுவலகங்களில் முழுமையாகச் செலுத்தி வரிக் கழிவுகளைப் பெற்று ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

5.2 மேலும் எமது சபை எல்லைக்குள் ஆதனங்களைக் கொள்வனவு செய்பவர்களும் ஏற்கனவே கொள்வனவு செய்து பெயர் மாற்றத்தினை மேற்கொள்ளாதவர்களும் எமது உப அலுவலகங்களுடன் தொடர்பு கொண்டு பெயர்மாற்றத்தினை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

**04. சூழல் பாதுகாப்பு உரிமம் (EPL - 2013)**

இப்பிரதேச சபையின் நிர்வாக எல்லைக்குள் சிறிய மற்றும் நடுத்தர வியாபார / தொழில் முயற்சிகளில் ஈடுபடும் சகலரும் தலைமை அலுவலகத்துடன் தொடர்புகொண்டு சூழல் பாதுகாப்பு உரிமத்தை 31.01.2013 இற்கு முன்னர் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். அவ்வாறு சூழல் பாதுகாப்பு உரிமத்தினைப் பெறத் தவறுபவர்கள் 2013ஆம் ஆண்டு மேற்குறிப்பிட்ட வியாபார / தொழில் நடவடிக்கைகளில் ஈடுபட அனுமதிக்கப்பட மாட்டார்கள் என்பதையும் அறியத்தருகின்றேன்.

**05. துவிச்சக்கர வண்டி, மிருகங்களின் உரிமம்**

மேற்படி துவிச்சக்கர வண்டிகள், வளர்ப்பு நாய்கள் வைத்திருப்போர் 2013.03.31 ஆம் திகதிக்கு முன் அந்தந்த உப அலுவலகங்களில் உரிய கட்டணங்களைச் செலுத்தி 2013ஆம் ஆண்டிற்கான வாகன, மிருக உரிமங்களைப் பெற்றுக்கொள்ளவும்.

**06. வீடுகள், கட்டடங்கள், மதில்கள், மலசலகூடங்கள், குழாய்க்கிணறுகள், கிணறுகள் அமைத்தலும், புதுப்பித்தல் / திருத்த வேலைகள் செய்தலும்**

3.1 எமது நிர்வாகத்திற்குட்பட்ட பிரதேசத்தில் மேற்படி அமைப்பு வேலைகளை அனுமதியின்றி மேற்கொள்ளல் வீடமைப்பு நகர சீர்திருத்தக் கட்டளைச் சட்டம் பிரிவு - 268 இன் பிரகாரம் தண்டனைக்குரிய குற்றமாகும். எனவே உரிய விண்ணப்பப்பத்திரங்களை அந்தந்த உப அலுவலகங்களில் பெற்று சபையின் முன் அனுமதி பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். அவ்வாறு முன் அனுமதி பெறப்படாத கட்டடங்கள் யாவும் எதுவித நட்டஈடும் வழங்கப்படாது சபையினால் அகற்றப்படும்.

3.2 ஏற்கனவே அனுமதி பெற்று ஒருவருட காலத்தில் கட்டட வேலைகள் பூர்த்தியாகாத விடத்து அவ்விண்ணப்பதாரிகள் அனுமதியினைப் புதுப்பித்துக்கொள்வதோடு கட்டடத்தைப் பூர்த்தி செய்த விண்ணப்பதாரிகள் உரிய அமைவுச் சான்றிதழைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

3.3 அனுமதியற்ற கட்டடங்களுக்குப் பின்வருமாறு தண்டப்பணம் அறவீடு செய்யப்படும்.

| தொ. இல | அனுமதியற்று கட்டப்பட்ட கட்டட விவரம் | வதிவிடம் (குடியிருப்பு) ஒரு சதுர மீற்றருக்கு | வர்த்தக மற்றும் வேறு கட்டடங்கள் ஒரு சதுர மீற்றருக்கு |
|---|---|---|---|
| 01 | அத்திவார வேலை மட்டும் பூர்த்தி (தூண் பீட மட்டம்) | ரூபா 100.00 | ரூபா 250.00 |
| 02 | கூரை மட்டம் வரை (கூரை நீங்கலாக) | ரூபா 150.00 | ரூபா 500.00 |
| 03 | கூரை உட்பட நிர்மாணம் | ரூபா 200.00 | ரூபா 750.00 |
| 04 | நிர்மாணம் பூர்த்தி செய்யப்படல் | ரூபா 250.00 | ரூபா 1,000.00 |
| 05 | எல்லைச்சுவர் / அணைச்சுவர் நிறுவுதல் | ரூபா 200.00 | ரூபா 200.00 |
| 06 | தாழ்ந்த நிலங்கள் / நெற்காணிகளை மீட்டல் | ஒவ்வொரு 150 சதுர மீற்றருக்கும் ரூபா 2,500.00 | |
| 07 | தொலைத் தொடர்பு மற்றும் வானலை வாங்கிக் கோபுரங்களை நிறுவுதல் | உயரத்தில் ஒவ்வொரு 5 மீற்றருக்கும் ரூபா 10,000.00 | |

**07. வீதி ஒழுங்கைப் பேணல்**

சங்கானை நகர மையப்பகுதியில் அதிகரித்த போக்குவரத்து காரணமாக, விபத்துக்களைத் தவிர்த்துக் கொள்ளும் முகமாக வியாபார நிலையங்களிற்கு முன்னால் பொருள்களை வெளியே வைத்து விற்பனை செய்வது தடை செய்யப்பட்டுள்ளது. அவற்றை அனுசரித்து நடக்குமாறு வர்த்தக நிலைய உரிமையாளர்களிற்கு அறியத்தருகின்றேன்.

**08. விளம்பரங்களை அமைத்தல் / காட்சிப்படுத்தல்**

இப்பிரதேச சபையின் நிர்வாகப் பிரிவிலுள்ள பொது வீதிகளின் இரு மருங்கும் அத்துடன் வர்த்தக நிலையங்களின் முகப்புக்களிலும் பொருத்தப்படும் / காட்சிப்படுத்தப்படும் விளம்பரங்களை 31.01.2013ஆம் திகதிக்கு முன் உரிய கட்டணத்தைச் செலுத்தி சபையின் அனுமதியைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். இவ்வாறு அனுமதி பெறப்படாத முகவர்கள் / நிறுவனங்கள் / வர்த்தக நிலைய உரிமையாளர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு சகல விளம்பரங்களும் உரிய நிலையங்களிலிருந்து 01.02.2013ஆம் திகதிக்கு பின் அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனையும் அறியத்தருகின்றேன். கட்டண விவரம் பின்வருமாறு.

| தொ. இல | விவரம் | பிளாஸ்ரிக் (1சதுர அடி) | துணி (1சதுர அடி) |
|---|---|---|---|
| 01 | தனியார் வளவுகளில் நிர்மாணிக்கப்படும் அல்லது காட்சிக்கு வைக்கப்படும் பிரச்சார பலகைகள் | ரூபா 50.00 | ரூபா 25.00 |
| 02 | பிரதான பாதைக்கு தெரியக் கூடிய விதத்தில் உள்ள இடத்தைப் பயன்படுத்தி பிரதான பாதைக்கு அருகில் நிர்மாணிக்கப்படும் அல்லது காட்சிப்படுத்தப்படும் விளம்பரப் பலகைகள் | ரூபா 60.00 | ரூபா 30.00 |
| 03 | உள்ளூராட்சி மன்றங்களின் வளவுகளை பயன்படுத்திய வண்ணம் நிர்மாணிக்கப்படும் அல்லது காட்சிப்படுத்தப்படும் விளம்பரப் பலகைகள் | ரூபா 100.00 | ரூபா 50.00 |

**09. பொது இடங்களில் கழிவுகள் போடுதல் தொடர்பான அறிவித்தல்**

வலிகாமம் மேற்கு பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில் கழிவுப் பொருள்களை அனுமதியின்றி கொண்டு செல்லல், கொட்டுதல் ஆகியன பொது சுகாதாரத்தைக் கருத்திற் கொண்டு தடை செய்யப்பட்டுள்ளது. தவறின் பிரதேச சபை கட்டளைச்சட்டம் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்புச் சட்டம் போன்றவற்றின் பிரகாரம் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

**10. தரகர் முறை நீக்கல்**

எமது பிரதேச சபை எல்லைக்குட்பட்ட சந்தைகளில் தரகர் மூலமான நடைமுறை முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. அவற்றை அனுசரித்து நடக்குமாறு சந்தைக் குத்தகையாளர் கேட்கப்படுகின்றனர்.

**திருமதி.நா.ஐங்கரன் தவிசாளர்,**
**வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம்.**

(C/5104)(2.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



# கேள்விக்குரியதாக மாறும் பெண்களின் பாலியல் பாதுகாப்பு...!

பெண் அடிமைத்தனம் கீழைத்தேய நாடுகளில் நிலவிய ஒரு காலம் முன்னர் இருந்தது உண்மையே. ஆனால் 'ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே' என்ற பாரதியாரின் கனவு இப்போது நிஜமாகி பல தசாப்தங்கள் கடந்து போயின. ஆண்களுக்கு ஒருபடி குறைவானவர்கள் பெண்கள் என்ற நிலை உடைத்தெறியப்பட்டு ஆண்டுகள் பல கடந்தேகி விட்டன.

அந்த வகையில் வாழ்வியலில், சமூகத்துறைகளில் ஆண்களுக்கு நிகராக, சமமாக பெண்களும் பங்கெடுக்கும் நிலைமை இப்போது வேரூன்றி விட்டது. வாழ்க்கையின் சகல துறைகளிலும் பங்கெடுத்துத் தமது திறனை வெளிப்படுத்திச் சாதனை புரியும் நிலைவரை பெண்ணியம் உயர்வு கண்டுள்ளது.

இந்த முன்னேற்றம், வாழ்வியலில் மட்டுமன்றி, சமூக, அரசியல், பொருளாதார, விஞ்ஞானத் துறைகளிலும் சாதகமான பெரும் பயன்களை விளைவித்துள்ளது; மேலும் நிறைந்த மாற்றங்களை உற்பவித்துள்ளது.

ஆயினும் பெண்களுக்குக் கிட்டிய இச் சுதந்திரம் மற்றொரு புறத்தில் அவர்களுக்கு எதிரான வன்முறைகள் என்ற சாபக்கேட்டை அனைத்துலக மட்டத்திலும் ஏற்படுத்தி உள்ளது. இப்போது அவை தடுப்பார் இன்றி எகிறிச் செல்வது கவலைக்குரியதும் கண்டனத்துக்குரியதுமாகும்.

பெண்களுக்கு எதிரான வன்முறைகள் அனைத்துலக மட்டத்தில் வேகமாகப் பரவுகின்றன. அதனால் சமூக மட்டத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்தவும் துஷ்பிரயோகங்களைத் தடுக்கும் பொருட்டும் நவம்பர் 25ஆம் திகதி முதல் டிசெம்பர் 10ஆம் திகதி வரையான இரு வாரங்கள் பெண் வன்முறைகளுக்கு எதிரான விழிப்புணர்வுக் காலமாகக் கடைப்பிடிக்கப்படுகிறது.

இத்தகைய நிலையிலும் கூட இந்தியத் தலைநகர் டில்லியில் மருத்துவக் கல்லூரி மாணவி ஒருவர் ஆறுபேர் கொண்ட கும்பலினால் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டார். அந்தக் கொடூரம் இந்தியாவில் பெரும் பரபரப்பை ஏற்படுத்திவரும் நிலையில், கடந்த தீபாவளி தினத்தன்று பஞ்சாப்பில் இதேபோன்ற ஒரு சம்பவத்தில் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்ட பெண் ஒருவர் நீதி கிடைக்காத நிலையில் தற்கொலை செய்துகொண்டது அனைத்துலக அரங்கில் இந்தியாவுக்குப் பெரும் அபகீர்த்தியை ஏற்படுத்தி உள்ளது.

அவற்றையடுத்து பெண்களின் பாதுகாப்புக் கருதி இத்தகைய குற்றங்களுக்குக் கடுமையான தண்டனைகள் வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுவருகின்றன. ஆனால், சட்டங்களைக் கடுமையாக்குவது மட்டும் பிரச்சினைக்குத் தீர்வாகாது. இதற்கான அடிப்படைக் காரணிகள் எவை எனக் கண்டறியப்பட்டு அவற்றை நிவர்த்தி செய்ய நடைவடிக்கை மேற்கொள்வதே இன்றைய தேவை.

டில்லியில் இடம்பெற்ற சம்பவம் தொடர்பாக ஓய்வுபெற்ற நீதியரசர் உஷா மெஹ்ரா தலைமையில் ஒரு விசாரணைக்குழுவை அமைக்கப் பிரதமர் மன்மோகன்சிங் உத்தரவிட்டுள்ளார். எதிர்காலத்தில் இத்தகைய சம்பவங்களைத் தடுப்பதற்கான பரிந்துரைகளைச் சமர்ப்பிக்குமாறும் இந்த ஆணைக்குழு பணிக்கப்பட்டுள்ளது. பெண் ஒருவர், ஆளும் காங்கிரஸ் தலைவியாக இருக்கும் இந்தியாவுக்கு இது ஒரு சாபக்கேடாகும்.

மேற்கூறிய வரிசையில் நத்தார் தினத்தன்று தமிழ்நாட்டின் கடலூரில் ஒரு பெண்ணுடன் துணைக்கு வந்த ஆணைப் பிடித்துவைத்துக் கொண்டு, பத்துப்பேர் அடங்கிய கும்பல் ஒன்று அப்பெண்ணைப் பாலியல் வன்முறைக்குட்படுத்தியது. பெண் ஒருவர் முதலமைச்சராக இருக்கும் தமிழ்நாட்டிலேயே இத்தகைய சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கடந்த வருடம் மொத்தம் 2 லட்சத்து 56 ஆயிரத்து 329 குற்றச் செயல்கள் இந்தியாவில் பதிவாகின. அவற்றில் 2 லட்சத்து 28 ஆயிரத்து 650 குற்றங்கள் பெண்களுக்கு எதிராகப் புரியப்பட்டவை. பல பெண்கள் வெட்கம் காரணமாக இவை குறித்து முறையிடுவதில்லை. ஆகையால் இந்த எண்ணிக்கை இவற்றைவிட அதிகம் என்று கொள்ளலாம்.

இலங்கையிலும் பெண்கள் தமது தொழிலிடங்களில் பல வகைப்பட்ட வேண்டப்படாத நெருக்குதல்களுக்கும் வன்முறைகளுக்கும் ஆளாகுகின்றனர். அதனால் தமக்கேற்படும் பாதிப்புகளையும் அசெளகரியங்களையும் அவர்களில் பலர் வெளிக்கொணர அச்சம் மற்றும் வெட்கம் காரணமாக தயங்குவதால் அத்தகைய சம்பவங்கள் தடுப்பார் இன்றிப் பெருகிவருகின்றன.

போர்க்காலத்திலும் தமிழ் மக்கள் தமக்குரிய சமூகப் பெறுமானங்களையும் இன தனித்துவங்களையும் குடும்ப வாழ்விலும் பொது வாழ்விலும் வழுவின்றிக் கடைப்பிடித்து வந்துள்ளனர்.

ஆனால் போருக்குப் பின்னரான காலகட்டத்தில் தமிழ் மக்களில் ஒரு சாரார் ஒழுக்கவியல் மற்றும் வாழ்வியல் சார்ந்த கோட்பாடுகளைத் தூர வீசி எறிந்து சமூக விரோதச் செயல்களில் ஈடுபட்டு வருவது பெருக்கல் வாய்ப்பாடாகிவிட்டது.

இன்று எமது தமிழ்ச் சமூகத்தில் முன்னெப்போதும் இல்லாதவாறு சிறுவர் சிறுமியர் துஷ்பிரயோகங்கள், பெண்கள் மீதான வன்முறைகள் மேலெழுந்து வருகின்றன.

இணையத்தள பாவனை அதிகரிப்பும் இத்தகைய சம்பவங்களுக்குத் தீனி போடுகின்றன. இணையத்தளங்களில் கூகுள் வலைத் தளத்தில் 'செக்ஸ்' என்னும் 'லேமலை' அதிகம் தேடும் நாடுகளில் இலங்கை முதலிடத்தையும், இந்தியா இரண்டாம் இடத்தையும் வகிக்கின்றன என்று ஓர் ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது.

சமூகச் சீரழிவுகளை ஏற்படுத்தும் வலைத் தளங்கள் குறித்து இலங்கை- இந்திய அரசுகள் கூடுதல் கவனம் செலுத்துவது அவசியம். சமூகத்தில் பாலியல் வல்லுறவுகள் அதிகரிப்பதற்கு இவையும் ஒரு காரணமாக அமைகின்றன.

# வடக்கின் கல்வி நிலையை முன்னேற்ற அரசசாரா நிறுவனங்கள் உதவ வேண்டும்

## யாழ்.வர்த்தகர் சங்கத் தலைவர் கோரிக்கை

யாழ்ப்பாணம், டிசெ. 29

பாடசாலைகளில் இருந்து இடைவிலகும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரிப்பில் வடமாகாணம் தற்போது முதலிடத்தில் உள்ளது. அதனால் எதிர்காலத்தில் வடமாகாணத்தின் கல்வி மிகவும் பின்தங்கிய நிலையில் இருப்பதற்கான வாய்ப்புகள் அதிகரித்துள்ளன.

எனவே வடக்கின் கல்வி நிலையை முன்னேற்றுவதற்கு அரசசார்பற்ற நிறுவனங்கள் உதவ வேண்டும்.

யாழ்.வர்த்தகர் சங்கத்தின் தலைவர் ஆர்.ஜெயசேகரம் இவ்வாறு தெரிவித்தார்.

யாழ்.மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத்தின் 22 ஆவது ஆண்டுப் பொதுக் கூட்டம் நேற்று இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்தும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வடமாகாணத்தில் போர்க்காலச் சூழலிலும், போர் நிறைவடைந்த பின்னரும் அரசசார்பற்ற நிறுவனங்கள் தம்மால் முடிந்தளவு பணிகளை மேற்கொண்டன. குறிப்பாக சமூகத்துக்குரிய தேவைகளை உணர்ந்து அவர்களின் வாழ்வாதாரத் தேவைகளை அடிப்படையாக வைத்துப் பணிகளை மேற்கொண்டன.

வடமாகாணத்தில் தற்போதைய பெரிய பிரச்சினையாக எழுந்திருப்பது கல்வி நடவடிக்கைகள். குறிப்பாக பாடசாலைகளில் இருந்து இடைவிலகியுள்ள மாணவர்களின் எண்ணிக்கை வடமாகாணத்தில் அதிகரித்துள்ளது.

போரால் ஏற்பட்ட மனப்பாதிப்புகள், குடும்ப வறுமை, சொந்த இடங்களில் மீளக் குடியமர முடியாமை போன்ற பிரச்சினைகளால் பாடசாலைகளில் இருந்து இடைவிலகி உள்ளனர்.

எனவே, தற்போதைய பிரச்சினைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து அரசசார்பற்ற நிறுவனங்கள் தமது செயற்றிட்டங்களை மேற்கொள்ள வேண்டும்.

இடைவிலகும் மாணவர்களின் குடும்ப நிலைமை, அவர்களின் பிரச்சினைகளை இனங்கண்டு அதற்கான மாற்று நடவடிக்கைகளை மேற்கொண்டால் இந்த மாணவர்களுக்கான கல்வி வாய்ப்பைப் பெற்றுக் கொடுப்பதுடன் வடமாகாணத்தின் கல்வித் தரத்தையும் நிலைநிறுத்த முடியும்.-என்றார்.

யாழ்.மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் நிறுவனங்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

(ம-14)

## சீமெந்துக் கூட்டுத்தாபனத்துக்கு

# ஒரு கோடி 50 லட்சம் ரூபா 7 மாதங்களில் நஷ்டம்

கொழும்பு,டிசெ.29

இலங்கை சிமெந்து கூட்டுத்தாபனம் இந்த ஆண்டின் முதல் ஏழு மாத காலத்துள் சுமார் ஒரு கோடி 50 லட்சம் ரூபா வரையில் நஷ்டமடைந்துள்ளது என்று அரச வளங்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் இந்த ஆண்டுக்கான முன்னேற்ற அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

சிமெந்தின் விலையைக் கட்டுப் படுத்தி நுகர்வோரைப் பாதுகாப்பது தொடர்பாக வர்த்தகச் சந்தையில் நிலவும் விலையை விடக் குறைந்த விலையில் சிமெந்தை விற்பனை செய்வதே இந்த நஷ்டத்துக்குக் காரணம் எனவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சிமெந்துக் கூட்டுத்தாபனம் மற்றும் இலங்கை சிமெந்து நிறுவனம் என்பவை பாகிஸ்தானிலிருந்து சொரியாக சிமெந்தை இறக்குமதி செய்து லங்கா சிமெந்து மற்றும் காங்கேசன் சிமெந்து என்ற வர்த்தகப் பெயரில் சந்தையில் நிலவும் விலையை விடக் குறைந்த விலையிலேயே சந்தைப் படுத்துவதாகவும் அந்த அறிக்கை தெரிவிக்கிறது.

தனியார் நிறுவனங்கள் மூலம் சந்தைப்படுத்தப்படும் சிமெந்து மூடை ஒன்றின் விலை 930 ரூபா வரையில் உள்ளதோடு இலங்கை சிமெந்துக் கூட்டுத்தாபனம் சிமெந்து மூடை ஒன்றை 855 ரூபாவுக்கு வர்த்தகச் சந்தைக்கு வழங்குவதாகவும் அறிக்கை குறிப்பிடுகிறது.

சிமெந்துக் கூட்டுத்தாபனத்தின் கொழும்புக் கிளையில் ஒரே தடவையில் 100 சிமெந்து மூடைகளுக்கு மேற்பட்டு கொள்வனவு செய்யும் நுகர்வோருக்கு ஒரு மூடை சிமெந்து 790 ரூபா வீதம் வழங்கப்படுவதாகவும் மேற்படி அறிக்கை சுட்டிக் காட்டியுள்ளது.

சந்தையில் சிமெந்தின் விலையைக் கட்டுப்படுத்தி ஒரு தலைப்பட்சமாக சிமெந்தின் விலையை அதிகரிப்பதற்கு இடமளிக்காத தேசியத் தேவை இந்த இரு நிறுவனங்கள் மூலமாக நிறைவேற்றப்படுவதாகவும் அரச வளங்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சு தெரிவிக்கிறது.

இதனிடையே சிமெந்துக் கூட்டுத்தாபனம் கடந்த ஆண்டில் 26 லட்சம் ரூபாவையும் 2010 ஆம் ஆண்டில் 50 லட்சம் ரூபாவையும் இலாபமாகப் பெற்றுள்ளதாகவும் அமைச்சு தெரிவிக்கிறது.

(ம-22)

# பல்கலைக்கழக நகரத் திட்டம் இலங்கையிலும் அறிமுகமாகிறது

கொழும்பு,டிசெ.29

பல்கலைக்கழக நகரங்கள் திட்டத்தை இலங்கையிலும் அறிமுகப்படுத்த அரசு தீர்மானித்துள்ளது.

அதற்கமைய, அடுத்த ஆண்டில் ஸ்ரீஜயவர்த்தனபுர, மொறட்டுவ மற்றும் றுகுணு பல்கலைக்கழகங்களைச் சூழவுள்ள பிரதேசங்கள் சகல வசதிகளையும் உள்ளடக்கும் முழுமையான நகரங்களாக மாற்றப்படவுள்ளன என்று உயர்கல்வி அமைச்சு தெரிவிக்கிறது.

இது தொடர்பாக ஆயிரத்து 420 லட்சம் ரூபா செலவாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது எனவும் கூறப்படுகிறது.

இவ்விதம் நிர்மாணிக்கப்படும் பல்கலைக்கழக நகரொன்றில் நூலகம் ஒன்றும் வீட்டுத் திட்டம் ஒன்றும் வர்த்தக நிலையங்களும் அடங்கும். கட்டடத் தொடர்கள், விளையாட்டு மைதானம், நிதிநிறுவனங்கள், சிறுவர் பூங்காக்கள் மற்றும் ஏனைய பல்வேறு வசதிகள் ஏற்படுத்தப்படவுள்ளன. அத்துடன் பல்கலைக்கழக மாணவர்களுக்கு போன்றே பொதுமக்களுக்கும் கூட அந்த வசதிகளைப் பெற்று அனுபவிப்பதற்கான வாய்ப்பு கிடைக்கும் என்றும் கூறப்பட்டது.

(ம-22)

# வடக்கின் சகல பகுதிகளுக்கும் மின்சாரம் வழங்க புதிய திட்டம்

யாழ்ப்பாணம், டிசெ. 29

வடமாகாணத்தில் சகல பிரதேசங்களுக்கும் முழுமையான மின்சாரம் வழங்கும் வகையில் 100 வீதத் திட்டம் ஒன்று மின்சார சபையால் நடைமுறைபடுத்தப்படவுள்ளது.

இந்தத் தகவலைத் தெரிவித்தார் கிளிநொச்சிப் பிராந்திய மின்சாரசபை பிரதம மின் பொறியியலாளர் எஸ்.பிரபாகரன்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தற்போது வடமாகாணத்தில் வடக்கின் வசந்தத்தின் மூலம் மின் இணைப்புகள் வழங்கப்படுகின்றன. இதன்மூலம் சகல பகுதிகளுக்கும் மின்சாரம் வழங்க முடியாத நிலை காணப்படுகின்றது.

இதனால் வடமாகாணத்திலுள்ள சகல பிரதேசங்களுக்கும் முழுமையான மின்சாரம் வழங்குவதற்கான திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டுச் சம்பந்தப்பட்டவர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. அதற்கான அனுமதி கிடைத்ததும் அந்தத் திட்டம் நடைமுறைபடுத்தப்படும்.

அவ்வாறு வடக்கின் வசந்தத்தின் மூலம் மின்சாரம் வழங்கப்படாத சகல பகுதிகளுக்கும் மின்சாரம் வழங்கப்படும்- என்றார்.

(த-400)

# கோப்பாய் பகுதியில் புதிய மீன் சந்தை

யாழ்ப்பாணம், டிசெ. 29

கோப்பாய் பிரதேசத்தில் புதிதாக மீன் சந்தை ஒன்றை அமைப்பதற்கு வலி.கிழக்குப் பிரதேச சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்தப் பிரதேசத்தில் மீன் சந்தை ஒன்று இல்லாமையால் மீன் வியாபாரிகள் வீதி ஓரங்களில் மீனை வைத்து விற்பனை செய்து வருவதால் வீதியில் பயணம் செய்யும் மக்கள் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

குறிப்பாகக் கோப்பாய் கிருஷ்ணர் கோவில் சந்திக்கு அருகில் மிகைக் கட்டான் வேம்படி பகுதியில் வீதியோரத்தில் வைத்து வியாபாரிகள் மீனை விற்பனை செய்து வருகின்றனர்.

இதனை அடுத்து வலி.கிழக்கு பிரதேச சபை கோப்பாய் சந்திக்கு அருகில் புதிதாக மீன் சந்தை ஒன்றை அமைக்கத் தீர்மானித்துள்ளது.

(த-17)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மக்கள் பாவனைக்கு விடப்படாத மயானம்

வவுனியா,டிசெ.28

வவுனியா பூந்தோட்டம் மயானத்தில் அமைக்கப்பட்ட சடலங்களை மின்சாரத்தில் எரியூட்டும் மயானம் பெருமெடுப்பில் திறந்து வைக்கப்பட்ட போதும் இதுவரை மக்களின் பாவனைக்குத் திறந்து விடப்படவில்லை என வவுனியா மாவட்டப் பொது அமைப்புக்கள் விசனம் தெரிவித்துள்ளன.

வவுனியா நகர சபையால் வவுனியா பூந்தோட்டத்தில் பல மில்லியன் ரூபா நிதியில் சடலங்களை மின்சாரத்தில் எரியூட்டும் மயானம் நகரசபை நிர்வாகத்தால் திறந்து வைக்கப்பட்டது. அது இதுவரை மக்களின் பயன்பாட்டுக்கென வழங்கப் படவில்லை.

இது தொடர்பாக அண்மையில் வவுனியா நகர சபை மண்டபத்தில் இடம்பெற்ற பொது அமைப்புக்களுடனான சந்திப்பின் போது கேள்வி எழுப்பப்பட்டதுடன் கடும் விசனமும் தெரிவிக்கப்பட்டது.


இந்த மயானத்தில் மின்சாரத்தில் சடலங்களை எரியூட்டுவதற்கான தொழில்நுட்ப வல்லுநர்கள் இன்மையால் அதனைப் பாவனைக்கு விடமுடியாத நிலை உள்ளது. இதற்கென கொழும்பு மாநகர சபையுடன் தொடர்பு கொண்டுள்ளதோடு கொழும்பிலுள்ள மலர்சாலை நிர்வாகத்துடன் தொடர்பு கொண்டு தொழில்நுட்ப வல்லுநர்களைப் பெற்றுக் கொள்வதற்கு முயற்சி மேற்கொண்டு வருவதாக வவுனியா நகரசபை பதில் தலைவர் எம்.எம்.ரதன் தெரிவித்தார். (த-400)

# பெரும்போக நெற்செய்கை மன்னாரில் அழிவுறும் நிலை

## வயல்களை மூடி வெள்ளம்

மன்னார், டிசெ.29

மன்னார் மாவட்டத்தில் பெய்து வரும் கடும் மழை காரணமாகவும், வெள்ளப் பெருக்கினாலும் தற்போது ஆயிரக்கணக்கான ஏக்கர் பெரும் போக நெற்பயிர்ச் செய்கை அழிவடையும் நிலையில் உள்ளதாக விவசாயிகள் அச்சம் தெரிவித்துள்ளனர்.



மல்வத்து ஓயா பெருக்கெடுத்துள்ள மன்னார் மாவட்டம் நானாட்டான் பிரதேச செயலர் பிரிவு மற்றும் மடு உதவி அரச அதிபர் பிரிவு ஆகியவற்றில் உள்ள பல கிராமங்கள் தற்போது வெள்ள நீரில் மூழ்கியுள்ளன.

குறித்த பகுதிகளில் இம்முறை அதிகளவில் பெரும்போக நெற்பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்டன. அவை தற்போது வெள்ள நீரில் மூழ்கியுள்ளன.

நெற்பயிர்ச் செய்கை அழிவடையும் அளவுக்கு வெள்ள நீர் தேங்கியுள்ளதாக விவசாயிகள் அச்சம் தெரிவித்துள்ளனர்.

இம்முறை பெரும்போக நெற்பயிர்ச்செய்கை மன்னார் மாவட்டத்தில் 50 ஆயிரம் ஏக்கரில் மேற்கொள்ளப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (த-12)

# கிணறுகளில் கறுப்பு நீர்

முல்லைத்தீவு,டிசெ.29

மழை வெள்ளத்தைத் தொடர்ந்து முல்லைத்தீவு மாவட்டத்தில் கிணறுகளின் நீர் கறுப்பு நிறமாக மாற்றமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனை விட வெள்ளம் கிணறுகளுக்குள் புகுந்தமையால் உடனடியாக கிணறுகளுக்கு குளோரின் இடப்பட வேண்டிய அவசியமும் ஏற்பட்டுள்ளது.

நீரினால் நோய்கள் பரவும் அபாயம் ஏற்படுவதால் சுகாதாரப் பகுதியினர் கிணறுகளுக்குள் குளோரின் இடும் பணியை மேற்கொள்ள வேண்டுமென கோரப்பட்டுள்ளது.

(த-500)

# வெள்ளத்தால் இடம்பெயர்ந்த நானாட்டான் மக்களுக்கு உதவி



மன்னார்,டிசெ.29

வெள்ளப்பெருக்கின் காரணமாக இடம் பெயர்ந்து மன்னார் நானாட்டான் மகா வித்தியாலயத்தில் தங்க வைக்கப்பட்டுள்ள மக்களுக்கு இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் மன்னார் கிளை சுகாதார மற்றும் அவசர உதவிகளை நேற்றுமுன்தினம்வியாழக்கிழமை வழங்கியுள்ளது.

இதன் போது சுகாதாரப் பொதிகள், பாய், உள்ளிட்ட அவசர உதவிகள் வழங்கப்பட்டுள்ளதுடன் தற்காலிக மலசல கூடம் அமைப்பதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

குறித்த பொருள்களை இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் மன்னார் மாவட்டக் கிளை நிறைவேற்று அதிகாரி ரூக்ஸான் ஒஸ்வேல்ட், மன்னார் செஞ்சிலுவைச் சங்கத்தின் உபதலைவர் பி.ஜெறோம் ஆகியோர் நேரில் சென்று வழங்கினார்கள். (த-12)

# படகுத் தொழிற்சாலையை பதிவு செய்வதில் தாமதம்

## விற்பனைச் செயற்பாடுகள் பாதிப்பு

கிளிநொச்சி, டிசெ.29

ஜெயபுரத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ள 'பைபர்' மீன் பிடி வள்ளங்கள் உற்பத்தி செய்யும் தொழிற்சாலையைப் பதிவு செய்வதில் ஏற்பட்டுள்ள கால தாமதத்தினால், உற்பத்தி செய்யப்பட்ட வள்ளங்களை விற்பனை செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இந்த நிலை குறித்துக் கவலை தெரிவித்துள்ள கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம், சமாசத்தினதும் தொழிலாளர்களினதும் நலன் கருதி மேற்படி தொழிற்சாலையை விரைவாகப் பதிவு செய்யுமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கோரியுள்ளது.

பூநகரி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம், இந்தப் பிரதேசத்திலுள்ள கடற்றொழிலாளர்களின் நலன் கருதி ஜெயபுரத்தில் 'பைபர்' மீன் பிடி வள்ளம் உற்பத்தி செய்யும் தொழிற்சாலையை ஆரம்பித்திருந்தது. இத் தொழிற்சாலையில் நீர்கொழும்பிலுள்ள 'நீல்மரின்' நிறுவனத்தில் பயிற்சி பெற்ற தொழிலாளர்கள் கடமைக்கு அமர்த்தப்பட்டுள்ளார்கள்.

> ஜெயபுரத்தில் 'பைபர்' மீன் பிடி வள்ளம் உற்பத்தி செய்யும் தொழிற்சாலை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இத் தொழிற்சாலையில் நீர்கொழும்பிலுள்ள 'நீல்மரின்' நிறுவனத்தில் பயிற்சி பெற்ற தொழிலாளர்கள் கடமைக்கு அமர்த்தப்பட்டுள்ளார்கள்.

இந்தத் தொழிற்சாலையை கடற்றொழில் திணைக்களத்தில் பதிவு செய்வதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் விதிமுறைகளில் மாற்றம் செய்யப்பட்டுள்ளதால் பதிவு செய்வதில் தடங்கல் ஏற்பட்டுள்ளது. இதனால் உற்பத்தி செய்யப்பட்ட வள்ளங்களைத் தொழிலாளர்களுக்கு விற்பனை செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளதுடன் பெருந்தொகையான பணமும் முடங்கியுள்ளது.

எனவே இந்தத் தொழிற்சாலையை விரைவாகப் பதிவு செய்வதற்கான நடவடிக்கை எடுக்குமாறு சமாசம் கோரியுள்ளது. (த-115)

# ரூ.28 மில்லியன் செலவில் 18 வீதிகள் புனரமைப்பு

## வவுனியா நகர சபை எல்லைக்குள்

வவுனியா, டிசெ.29

வவுனியா நகர சபையால் இந்த வருடம் 18 வீதிகள் சுமார் 28 மில்லியன் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டுள்ளன.

நீண்ட காலமாகப் புனரமைக்கப்படாது குன்றும் குழியுமாகக் காணப்பட்ட நகரசபைக்குட்பட்ட வீதிகளே இந்த வருடத்துக்கான சபை நிதியில் இருந்து புனரமைக்கப்பட்டுள்ளன.

பண்டாரிக்குளம் முதலாம் ஒழுங்கை 2 மில்லியன் ரூபா செலவிலும், பட்டக்காடு முதலாம் ஒழுங்கை 1.9 மில்லியன் ரூபா செலவிலும், பூந்தோட்டம் பெரியகுளம் முதலாம் ஒழுங்கை 1.35 மில்லியன் ரூபா செலவிலும், கற்குழி முதலாம் ஒழுங்கை 1.2 மில்லியன் ரூபா செலவிலும் கண்டி வீதி 12 ஆம் ஒழுங்கை 1.2 மில்லியன் ரூபா செலவிலும், கண்டி வீதி 17 ஆம் ஒழுங்கை 0.63 மில்லியன் ரூபா செலவிலும், பண்டாரிக்குளம் வீதி 2.23 மில்லியன் ரூபா செலவிலும்

கோவில் புதுக்குளம் 2 ஆம், 3 ஆம், 4 ஆம் ஒழுங்கைகள் 2.18 மில்லியன் ரூபா செலவிலும், கற்குழி 2 ஆம் குறுக்குத் தெரு 1.79 மில்லியன் ரூபா செலவிலும், பண்டாரிக்குளம் தட்சணாகுளம் வீதி 2.22 மில்லியன் ரூபா செலவிலும்

கோவில் குளம் 5 ஆம், 9 ஆம் ஒழுங்கைகள் 0.62 மில்லியன் ரூபா செலவிலும், வெளிக்குளம் பிள்ளையார் கோவில் வீதி 1.14 மில்லியன் ரூபா செலவிலும்

மூன்றுமுறிப்பு பாடசாலை வீதி 1.86 மில்லியன் ரூபா செலவிலும், பூந்தோட்டம் முதலாம் வீதி 1.01 மில்லியன் ரூபா செலவிலும், ஔவையார் வீதி 1.65 மில்லியன் ரூபா செலவிலும், பண்டாரிக்குளம் அம்மன் கோவில் வீதி 0.57 மில்லியன் ரூபா செலவிலும், வேப்பங்குளம் தேவாலய வீதி 2.22 மில்லியன் ரூபா செலவிலும் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளன. (த-400)

# நிவாரண விநியோகத்தில் சில பொருள்கள் இல்லை

புதுக்குடியிருப்பு,டிசெ.29

புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவில் மீளக்குடியமர்ந்துள்ள குடும்பங்களுக்கு வழங்கப்படுகின்ற உலர் உணவு நிவாரண விநியோகத்தின் போது சில பொருள்கள் வழங்கப்படுவதில்லை என மக்கள் தெரிவிக்கின்றனர்.

இறுதிக்கட்ட போர் இடர்களால் இடம்பெயர்ந்து மீளக்குடியமர்ந்த குடும்பங்களுக்கு மாதாந்தம் நிவாரணப் பொருள்கள் வழங்கப்படுகின்றன.

அவ்வாறு வழங்கப்படும் நிவாரணப் பொருள்களில்கடந்த மாதம்சீனி, பருப்பு என்பன வழங்கப்படவில்லை. அதேபோல இந்த மாதமும் அரிசி, தேங்காய் எண்ணெய், பருப்பு என்பன வழங்கப்படவில்லை. நிவாரணச் சிட்டையில் அதற்குரிய அளவுகளில் அவற்றை வழங்குமாறு பதியப்பட்டுள்ளது. ஆயினும் குறித்த பொருள்கள் வழங்கப்படவில்லை என மக்கள் தெரிவிக்கின்றனர்.

குறிப்பிட்ட பொருள்கள் கையிருப்பில் இல்லாதுவிட்டால் அதற்கு மாற்றீடாக வேறு பொருள்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (த-400)



வட்டக்கச்சி மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற ஒளிவிழாவில் [illegible] ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றினர். மாணவர்களின் கலைநிகழ்வும் இடம்பெற்றது.

# 205 குடும்பங்கள் நலன்புரி முகாம்களில்

## கண்டாவளையிலும் கடும் வெள்ளம்

கிளிநொச்சி,டிசெ.29

தொடர்ச்சியாகப் பெய்து வரும் மழை காரணமாக கிளிநொச்சி கண்டாவளைப் பிரதேசத்தில் இடம்பெயர்ந்த 205 குடும்பங்கள் ஐந்து நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ளன.

கடந்த சில நாள்களாகப் பெய்துவரும் கடும்மழை, இரணைமடுக் குளத்தின் வான் கதவு திறக்கப்பட்டுள்ளமை ஆகிய காரணங்களால் ஏற்பட்ட வெள்ளத்தினால் முரசுமோட்டை அ.த.க, கட்டைக்காடு அ.த.க, தருமபுரம் அ.த.க, நாகேந்திரபுரம் அ.த.க, தம்பிராசபுரம் அ.த.க ஆகிய 5 பாடசாலைகளில் அமைக்கப்பட்டுள்ள நலன்புரி நிலையங்களில் 205 குடும்பங்களைச் சேர்ந்த 850 இற்கும் மேற்பட்டோர் தங்கியுள்ளனர் என கண்டாவளைப் பிரதேச செயலர் ரி.முகுந்தன் தெரிவித்தார். (த-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பஸ்தரிப்பிடம் திறந்து வைப்பு

வடமராட்சி,டிசெ.29
கரணவாய் குஞ்சர் கடை சந்தியில் பருத்தித்துறை வீதியில் பயணிகள் தங்கும் பஸ்தரிப்பிடம் ஒன்று கருணையம்பதி சனசமூக நிலையத்தால் கட்டப்பட்டு பயணிகள் பாவனைக்கு விடப்பட்டுள்ளது.

லண்டனில் வதியும் கருணையம்பதி நலன்புரி சங்கத்தின் உறுப்பினர்கள் சேகரித்து வழங்கிய இரண்டு லட்சத்து 35 ஆயிரம் ரூபாவில் கருணையம்பதி சனசமூக நிலையம் இந்தப் பஸ்தரிப்பு நிலைய கட்டடப் பணிகளை நிறைவேற்றியது.

இதன் திறப்பு விழா கருணையம்பதியின் மூத்த பிரஜையும் உடுப்பிட்டி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவருமான கே.நாகலிங்கம் தலைமையில் நடைபெற்றது. கரவெட்டி பிரதேச செயலர் எஸ்.சிவஸ்ரீ தரிப்பிடத்தை திறந்து வைத்தார்.

கரவெட்டி, பிரதேச சபைத் தலைவர் பொ.வியாகேசு, பருத்தித்துறை இ.போ.ச. டிப்போ உதவி முகாமையாளர் எஸ்.சிவம் ஆகியோரும் நிகழ்வில் கலந்து கொண்டனர். (ம-8)

# யாழ். பொம்மைவெளி மக்கள் வெள்ளத்தில்

### பாதிக்கப்பட்டோருக்கு உடன் நிவாரணம்

யாழ்ப்பாணம்,டிசெ.29
யாழ். நகரை அண்டிய கரையோரப் பகுதிகளில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஒரு வார காலத்துக்கான உலர் உணவுப் பொருள்களை உடனடியாக விநியோகிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்று யாழ். பிரதேச செயலர் திருமதி தெ.சுகுணரதி தெரிவித்தார்.

குடாநாட்டில் தற்போது பெய்துவரும் தொடர்மழை காரணமாக நகரை அண்டிய பொம்மை வெளியின் ஒரு பகுதி, வசந்தபுரம், நாவாந்துறை, சூரியவெளி, நித்திய வெளி, காக்கை தீவு, அராலி வீதி போன்ற பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.



இதனால் இந்தப் பகுதிகளைச் சேர்ந்த மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடியாக ஒருவார காலத்துக்கான உணவுப் பொருள்களை வழங்க துரிதமாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இந்தப் பொருள்களைக் கூட்டுறவுச் சங்க கிளை விற்பனை நிலையங்கள் ஊடாக விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இதேவேளை, பொம்மைவெளி, நாவாந்துறைப் பகுதிகளில் ஏற்பட்ட வெள்ளத்தை வடிகால்கள் ஊடாக அகற்றும் பணியில் நேற்றுத் தொடக்கம் மாநகர சபை ஊழியர்கள் ஈடுபட்டு வருகின்றனர். (ம-17)

## பரு.பிரதேச செயலக சூழலிலும் வெள்ளம்

கடந்த சில தினங்களாகப் பெய்துவரும் மழையால் பருத்தித்துறை பிரதேச செயலகத்தின் பின்புறத்தில் பெருவெள்ளம் ஏற்பட்டுள்ளது. குறிப்பிட்ட பகுதியில் சமூக சேவைகள் திணைக்களம், பிரதேச செயலரின் விடுதி என்பன அமைந்துள்ளன.

இந்த வெள்ளத்தால் சமூக சேவைத் திணைக்களத்தில் பணியாற்றும் பணியாளர்களும், சேவைகளைப் பெறுவதற்காகச் செல்லும் பொது மக்களும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். (ம-8)

## கொட்டும் மழையிலும் பறக்கும் பட்டங்கள்

கொட்டும் மழையிலும் விண்கள் கதற பட்டங்கள் வானத்தில் பறந்து வருகின்றன. தற்போது பட்டங்கள், வர்ண பொலித்தீன் கவரில் கட்டப்படுவதால் கொட்டும் மழையிலும் பட்டங்கள் தாக்குப் பிடித்துப் பறக்கின்றன.

பல்வேறு அளவுகளில், வடிவங்களில் இந்தப் பட்டங்கள் பறப்பதைக் காணக் கூடியதாக இருக்கின்றது. (ம-8)

## துணிச்சலான செயற்பாட்டால் திருடப்பட்ட பொருள்கள் மீட்பு

வலி.வடக்கு டிசெ29
களவு கொடுத்தவரின் துணிச்சலான நடவடிக்கையினால் திருடன் கைது செய்யப்பட்டதுடன் பொருள்களும் மீட்கப்பட்ட சம்பவம் சுன்னாகம் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

கடந்த வாரம் சுன்னாகம் மேற்கில் உள்ள தோட்டக் காணியில் உள்ள நீர் இறைக்கும் பைப்புகள் மற்றும் ஏணி என்பன திருடப்பட்டுள்ளன.

இதனைத் தொடர்ந்து களவு கொடுத்தவர் பழைய இரும்பு கொள்வனவு செய்யும் மல்லாகத்தில் உள்ள இடம் ஒன்றுக்குச்சென்று கண்காணித்துள்ளார்.

அங்கு அவருடைய ஏணி இருப்பதைக்கண்டு கிராம அலுவலருடன் சென்று ஏணி இருப்பதை உறுதிப்படுத்தியதுடன் கிராம அலுவலர் மூலம் ஏணி வைத்திருந்தவரிடம் ஏணியை எவ்வாறு பெற்றீர்கள் என்ற விசாரணையையும் மேற்கொண்டுள்ளனர்.

இதனைத் தொடர்ந்து ஏணியை வேறு ஒருவர் கொண்டுவந்து விற்பனை செய்ததாகவும் குறிப்பிட்ட நபரை கிராம அலுவலரிடம் ஒப்படைப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

இதற்கு அமைவாக நேற்று குறிப்பிட்ட நபர் கிராம அலுவலரிடம் கொண்டு வரப்பட்டதைத் தொடர்ந்து குறிப்பிட்ட நபரை சுன்னாகம் பொலிஸில் கிராம அலுவலர் ஒப்படைத்தார்.

அத்துடன் களவு போன பொருள்களில் ஒரு பகுதியும் மீட்கப்பட்டுள்ளது. பொலிஸார் தொடர்ந்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-86)



வடக்கு மாகாணத்திலுள்ள மேல் நீதிமன்ற, மாவட்ட நீதிமன்ற நீதிபதிகள், நீதிவான்கள், சட்டத்தரணிகளுக்கான கருத்தரங்கு ஒன்று யாழ்.கிறீன்கிறாஸ் ஹோட்டலில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை நடைபெற்றது. அந்தக் கருத்தரங்கில் டி.என்.ஏ. பரிசோதனை பற்றிய விளக்கமும், பாலியல் செயற்பாடுகளால் மனரீதியாக ஏற்படும் தாக்கம் குறித்தும், இவை தொடர்பான சட்ட மருத்துவம் தொடர்பிலும் விளக்கமளிக்கப்பட்டது. (த-4)

## கால்நடைகள் தங்குமிடமாக யாழ்.நகர மரக்கறிச் சந்தை

யாழ்ப்பாணம்,டிசெ.29
யாழ். நகரின் மரக்கறி விற்பனை சந்தைக் கட்டட வளாகம் கால்நடைகளின் தங்குமிடமாகக் காணப்படுகின்றது.

சந்தையின் மரக்கறி விற்பனைப் பகுதிக்கு அருகில் உள்ள இடத்தில் கால்நடைகள் தங்கி அசிங்கப்படுத்தி வருகின்றன.

அவற்றின் துர்நாற்றத்தால் சந்தைக்குப் பொருள்களை வாங்கச் செல்லும் மக்கள்சிரமப்பட்டு வருகின்றனர்.


மழை காலங்களில் இந்தப் பகுதியில் தங்கி நிற்கும் கால்நடைகளால் குறித்த பகுதி சேறும் சகதியுமாகக் காணப்படுகிறது.

இவ்வாறு இங்கு கால்நடைகள் தங்குவதால் நுளம்புகளின் பெருக்கமும் அதிகரித்துக் காணப்படுகிறது என்று வியாபாரிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.

கால் நடைகள் தங்குவதால் நுளம்புகளின் பெருக்கமும் அதிகரித்துக் காணப்படுகிறது.

இதேவேளை, நகரில் பஸ்தரிப்பிடம் மற்றும் முனீஸ்வரன் கோயில் பகுதிகளிலும் கட்டாக்காலிகளின் தொல்லை அதிகரித்துக் காணப்படுகிறது. (ம-17)

## கூரை இல்லாத பஸ் நிலையம் இது



யாழ்ப்பாணம்,டிசெ.29
யாழ். முற்றவெளி தனியார் பஸ்தரிப்பு நிலைய கட்டடத்தின் கூரை பெரும் சேதமடைந்த நிலையில் உள்ளது.

இதனால் தற்போது பெய்துவரும் மழையால் இந்தக் கட்டடத்தில் வெள்ளம் தான் நிற்கிறது.

அண்மையில் இந்தக் கட்டடத்தின் கூரை காற்றால் தூக்கி வீசப்பட்டு சேதமடைந்துள்ள நிலையில் காணப்படுகின்றது.

சேதமடைந்த இந்தக் கூரை இதுவரைக்கும் புனரமைப்புச் செய்யப்படவில்லை.

தற்போது பெய்துவரும் மழையால் பயணிகளும் மற்றும் சாரதிகள், நடத்துநர்களும் பெரும் சிரமம் அடைகின்றனர்.

சேதமடைந்த கட்டடக் கூரையை உடன் சீர்செய்து தருமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ம-17)

## தண்ணீர்த் தொட்டியை வீடாக்கி வாழ்ந்து வந்த முதியவர்!

### கைதடி இல்லத்தில் சேர்க்கப்பட்டார்

யாழ்ப்பாணம்,டிசெ.29
வடமராட்சி தும்பளைப் பகுதியில் தண்ணீர்த் தொட்டி ஒன்றில் வசித்து வந்த முதியவர் ஒருவர் பிரதேச மக்களால் கைதடி முதியோர் இல்லத்தில் சேர்க்கப்பட்டார்.

இல்ல அத்தியட்சகர் த.கிருபாகரன் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

இந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த இ.ஆனந்த சுப்பிரமணியம்பிள்ளை (வயது-63) என்ற முதியவர் உறவினர்கள் எவரும் இல்லாத நிலையில் வாழ்விடமும் இன்றி ஒரு சிறிய தண்ணீர் தொட்டியின் மேல் கூரை அமைத்து வாழ்ந்து வந்துள்ளார்.

இந்த நிலையில் தற்போது நோய்வாய்ப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில் சமூக சேவை உத்தியோகத்தர் ஊடாக இல்லத்தில் இந்த முதியோர் இணைக்கப்பட்டுள்ளார் என்று கூறப்பட்டது. (ம-17)

## கடற்கொந்தளிப்பு காரணமாக மீனவர் தொழில் நிலை பாதிப்பு

வடமராட்சி, டிசெ.29
வடமராட்சி பிரதேசத்தில் கடந்த சில தினங்களாக பெய்து வரும் மழை காரணமாகக் கடற் கொந்தளிப்புக் காணப்படுகின்றது.

இதனால் மீனவர்களது தொழில்நிலை பாதிக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

மீன்களும் அதி கரித்த விலைக்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது என்றும் கூறப்பட்டது.

இந்த நிலையில் சந்தைகளில் மீன்களின் வருகையும் குறைவடைந்து காணப்படுகின்றது.

ஒரு சிலரால் கொண்டுவரப்படும் மீன்களும் அதிகரித்த விலைக்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது என்றும் கூறப்பட்டது.

இதனால் நுகர்வோர் தேவையான அளவு மீனைப் பெற்றுக் கொள்ள முடியாத நிலைமையும் காணப்படுகிறது. (ம-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உத்தரப் பிரதேச மாநிலம் வாரணாசியிலுள்ள பனாரஸ் இந்து பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற 20 ஆவது தேசிய குழந்தைகள் மாநாட்டில் கலந்து கொண்ட முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாமுக்கு நினைவு பரிசில் வழங்கிய மாணவர்கள்.

# பாலியல் குற்றவாளிகளின் பெயர் விவரம் விரைவில் படங்களுடன் இணையத்தில்

## மத்திய அரசு முடிவு

டில்லி, டிசெ.29

பாலியல் வழக்கு குற்றவாளிகளை மக்கள் அறிந்து கொள்ளும் வகையில் அவர்களின் பெயர் மற்றும் புகைப்படங்களை இணையத்தளத்தில் வெளியிட மத்திய அரசு முயற்சி மேற்கொண்டு வருகிறது.

டில்லியில் செய்தியாளர்களிடம் இதுகுறித்துப் பேசிய உள்துறை இணை அமைச்சர் ஆர்.பி.என்.சிங் மேலும் தெரிவித்ததாவது:


பாலியல் குற்றவாளிகளின் முகவரி உட்பட அனைத்துத் தகவல்களையும் தேசிய குற்ற ஆவணக் காப்பகம் சேகரித்து வருகின்றது. இதன் முதல் கட்டமாக டில்லி பொலிஸ் இணையத்தளத்தில் பாலியல் குற்றவாளிகளின் பெயர், முகவரி மற்றும் புகைப்படம் வெளியிடப்பட்டுள்ளது. அதேபோல



டில்லியில் இரவு நேரத்தில் இயக்கப்படும் ஒவ்வொரு பஸ்களிலும் ஊர்காவலர்கள் நிறுத்தப்பட்டுள்ளனர். நாட்டில் தொடர்ந்து அதிகரித்துவரும் பாலியல் குற்றங்களை கட்டுப்படுத்த விரைந்து நடவடிக்கை வேண்டும் என்று மத்திய அரசு கூறியுள்ளது என்றார். (வ)

# சீனாவின் ஆயுத பலத்துக்கு சமனாக இந்தியப் படைக்கும் ஏவுகணைகள்

## வாங்குகிறது இந்தியா



சீன இராணுவ ஆயுத பலத்துக்குச் சமமாக, இந்திய இராணுவத்துக்கு 5ஆயிரம் கோடி ரூபாவுக்கு அதி நவீன 3 ஜி பீரங்கி எதிர்ப்பு வழிகாட்டு ஏவுகணைகள் (ஏ.டி.ஜி.எம்.) வெளிநாடுகளில் இருந்து வாங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

குறித்த ஆயுதங்கள் காலாட் படை மற்றும் இயந்திர மயமாக்கப்பட்ட பிரிவுகளில் பயன்படுத்தப்பட உள்ளன. இந்தவகை ஆயுதங் கள், நிலப்பகுதி தாக்குதலுக்கு மிகவும் உகந்தனவாகும். பாகிஸ்தான் கூட பக்தார் ஷிகான் என்ற இரண்டாம் தலைமுறை ஏவுகணைகளை வைத்துள்ளது. அவை சீன ஏவுகணை மற்றும் பிரெஞ்ச் எரிக்ஸ் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டவை.

இந்திய இராணுவத்தில் உள்ள 356 காலாட் படைப் பிரிவுகளையும் பலப்படுத்த, முதற்கட்டமாக சுமார் 2 ஆயிரம் லோஞ்சர்கள் மற்றும் 24 ஆயிரம் ஏவுகணைகள் தேவைப்படுகின்றன. குறித்த ஆயுதக் கொள்முதலானது, 2017 ஆம் ஆண்டில் 12 ஆவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் முழுமையடையும் என்று இந்திய இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்திய இராணுவத்தில் தற்போது, பிரான்ஸின் 2 கி.மீ. தூரம் சென்று தாக்க வல்ல மிலான் ஏவுகணைகள், ரஷ்யாவின் 4 கி.மீ. தூர இலக்கை தாக்கி அழிக்கக் கூடிய கொங்கர்ஸ் ஏவுகணைகள் உள்ளன. அவை அனைத்தும் இரண்டாம் தலைமுறை தொழில்நுட்ப ஆயுதங்களாகும்.

ஆயுத விடயத்தில் இந்தியாவுக்கு உதவ இஸ்ரேல் தயாராக இருக்கிறது. ஏற்கெனவே, இஸ்ரேல் தயாரிப்பு ஆயுதங்கள் இந்திய இராணுவ வசம் உள்ளன. இராணுவத்தின் எதிர்காலத் தேவைகளை பூர்த்தி செய்ய இஸ்ரேல் தயாராக இருக்கிறது. ஆயுத விநியோகத்தை அதன் தொழில்நுட்பத்தை பகிர்ந்து கொள்ளவும் இஸ்ரேல் முன்வந்துள்ளது. எனவே, இராணுவத்தின் மூன்றாம் தலைமுறையை பீரங்கி எதிர்ப்பு ஏவுகணைகளைக் கொண்டு, நவீனப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளதாக, இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன. (வ)

# மீனவரைக் காக்கும் பணியில் மத்திய அரசுக்கு தோல்வி

## ஜெயலலிதா குற்றச்சாட்டு



டில்லி, டிசெ.29

இலங்கைக் கடற்படையினரிடம் இருந்து தமிழக மீனவர்களைக் காக்கும் பணியிலும் மத்திய அரசு தோல்வியையே அடைந்துள்ளது என்று தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா ஜெயராம் குற்றம் சுமத்தியுள்ளார்.

டில்லியில் நேற்று முன்தினம் நடைபெற்ற தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்தில் பேச முதலமைச்சர் ஜெயலலிதாவுக்கு 10 நிமிடங்கள் மட்டுமே வழங்கப்பட்டன.

இதனால் அவர் கூட்டத்திலிருந்து வெளி நடப்புச் செய்தார். அதற்கு முன்னர் அவருடைய உரையில், கடல் எல்லையில் தமிழக மீனவர்கள் தாக்கப்படுகிறார்கள். இதன் மூலம் நாட்டு மக்களைப் பாதுகாக்க மத்திய அரசு தவறிவிட்டது எனக் கூறியுள்ளார். (வ)

# இஸ்லாமுக்கு மாற மறுத்த இந்திய மாணவனின் நாக்கு துண்டிப்பு

## ஜேர்மனியில் கொடூரம்

ஜேர்மனியில் முஸ்லிம் மதத்திற்கு மாற மறுத்த இந்திய மாணவரை தீவிரவாதிகள் கடுமையாகத் தாக்கி அவரது நாக்கை துண்டித்த சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

மேற்கு ஜேர்மனியின் பான் நகரில் இந்திய மாணவர் ஒருவர் கடந்த திங்கட் கிழமை மாலையில் வீதியில் நடந்து சென்றபோது, 2 ஆசாமிகள் அவரை இஸ்லாம் மதத்துக்கு மாறும்படி வற்புறுத்தியுள்ளனர். அந்த மாணவர் மறுத்ததால் அவரைத் தாக்கியுள்ளனர்.

அதன்பின்னர் நேற்று முன்தினம் ஒரு நிகழ்ச்சியில் கலந்துகொண்டு வீடு திரும்பிம் வழியில் அவரை மறித்த அதே கும்பல் மாணவருடைய நிலைப்பாடு பற்றி மறுபடியும் கேட்டிருக்கின்றனர். அவரும் கூறியிருக்கிறார். ஆனால் அவர்கள் அந்த மாணவனை உடனடியாக இஸ்லாம் மதத்துக்கு மாற வேண்டும் எனக் கட்டாயப்படுத்தியுள்ளனர். மதம் மாற மாட்டேன் என்று சொன்னால் மாணவனுடைய நாக்கை அறுத்துவிடுவதாகவும் மிரட்டியுள்ளனர். ஆனால் அதற்கு அந்த மாணவன் மறுக்கவே அவரைக் கொடூரமாகத் தாக்கி நாக்கையும் அறுத்துவிட்டு காரில் தப்பிச் சென்றுவிட்டனர்.

காயங்களால் துடித்துக் கொண்டிருந்த மாணவனை அந்த வழியாகச் சென்ற ஒருவர் பார்த்து அம்புலன்ஸுக்குத் தகவல் தெரிவித்திருக்கிறார். மருத்துவமனையில் மாணவனுக்குத் தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. சில தினங்களில் அவர் வீடுதிரும்பலாம் என மருத்துவர்கள் கூறியுள்ளனர். (வ)

# மதுரை ஆட்சியாளர் அலுவலகத்தில் தீ முக்கிய ஆவணங்கள் எரிந்து நாசம்



மதுரை, டிசெ.29

மதுரை மாவட்ட ஆட்சியாளர் அலுவலகத்தில் திடீரென தீ பிடித்து எரிந்ததில் முக்கிய ஆவணங்கள் எரிந்து நாசமாகின.

ஆட்சியாளர் அலுவலகத் தின் முதல் மாடியில் 'ஏ' மற்றும் 'பி' பிரிவில் தீ விபத்து நிகழ்ந்துள்ளது. அறையின் 'ஏ' பிரிவில் நேற்று அதிகாலை திடீரென ஏற்பட்ட தீ 'பி' பிரிவிலும் பரவத் தொடங்கியது. இதனையடுத்து தீயணைப்புத் துறையினருக்கு தகவல் அளிக்கப்பட்டது. தகவல் அறிந்த தீயணைப்புத் துறையினர், ஒன்றரை மணி நேரம் போராடி தீயை அணைத்தனர். மின்கசிவு காரணமாக இந்த தீ விபத்து ஏற்பட்டிருக்கலாம் என்று முதல் கட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளது.

இந்த தீ விபத் தில், 'ஏ' மற்றும் 'பி' பிரி வில் இருந்த முக்கிய ஆவணங்கள், அலுவலகத்தில் பணிபுரியும் ஊழியர்களின் பதிவேடுகள், கணினிகள் ஆகியவை எரிந்து நாசம் ஆகின. மேலும் இந்த தீ விபத்து குறித்து பொலிஸார் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

# தீவிரவாதி அபுஜிண்டால் மீது அடுத்த மாதம் குற்றப்பத்திரிகை

டில்லி, டிசெ.

அவுரங்காபாத் ஆயுதக் கடத்தல் விவகாரத்தில் லஷ்கர் ஈ தொய்பாவைச் சேர்ந்த அபு ஜிண்டால் மீது மும்பை நீதிமன்றத்தில் அடுத்த மாதம் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட உள்ளது.



மகாராஷ்டிர மாநிலத்தை சேர்ந்த அபுஜிண்டால், பாகிஸ்தான் தீவிரவாதிகளுடன் தொடர்பு கொண்டு, இந்தியாவின் முக்கிய நகரங்கள் மீது தாக்குதல் நடத்தத் திட்டமிட்டதாக நம்பப்படுகிறது.

2008 ஆம் ஆண்டு மே மாதம் பயங்கர ஆயுதங்கள், வெடிகுண்டுகள் என்பவற்றுடன் அவுரங்காபாத்துக்கு காரில் சென்று கொண்டிருந்தபோது, பொலிஸாரிடம் பிடிபட இருந்தான் என்றும், பின்னர் பாகிஸ்தான் தப்பி சென்று விட்டான் என்றும் கூறப்படுகிறது.

சில மாதங்கள் கழித்து சவூதி அரேபியாவில் அபு ஜின்டால் பிடிபட்டு இந்தியா அழைத்து வரப்பட்டான். டில்லி திஹார் சிறையில் அடைக்கப்பட்ட அவன் மீதான ஆயுதக் கடத்தல் வழக்கு நேற்று முன்தினம் மாலை விசாரணைக்கு வந்தது. வழக்கின் விசாரணைக்கு அபுஜிண்டால் சிறையில் இருந்தபடியே காணொலித் தொடர்பாடல் மூலம் மும்பை நீதிமன்றத்தில் முன்னிலையானான். இதன்போது நீதிபதிகள், அபுஜிண்டால் மீதானவழக்கில் அடுத்த மாதம் 9 ஆம் திகதி குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படும் என்று கூறினர்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## கனடாவில் பனிப்புயல்

றொறன்ரோ, டிசெ.29

கனடாவின் றொறன்ரோ, ஒண்டோரியாவின் தென் பகுதி என்பவற்றை பெரும் பனிப்புயல் தாக்கும் என்று கனடா வானிலை ஆய்வு மையம் எச்சரித்துள் ளது.

டொரண்டோவையும், ஒண்டோரியாவின் தென் பகுதியையும் கடந்த 2 ஆண்டுகளில் இல்லாத அளவு பெரிய பனிப்புயல் தாக்கும். தரையில் 10 முதல் 15 செ.மீ உயரத்திற்கு பனிப்படலம் காணப்படும். சில வீதிகளில் போக்குவரத்து பாதிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டதும் அணுஉலைகள் மீண்டும் இயங்கும்

### ஜப்பானின் புதிய அரசு அறிவிப்பு

டோக்கியோ, டிசெ.29

அணுமின் நிலையங்களின் பாதுகாப்பை உறுதி செய்தபின், அவற்றைச் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஜப்பான் அணுசக்தித் துறை அமைச்சர் டோஷிமிட்சு மோடெகி தெரிவித்துள்ளார்.

ஜப்பானின் புதிய பிரதமராகப் பொறுப்பேற்றுள்ள ஷின்சோ அபே அமைச்சர்கள் பட்டியலை நேற்று முன்தினம் வெளியிட்டார். அணுசக்தித் துறை அமைச்சராக டோஷிமிட்சு மோடெகி நியமிக்கப்பட்டுள்ளார்.

அணுஉலைகள் குறித்து கேள்வி எழுப்பப்பட்ட போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

புகுஷிமா அணு மின்நிலையத்தில் ஏற்பட்ட விபத்தை அடுத்து அணு மின் நிலையங்களுக் குறித்துக் கடும் எதிர்ப்புக் கிளம்பியது.

புகுஷிமா அணுமின் நிலைய விபத்துதை அடுத்து ஜப்பானில் அணு உலைகளை மூடிவிடுவது குறித்த செயற்திட்டத்தை முந்தைய பிரதமர் யோஷிகிஹோ நோடா தலைமையிலான அரசு வெளியிட்டிருந்தது. அதில், 2040 இக்குள் அனைத்து அணு மின் நிலையங்களும் மூடப்படும் என்றும் தெரிவித்திருந்தது. இந்த நிலையில் அதற்கு முற்றிலும் மாறான நிலையை தற்போதைய அபே தலைமையிலான ஜப்பான் அரசு எடுத்துள்ளது.

## அமெரிக்காவில் கடும் பனிப்பொழிவு

### இதுவரை 6 பேர் சாவு



நியூயோர்க், டிசெ.29

அமெரிக்காவின் வட கிழக்கு மாநிலங்களில் கடும் குளிர் காலநிலை நிலவி வருகிறது. கடும் குளிர் காரணமாக இதுவரை 6 பேர் உயிரிழந்துள்ளனர்.

அமெரிக்காவின் மிசிசிப்பி, அலபமா மாநிலங்களில் கடும் பனிப் பொழிவு காரணமாக சுமார் 100இக்கும் மேற்பட்ட விமான சேவைகள் நிறுத்தப்பட்டுள்ளன.

இதேவேளை, நியூயோர்க்கை நோக்கி பனிப் புயல் ஒன்று நகர்கிறது. அதனால் பனி மூட்டம் இருக்கும் என்றும் கடும் குளிர் காற்று வீசும் என்றும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

# 22 இராணுவத்தினர் கடத்தப்பட்டனர்

### பாகிஸ்தானில் தலிபான்கள் அதிரடி



பெஷாவர், டிசெ.29

பாகிஸ்தானில் இராணுவச் சோதனைச்சாவடி மீது தாக்குதல் நடத்திய தலிபான்கள், 22 பாகிஸ்தான் இராணுவ வீரர்களை கடத்திச் சென்றுள்ளனர். இருதரப்புக்கும் இடையே நடைபெற்ற மோதல்களில் இரு இராணுவ வீரர்கள் உயிரிழந்ததுள்ளனர்.

இந்தச் சம்பவம் பாகிஸ்தானின் வடமேற்கே பெஷாவர் நகருக்கு அண்மையில் இடம்பெற்றுள்ளது.

நேற்றுமுன்தினம் மூன்று இராணுவச் சோதனைச் சாவடிகள் மீது தலிபான்கள் திடீரெனத் தாக்குதல் நடத்தினர். சுமார் 200 இக்கும் மேற்பட்ட தலிபான்கள் தாக்குதல் நடத்தினர் என்று தெரிவிக்கப்படுகிறது. இதனையடுத்து இராணுவத்தினருக்கும் தலிபான்களுக்கும் இடையே கடும் மோதல் இடம்பெற்றது. அதில் இரு இராணுவ வீரர்கள் உயிரிழந்தனர்.

''22 இராணுவத்தினர் எம்மால் பிடிக்கப்பட்டுள்ளனர். சோதனைச் சாவடியில் இருந்த ஆயுதங்கள், வெடிபொருள்கள் அனைத்தும் கைப்பற்றப்பட்டுள்ளன''- என்று தலிபான் செய்தித் தொடர்பாளர் முகமது அப்ரிடி தெரிவித்துள்ளார்.

இந்தத் தாக்குதல் தொடர்பாக பாகிஸ்தான் இராணுவத் தரப்பில் எந்தத் தகலும் தெரிவிக்கப்படவில்லை.

## இந்தியா மீது பாகிஸ்தான் போர் தொடுக்க வேண்டும்

### நிபந்தனை விதிக்கின்றது தலிபான்

இஸ்லாமபாத், டிசெ.29

பாகிஸ்தான் மீது நடத்தப்படும் தாக்குதல்களை நிறுத்த வேண்டுமானால், பாகிஸ்தான் இந்தியா மீது போர் தொடுக்க வேண்டும் என்று நிபந்தனை விதித்துள்ளது தலிபான் இயக்கம்.

பாகிஸ்தான் அரசு அமெரிக்காவுக்கு ஆதரவாக செயற்படுகின்றது என்று தெரிவிக்கும் தலிபான் இயக்கம் பாகிஸ்தான் மீது தாக்குதல்களை நடத்தி வருகின்றது.

இந்தநிலையில் பாகிஸ்தானில் உள்ள ஊடகம் ஒன்றுக்கு தலிபான் செய்தி தொடர்பாளர் அமீர் தகவல் ஒன்றை அனுப்பியுள்ளார்.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள தாவது:-

பாகிஸ்தானில் தற்போது உள்ள சட்டங்களை இரத்துச் செய்துவிட்டு, இஸ்லாமிய மதக் கோட்பாட்டை நடைமுறைப்படுத்த வேண்டும். அத்துடன் இந்தியா மீது பாகிஸ்தான் போர் தொடுக்க வேண்டும்-என்று உள்ளது.

இந்தத் தகவலை உறுதி செய்த பாகிஸ்தான் அரசு, தலிபான்களின் இந்த நிபந்தனைகளை நிராகரிப்பதாக உறுதிபட தெரிவித்துள்ளது.

## மெக்ஸிக்கோவில் துப்பாக்கிச் சூடு

### 9 பேர் சாவு

குலியகான், டிசெ.29

மெக்ஸிக்கோவின் சினலோவா மாகாணத்தில் இனந்தெரியாதோர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் 9 பேர் உயிரிழந்தனர்.

நத்தார் விருந்துபசாரம் ஒன்றிலேயே இந்தத் துப்பாக்கிப் பிரயோகம் இடம்பெற்றுள்ளது. விருந்துபசாரத்துள் நுழைந்த சிலர் சரமாரியாகத் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டனர். இதில் 9 பேர் உயிரிழந்தனர். உயிரிழந்த ஒருவரின் தலையையும் துண்டித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் குறித்துப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



'உகாங்' புயல் காரணமாக பிலிப்பைன்ஸில் மின்கம்பங்கள் முறிந்து வீழ்ந்துள்ளன. இதனால் பல பகுதிகளுக்கு மின் விநியோகம் தடைப்பட்டுள்ளது.

## பிலிப்பைன்ஸில் புயல் 6 பேர் உயிரிழப்பு

மணிலா, டிசெ.29

பிலிப்பைன்ஸில் 'உகாங்' புயல் தாக்கம் காரணமாக வெவ்வேறு இடங்களில் 6 பேர் உயிரிழந்ததாக தேசிய பேரிடர் அமைப்புத் தெரிவித்துள்ளது.

பிலிப்பைன்ஸில் நத்தார் தினத்தன்று உகாங் புயல் தாக்கியது. இதனால் அக்லான் மாகாண தலைநகர் கலிபோ, பனே தீவு உள்ளிட்ட பல்வேறு இடங்களில் கனமழை பெய்தது. ஈஸ்டன்சமர் மாகாணத்தில் புயல் காரணமாக, வீட்டின் மீது மரம் முறிந்து விழுந்ததில் 3 பேர் உயிரிழந்தனர். இலாய்லோ மாகாணத்தில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கில் மூழ்கி 3 பேர் உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் நிலச்சரிவில் சிக்கி சிலர் உயிரிழந்திருக்கக் கூடும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

பிலிப்பைன்ஸின் தெற்குப் பகுதியில் உள்ள மிண்டனாவ் தீவை கடந்த சில வாரங்களுக்கு முன்பு ''போபா' புயல் தாக்கியதில் 1,067 பேர் உயிரிழந்தனர், 800 பேர் காணாமற்போயினர் என்பது குறிப்பிடத்தக்கது.

## முபாரக்கின் உடல்நிலை மோசம்

கெய்ரோ, டிசெ.29

சிறைச்சாலையில் வழுக்கி விழுந்து காயமுற்ற எகிப்தின் முன்னாள் ஜனாதிபதி முபாரக்கின் உடல்நிலை மேலும் மோசமநடைந்துள்ளது. இதனையடுத்து அவர் இராணுவ வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இந்தநிலையில் முபாரக்கின் உடல்நிலை குறித்து விரிவான அறிக்கை ஒன்றைச் சமர்ப்பிக்குமாறு நீதிமன்று சிறை அதிகாரிகளைக் கேட்டுள்ளது.

## அமெரிக்க மருந்துகளுக்கு அனுமதி ஈரான் பெண் அமைச்சர் பதவிநீக்கம்

தேரான்,டிசெ.29

அமெரிக்க மருந்துப்பொருள்களை இறக்குமதி செய்ய உத்தரவிட்ட பெண் அமைச்சரை பதவி நீக்கியுள்ளார் ஈரான் ஜனாதிபதி.

ஈரான் சுகாதாரத்துறை அமைச்சர் மெரீஷா வாஹில் அண்மையில் மருந்துப் பொருள்களின் விலை உயர்வு குறித்து அறிவித்திருந்தார். அத்துடன் 2.4 மில்லியன் டொலர் பெறுமதியான மேற்கத்திய மருந்து பொருள்கள் இறக்குமதி செய்யவும் உத்தரவிட்டிருந்தார். அதற்கு நாடு முழுவதும் கடும் எதிர்ப்புக் கிளம்பியது. அதனையடுத்தே அவர் பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

ஈரான் அணு சோதனை செய்வதை அமெரிக்கா கடுமையாக எதிர்க்கும் நிலையில், அமெரிக்க மருந்து பொருள்கள் இறக்குமதிக்கு அனுமதி வழங்கியதால் ஜனாதிபதி முகமது நிஜாத் இந்த நடவடிக்கையை மேற்கொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. நிஜாத்தின் அமைச்சரவையில் இவர் ஒருவரே பெண் அமைச்சர் என்பது குறிப்பிடத்தது.

## பேர்லின் விமான நிலையத்தை திறந்து வைப்பதில் சிக்கல்

பெர்லின், டிசெ.29


ஜேர்மனின் பேர்லின் விமான நிலையம் திறப்பதில் பல்வேறு சிக்கல்கள் நிலவுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதுகுறித்து ஜேர்மன் போக்குவரத்து துறை அமைச்சர் பீட்டர் ராம்சேயர் தெரிவிக்கையில்,

''ஜேர்மனியின் பேர்லின் விமான நிலையத்தின் திட்டங்களும், செலவுகளும் அதிகரித்து கொண்டே போகின்றது. இதனால் திறப்பு விழா தாமதமாகிறது மேலும், இரண்டு பில்லியன் யூரோ செலவில் கட்ட திட்டமிடப்பட்ட இந்த விமான நிலையத்துக்கு இதுவரையில் 4.3 பில்லியன் யூரோ வரை செலவாகி உள்ளது. இருப்பினும் பணிகள் இன்னும் முடிவடையவில்லை. தற்போதும் தீ விபத்தின் போது முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்த பணிகள் முடிவடையாத காரணத்தினால் ஒத்திவைக்கப்பட்டுள்ளது''- என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 700 ஆண்டுகள் பழமையான டைனோசர் எலும்புகளை கடத்தியவர் கைதானார்



நியூயோர்க், டிசெ.29

700 ஆண்டுகள் பழமையான டைனோசர் எலும்புக் கூட்டைக் கடத்திய அமெரிக்கர் கைது செய்யப்பட்டுள்ளார்.

புளோரிடாவைச் சேர்ந்த எரிக் புரேக்கோப்பி (வயது 38) என்பவர் மங்கோலியாவிலிருந்து 70 மில்லியன் பழமையான டைனோசர் உட்பட புதைபொருள் படிவங்களை அமெரிக்காவுக்கு கடத்தி வந்துள்ளார்.

கடந்த ஜூன் மாதம் மங்கோலிய அரசு தங்கள் நாட்டில் இருந்து டைனோசர் எலும்புக்கூடு திருடப்பட்டுவிட்டதாக அறிவித்தது சர்வதேசப் பொலிஸ் உதவியுடன் தேடுதல் வேட்டையை தொடங்கியது.

இந்தநிலையில் கடத்திய பொருள்களை இணையத்தில் எரிக் ஏலம் விட்டபோது மாட்டிக்கொண்டார். அவரைக் கைது செய்த பொலிஸார், அவரிமிருந்த புதைப் படிவங்களை கைப்பற்றியதுடன் நியூயோர்க் நீதிமன்றத்தில் ஒப்படைத்தனர்.

தற்போது இந்தப் புதைப்படிவங்களை மங்கோலியாவிடம் ஒப்படைக்கும் நடவடிக்கையில் அமெரிக்கா ஈடுபட்டுள்ளது.

## 1 பில்லியன் டொலரை மீளளிக்க இணக்கம்

டோக்கியோ, டிசெ.29

அமெரிக்காவில் இருந்து தமது வாகனங்கள் மீளப் பெறப்பட்டமைக்காக ஒரு பில்லியன் டொலர்களை வழங்க ஜப்பானின் முன்னணி கார் தயாரிப்பு நிறுவனம் இணக்கம் தெரிவித்துள்ளது.

தமது தாயாரிப்புகளில் ஏற்பட்ட கோளாறினால் உலகளாவிய ரீதியில் 2009 ஆம் ஆண்டில் இருந்து 14 மில்லியனுக்கும் அதிகமான வாகனங்களை குறித்த நிறுவனம் மீளப்பெற்றுள்ளது.

இதனையடுத்து குறித்த நிறுவனத்தின் வாகனங்களை கொள்வனவு செய்த நூற்றுக்கணக்கான அமெரிக்க உரிமையாளர்கள் வழக்குத் தாக்கல் செய்துள்ள நிலையில் இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

இந்த இணக்கப்பாட்டிற்கான அனுமதியை அமெரிக்க நீதிமன்றம் வழங்க வேண்டும் என்பதுடன் அடுத்தவாரம் இது தொடர்பாக நீதிமன்றம் பரீட்சிக்கவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

## 28 முட்டைகளை போட்டிக்கு உண்டவர் உயிரிழந்தார்

நண்பர்கள் வைத்த பந்தயத்தில் போட்டி போட்டு 28 முட்டைகள் சாப்பிட்ட வாலிபர் வயிற்று வலியால் உயிரிழந்தார்.

துனிசியா நாட்டின் எல்-பேட்டன் பகுதியை சேர்ந்தவர் தாவூ பட்னாசி (வயது 20). இவர் தன் நண்பர்களிடம் வேக வைக்காத 30 முட்டைகளை ஒரே சமயத்தில் சாப்பிட்டு காண்பிப்பதாக பந்தயம் கட்டினார்.

இதற்கு நண்பர்கள் ஒப்பு கொண்டதால் வேகமாக முட்டைகளை உடைத்து வாயில் ஊற்றிக் கொண்டார்.

28 முட்டைகளை விழுங்கிய பட்னாசிக்கு அதற்கு மேல் சாப்பிட முடியவில்லை. ஒரு கட்டத்தில் அவருக்கு கடுமையான வயிற்றுவலி ஏற்பட்டது.

அதையடுத்து மருத்துவமனைக்கு அழைத்து செல்லப்பட்டார். ஆனால் வழியிலேயே இவர் இறந்து விட்டார் என்று தெரிவிக்கப்படுகிறது.

## ரஷ்யக் குழந்தைகளைத் தத்தெடுக்க அமெரிக்கர்களுக்கு வருகிறது தடை

### ரஷ்ய நாடாளுமன்றில் சட்டமூலம் நிறைவேற்றம்

மொஸ்கோ, டிசெ.29

ரஷ்ய குழந்தைகளை அமெரிக்கர்கள் தத்தெடுப்பதை தடுக்கும் சட்டத்துக்கு ரஷ்ய நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒருமனதாக ஆதரவு அளித்துள்ளனர்.

ஜனாதிபதி விளாடிமிர் புடினின் ஒப்புதலுக்கு இந்தச் சட்டமூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. ரஷ்யாவில் 7 லட்சத்து 40 ஆயிரத்துக்கும் அதிகமான குழந்தைகள் பெற்றோர் ஆதரவின்றி தவிப்பதாக யுனிசெப் புள்ளி விவரம் வெளியிட்டுள்ளது.

இந்தநிலையில் ரஷ்ய குழந்தைகளை தத்தெடுக்க அமெரிக்கர்கள் ஆர்வம் காட்டி வருகின்றனர். கடந்த 20 ஆண்டுகளில் 60 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ரஷ்யக் குழந்தைகளை அமெரிக்க தம்பதிகள் தத்தெடுத்துள்ளனர். இதற்கு பலர் கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர்.

ரஷ்யா போன்ற உலகின் பெரிய நாடுகள் தங்கள் நாட்டு குழந்தைகளை விற்க கூடாது' என்று ஒருதரப்பினர் வலியுறுத்தி வருகின்றனர்.

ஆனால் ஒருசாரார் ''ஆதரவற்ற குழந்தைகளை அமெரிக்கர்கள் தத்தெடுப்பதன் மூலம் அவர்களின் எதிர்காலம் வளமாகும். அத்துடன் பெற்றோர் இன்றி தவிக்கும் குழந்தைகளை ரஷ்யர்கள் தத்தெடுப்பதை ஊக்குவிக்கும்'' என்று கூறுகின்றனர்.

இந்தநிலையில் மனித உரிமை மீறும் ரஷ்யர்களை தண்டிக்க வகை செய்யும் வகையில் அமெரிக்காவில் சமீபத்தில் சட்டம் கொண்டு வரப்பட்டது.

இதற்கு பதிலடி கொடுக்கும் வகையிலேயே ரஷ்ய குழந்தைகளை அமெரிக்கர்கள் தத்தெடுப்பதை தடுக்க வகை செய்யும் சட்டம் நாடாளுமன்றத்தில் நேற்று கொண்டு வரப்பட்டது.

இந்த சட்டத்துக்கு நாடாளுமன்ற மேலவையின் 143 உறுப்பினர்களும் ஒருமனதாக ஆதரவு அளித்து நிறைவேற்றினர்.

இதனால் ரஷ்ய அமெரிக்க உறவில் நெருக்கடி அதிகரித்துள்ளது.


**விளம்பரத் தொடர்புகளுக்கு:** advt@uthayan.com

**முதலாம் ஆண்டு நினைவஞ்சலி**



மண்ணகம் 18 ★ 07 ★ 1946

விண்ணகம் 09 ★ 01 ★ 2012

அமரர் இராமப்பிள்ளை சேதுராசா

(ஓய்வு பெற்ற கிராம உத்தியோகத்தர் தரம் -1)

(திதி: துரும்பிறை பிரதமை (29/12/2012))

எம் அகத்தின் அகல் விளக்கு அணைந்து ஆண்டொன்று ஆனதுவா ?
கடமையே கண்ணென்ற கிராமசேவகர்--- எம் குடும்ப அன்புத் தலைவர்
நிம்மதியாய் நீள் துயில் கொண்டார் !
அன்றிருந்து நாம் இணையிழந்த அன்றிலென்றானோம்!
இன்று அன்னாரின் நினைவோடு பிரார்த்தித்து நிற்கின்றோம்.

பாரதி லேன், சுண்டுக்குளி.

நினைவுகளுடன் குடும்பத்தினர்.

**விண்ணப்பிக்கவும்**

* தரம் 3 முதல் O/L வரையான பாடங்களை கற்பிக்கும் ஆசிரியர்கள். (தரம்-பாடம் அனுபவம் ஆகியவற்றை குறிப்பிடவும்)
* லிகிதர்,கணினி இயக்குநர், சிற்றூழியர் (பெண்கள் மட்டும்)

விண்ணப்பங்களை 08.01.2013 திகதிக்கு முன் சமர்ப்பிக்கவும்.

95, பிரதானவீதி, யாழ்ப்பாணம்.

இயக்குநர் நியூ பிறைற் கல்வி நிலையம்.

(27298) (6.4)

**காணி விற்பனைக்கு**

கொக்குவில் கிழக்கில், கோணாவளை ஒழுங்கையில், குழாய்க் கிணற்றுடனும், சுற்று மதிலுடனும், உள்ள 5 பரப்பு ஒரு குளி காணி உடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 077 9263973,0771040992

(5.6)

**போக்குவரத்து சேவை**

பூநகரிப்பிரதேச ஆசிரியர்களுக்கு

தொடர்பு: 0770687621 0778445788, 0778503176

(5.6)

**HAPPY 60th BIRTH DAY**

TO OUR DEAREST TEACHER

MINNOLIVATHANA (B.A)

ON

29.12.2012

WISHING FROM:

Kulendran Family (U.K)

(27236)(6.1) 00447769185592

**மலேசியாவில் உடனடி வேலை வாய்ப்பு**

கீழ்க்காணும் பிரபல்யமான கம்பனிகளில் உடனடி வேலைவாய்ப்புக்கள்

★ Samsung Company
★ Farm Oil Company
★ Cleaning Company

மற்றும்

★பாதுகாப்பு உத்தியோகத்தர்கள்

(27300)(5-6)

தொடர்பு: 077 945 9569, 077 254 9296, 077 244 9058

**நன்றி நவிலல்**

23.11.2012 அன்று சிவபதமடைந்த

என் அருமைத் தம்பி அமரர் கனகசபை அருளையா

அவர்களின் பிரிவுச் செய்தி அறிந்து உடன் வந்து ஆறுதல் கூறியும் எமது துயரத்தில் பங்கு கொண்டு உடன் கருமங்கள் ஆற்றியும் பல வகைகளில் உதவி புரிந்தும் துண்டுப் பிரசுரங்களை வெளியிட்ட வவுனியா ஆதி விநாயகர் ஆலய பரிபாலன சபையினருக்கும் மற்றும் உறவினர்கள்,நண்பர்கள் அனைவருக்கும் எனது இதய பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

'பழ முதிர்சோலை' காரைநகர். கனகசபை தர்மகுலசிங்கம்.

(27114) (6.4)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கில் வெள்ளப் பாதிப்புகள்; கூடுதல் ஒதுக்கீடு தேவை

## அமைச்சர் அமரவீரவிடம் முதலமைச்சர் கோரிக்கை

திருகோணமலை,டிசெ.29

கிழக்கு மாகாணத்தில் திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மாவட்டங்களில் வெள்ள இடரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உலர் உணவுப் பொருள்கள், மருந்து வகைகள் வழங்குவதற்காக கூடுதல் நிதியை ஒதுக்க வேண்டும்.

இவ்வாறு கிழக்கு மாகாண முதலமைச்சர் நஜீப். ஏ. மஜீத், இடர் முகாமைத்துவ அமைச்சர் மஹிந்த அமரவீரவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.



பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்கும் பணியை உடன் ஆரம்பிக்குமாறு மாவட்ட அரச அதிபர்களுக்கு அமைச்சர் அறிவிப்பு.



இயற்கை இடர்களினால் ஏற்பட்டுள்ள பாதிப்புகள் குறித்து மூன்று மாவட்டங்களில் அரச அதிபர்களிடம் இருந்து முதலமைச்சர் பூரண அறிக்கைகளைப் பெற்றுக் கொண்டுள்ளார்.

அதனையடுத்தே முதலமைச்சர் இடர் முகாமைத்துவ அமைச்சரிடம் அந்த வேண்டுகோளை விடுத்துள்ளார்.

இடர்முகாமைத்துவ அமைச்சர் முதமைச்சருடன் தொடர்புகொண்டு அரச அதிபர்களுக்குத் தேவையான நிதியை வழங்குவதாகவும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்கும் பணியை உடன் ஆரம்பிக்கும் படி மாவட்ட அரச அதிபர்களுக்கு உத்தரவிட்டுள்ளேன் என்றும் தெரிவித்தார்.

இதேவேளை தேங்கி நிற்கும் வெள்ள நீரை வெளியேற்ற நடவடிக்கை எடுக்குமாறும், பாதிக்கப்பட்டவர்களுக்கு தற்காலிகத் தங்குமிட வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்குமாறும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு முதலமைச்சர் உத்தரவிட்டுள்ளார். (ச-40)

## பாதிக்கப்பட்ட மக்களுக்கு அமெரிக்க நிறுவனம் உதவி

### வழங்கினார் யோகேஸ்வரன் எம்.பி.




மட்டக்களப்பு,டிசெ.29

அமெரிக்க நிறுவன்ம் ஒன்றின் நிதி உதவி மூலம் மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏற்பட்ட வெள்ள இடரால் இடம் பெயர்ந்து இடைத்தங்கல் முகாமில் வாழும் மக்களுக்கு இந்து இளைஞர் பேரவை நிவாரணத்தை வழங்கியுள்ளது.

அந்த நிதி உதவி மூலம் வாகரைப் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள மாங்கேணி கிராம மக்களுக்கு அங்கர் பால் மாவை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சீ.யோகேஸ்வரன் வழங்கியுள்ளார்.

நிதி உதவியை வழங்கிய அமெரிக்க நிறுவனத்துக்கு மட்டக்களப்பு மாவட்ட இந்து இளைஞர் பேரவையும், மக்களும் நன்றி தெரிவித்துள்ளனர். (ச)

## 10,000 ஏக்கர் நெற்செய்கை வெள்ளத்தில் மூழ்கியது

### மூதூர் பிரதேச விவசாயிகள் கவலை

திருகோணமலை,டிசெ.29

சீரற்ற காலநிலையால் மூதூர் பிரதேச செயலகப் பிரிவில் 10 ஆயிரம் ஏக்கர் நெற்செய்கை வெள்ளத்தில் மூழ்கியுள்ளது என்று விவசாயிகள் கவலை தெரிவித்தனர்.

தற்போது மழை ஓய்ந்துள்ள நிலையில், வயல் நிலங்களில் இருந்து நீர் வடிந்துவருகின்றபோதும் ஒரு வாரத்துக்கு மேலாக நெற்கதிர்கள் அதன் ஆரம்பப் பருவத்தில் வெள்ளத்தில் மூழ்கி நாசமாகின என்று விவசாயிகள் கவலை தெரிவித்தனர். கடந்த ஆண்டுகளிலும் வெள்ளம் மற்றும் வறட்சியால் இந்தப் பிரதேசத்திலுள்ள விவசாயிகளுக்கு பெருமளவான வருமான இழப்பு ஏற்பட்டது.

அந்தநிலையில் மீண்டும் மழை, வெள்ள இடரால் விவசாயிகள் பாதிப்புக்குள்ளாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-40)

## பெரஹராவை பயன்படுத்தி நிதி சேகரித்தோர் பிடிபட்டனர்

### 9 பேருக்குச் சிறை

நுவரெலியா,டிசெ.29

சிவனொளிபாதமலை சென்றுகொண்டிருந்த பெரஹராவுக்கு முன்பாக நின்று சட்டவிரோதமான முறையில் நிதி சேகரித்த 12 பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

எட்டியாந்தோட்டப் பகுதியில் வைத்தே அவர்கள் சட்டவிரோதமான முறையில் நிதி சேகரித்துள்ளனர்.

பொதுமக்களிடமிருந்து 100,000 ரூபாவை அவர்கள் சேகரித்துள்ளனர் என்று பொலிஸார் கூறினர்.

சிவனொளிபாதமலையின் நிர்வாகத்தின் அனுமதி இன்றி குறித்த நபர்கள் பொதுமக்களிடம் நிதியை சேகரித்துள்ளனர் என்று பொலிஸார் கூறினர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட 12 பேரையும் நீதிமன்றத்தில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை முன்னிலைப்படுத்திய போது அவர்களில் 9 பேரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். மற்றைய மூன்று பேரையும் பிணையில் நீதிமன்றம் விடுதலை செய்துள்ளது. (ச)



அமைச்சர் பி. தயாரத்னவின் 35 வருட கால அரசியல் வாழ்வை கௌரவித்து கடந்த [illegible] அம்பாறையில் விழா நடைபெற்றது. அந்நிகழ்வில் சபாநாயகர் சமல் ராஜபக்ஷ, [illegible] நிமல் சிறிபால டி. சில்வா, அநுரா [illegible] செனவிரத்ன, பந்துல குணவர்தன, மஹிந்த அமரவீர, கிழக்கு மாகாண ஆளுநர் மொஹான் விஜயவிக்கிரம மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

## பன்பாய் உற்பத்திக்கு உபகரணங்கள்

மட்டக்களப்பு,டிசெ.29

சுயதொழில் திட்டத்தின் கீழ் காத்தான்குடி பிரதேச செயலர் பிரிவிலுள்ள குடும்பங்களுக்கு பன்பாய் உற்பத்திக்கான உபகரணங்கள் வழங்கப்பட்டன.



அந்த நிகழ்வில் காத்தான்குடி பிரதேச செயலர் எஸ். எச்.முஸம்மில், காத்தான்குடி சமுர்த்தி தலைமையக முகாமையாளர் இ.குணரட்ணம், பிரதேச செயலக அபிவிருத்தி உதவியாளர் எஸ்.லிங்கேஸ்வரன் ஆகியோர் கலந்துகொண்டனர். (ச)

## மலையக ரயில் சேவைகள் நானுஓயா வரை மட்டுமே

நுவரெலியா,டிசெ.29

மலையகத்துக்கான ரயில் சேவைகள் நானுஓயாவரை மட்டுப்படுத்தப் பட்டுள்ளன என்று நாவலப்பிட்டி கட்டுப்பாட்டு நிலையம் தெரிவித்துள்ளது.

கோட்டை ரயில் நிலையத்திலிருந்து பதுளை நோக்கிப் பயணிக்கும் ரயில்கள் நானுஓயா ரயில் நிலையம் வரை மட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

ஒய்ய மற்றும் இதல் கஸ் இன்ன ரயில் நிலையங்களுக்கு இடையிலான ரயில் பாதையில் கற்பாறைகள் வீழ்ந்துள்ளதாலேயே இவ்வாறு ரயில்சேவை மட்டுப்படுத்தப் பட்டுள்ளது என்று நாவலப்பிட்டி கட்டுப்பாட்டு நிலையம் தெரிவித்துள்ளது. (ச)

## வெள்ளத்தால் சூழப்பட்டது காத்தான்குடி பாடசாலை



மட்டக்களப்பு,டிசெ.29

கடந்தவாரம் மட்டக்களப்பு மாவட்டத்தில் பெய்த கடும் மழையால் காத்தான்குடியிலுள்ள சில பாடசாலைகள் வெள்ளத்தால் முற்றாகப் பாதிப்புற்றன.

அந்தநிலையில் சில இடங்களில் வெள்ளம் வடிந்துள்ளபோதிலும், புதிய காத்தான்குடி அன்வர் வித்தியாலயம் இன்னமும் வெள்ளத்தால் சூழப்பட்டுள்ளது.

அந்தப் பாடசாலை வளாகத்துக்குள் வெள்ளம் தேங்கி நிற்பதால் டெங்கு நுளம்பு பெருகுவதற்கான வாய்ப்பு காணப்படுப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச)

## காட்டு யானை தாக்குதலில் இளைஞர் படுகாயம்

மட்டக்களப்பு,டிசெ.29

மட்டக்களப்பு மாவட்டத்தின் பெரியபுல்லுமலை, கொச்சித்தோட்டம் பகுதியில் காட்டு யானையின் தாக்குதலுக்கு இலக்காகி இளைஞன் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

அவர் சிகிச்சைக்காக கரடியனாறு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அண்மைக்காலமாக யானைகளின் அட்டகாசங்கள் அதிகரித்து வருகின்றன.

இதுதொடர்பில் பல்வேறு தடவைகள் உரிய அதிகாரிகளுக்கு அறிவித்தபோதிலும், எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று மக்கள் தெரிவித்தனர். (ச)

## மாணவர்களுக்கு புத்தகப்பைகள்



மட்டக்களப்பு,டிசெ.29

மட்டக்களப்பு,காத்தான்குடி சமூக மதிப்பீட்டுக்கான நிறுவனத்தின் ஏற்பாட்டில் பெற்றோரை இழந்த மற்றும் வறிய மாணவர்களுக்கு புத்தகப்பைகள் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை வழங்கப்பட்டன.

சமூக மதிப்பீட்டுக்கான நிறுவனத்தின் தலைவர் இல்மி அஹமட் லெவ்வை தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் திருமதி பி.எஸ்.எம்.சாள்ஸ் உட்பட பலர் கலந்துகொண்டனர். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நட்டஈட்டுத் தொகையை செலுத்தினார் ராஜரட்ணம்

## அமெ.பங்கு பரிமாற்ற ஆணைக்குழுவுக்கு

அமெரிக்கப் பங்குச் சந்தையில் உட்சந்தை மோசடி தொடர்பில் சிறையில் அடைக்கப்பட்டுள்ள அமெரிக்க கோடீஸ்வரர் ராஜ் ராஜரட்ணம், தம்மீது சுமத்தப் பட்டிருந்த குடியியல் வழக்கில் நட்ட ஈட்டு தொகையை செலுத்தியுள்ளார்.

அமெரிக்க பங்கு பரிமாற்ற ஆணைக்குழுவுக்கு மேற்படி நட்ட ஈட்டை அவர் செலுத்தியுள்ளார். இதனை யடுத்து அந்த வழக்கு பிரச்சினை நேற்று முன்தினம் தீர்க்கப்பட்டுள்ளது.

எனினும் அவருக்கு எதிராகச் சுமத்தப்பட்டுள்ள ஏனைய குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் அவர் தொடர்ந் தும் சிறையில் அடைக்கப் பட்டுள்ளார்.

2003- 2009 ஆம் ஆண்டு காலப்பகுதியில் அமெரிக்க பங்குசந்தையில் உட்சந்தை மோசடியில் ஈடுபட்டதாக சுமத்தப்பட்ட குற்றச் சாட்டில் ராஜரட்ணம் பங்குசந்தைக்கு 1.45 மில் லியன் டொலர்களை செலுத்த வேண்டியிருந்தது.

இலங்கையில் பிறந்த வரான ராஜரட்ணம், உட் சந்தை மோசடிக் குற்றச் சாட்டின் பேரில் 11 வருட சிறைத்தண்டனையை அனுபவித்து வருகிறார். (வ)

---

**பிரத்தியேக வகுப்புக்கள்**

வணிகக் கல்வி க.பொ.த (உ/த), க.பொ.த (சா/த)
அமைதியான சூழலில் பிரபல்யமான பாடசாலை களுக்கு அருகில் க.பொ.த (உ/த) -12,13, க.பொ.த (சா/த) 10,11 வகுப்புக்கள் 15 வருட அனுபவம் வாய் ந்த பிரபல கல்லூரி ஆசிரியரால் கற்பிக்கப்படுகின்றது.
இடம்:32,பேரின்ப நாயகம் வீதி,(கச்சேரிஅருகில்)
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.
தொடர்பு:0777046968. (27322) (6.4)

---

**திருமறைக் கலாமன்றம்**

அனைத்து அங்கத்தவர்களுக்குமான வருடாந்த ஒன்று கூடல்
காலம்:நாளை (30.12.2012) ஞாயிற்றுக்கிழமை
நேரம்: மாலை 5.00 மணி
இடம்: கலைத்தூது கலையகம்,
286,பிரதான வீதி,யாழ்ப்பாணம்
அனைத்து அங்கத்தவர்களும் தவறாது சமுகம் தரவும்
செயலாளர், திருமறைக் கலாமன்றம்,
யாழ்ப்பாணம். (c5125)(6.11)

---

**உதயன்**
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

---

**நடமாடும் சேவை**

கணினிகள், மற்றும் LED,LCD,TV கள், SCANNER,PRINTER,LAPTOP போன்றன உங்கள் இடங்களுக்கே வந்து உத்தரவாதத்துடனும் நம்பிக்கையுடனும் திருத்திக்கொடுக்கப்படும்.
(27097)(5-6-7) தொடர்பு:077 191 4725 கோப்பாய்.

---

**HERO HONDA விற்பனைக்கு**

Plesure-NPXL கறுப்பு (5000km) Super Splender NPXM கறுப்பு & சிவப்பு விற்பனைக்குண்டு.
T.P: 077 3913733 நெல்லியடி (25586)(6.4)

---

**Clerk தேவை**

யாழ். நகரில் உள்ள நிறுவனம் ஒன்றிற்கு Email இல் அனுபவ முள்ள பெண்கள் தேவை.
தொடர்பு: 077 841 8344 (27337)(6.4)

---



**நாட்டிய மயில் -2012**

ஈயூலங்கா போரம் நிறுவனத்தால் நடத்தப் பட்ட நாட்டிய மயில் போட்டியில் 18 மாணவர் களில் மூன்று அமர்வுகளில் தனது ஆடல் திறமையை உலகம் முழுவதும் பிரபல்யமாக்கிய எனது மன்றத்தின் முதன்மை ஆண் மாணவன்
செல்வன் **கணேசலிங்கம் பவன்**
(நடனத்துறை முதலாம் வருட மாணவன்-யாழ்ப்பாண பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைப்பீடம்)
அவர்களை மேன்மேலும் நாட்டியத்துறையில் பல பல பட்டங்கள் பெற்று பல நடன மணிகளை உருவாக்க எல்லாம் வல்ல ஆடல் வல்லானின் பாதாரவிந்தங்களை வேண்டி மன முவந்து பாராட்டி வாழ்த்துகின்றோம்.

இணுவையூர்
குமர நர்த்தனாலயம்
பாப்பாத் தோட்ட வீதி,
இணுவில் மேற்கு

Best Wishes

வாழ்த்துவோர்:
மன்ற நடன ஆசிரியர்
ந.குமரவேலும்
மாணவர்களும்.
(27210)(5-6)

---

**CHEMISTRY CENTRE**
**A/L 2015**
By: அன்பு
4 இடங்களில் ஆரம்பம்
- ★ 53, அராலிவீதி,ஒட்டுமடம் சந்தி அருகில்
- ★ மஞ்சவனப்பதி வடக்கு வீதி,கொக்குவில்
- ★ மானிப்பாய் மகளிர் கல்லூரிக்கு முன்பாக
- ★ பழம் வீதி, கந்தர்மடம் சந்தி

**A/L 2013**
**விசேட பிரிவு**
ஒரே வேளையில் Inorganic Organic, Physical

**A/L 2014**
Basic
Thermo
Group Class தேவையானவர்கள்
தொடர்பு: 077 069 0654 (27281)(5-6)

---

**தவறிவிட்டது**

கெருடாவில் தெற்கு, தொண்டமானாறு என்னும் முகவரியைச் சேர்ந்த கோவிந்தராசா மேகலா என்பவரது தேசிய அ.அட்டை (818522851V) 15.12.2012 அன்று உடுவிலுக்கும் தாவடிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தர்மலிங்கம் தூபியடி,தாவடி வடக்கு, கொக்குவில் என்னும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.
T.P 077 4266471 (27325)(6.4)

---

**அதிஷ்ட இலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்**

பருத்தித்துறை,சென்.தோமஸ் சனசமூக நிலையத்தினால் 2012. 12.27ஆம் திகதி யன்று நடத்தப்பட்ட சீட்டிழுப்பு நிகழ்வில் பரிசு பெற்றவர்கள் விவரம் வருமாறு.

| | |
|---|---|
| முதலாம் பரிசு இலக்கம் | : 1156 |
| இரண்டாம் பரிசு இலக்கம் | :1041 |
| மூன்றாம் பரிசு இலக்கம் | : 3182 |
| ஆறுதல் பரிசு இலக்கங்கள் | : 2742, 472, 1352, 3455, 1273, 297, 2727, 1248, 157,2237 |

பரிசிற்குரியவர்கள் அதிஷ்ட இலாபச் சீட்டுடன் பருத்தித்துறை சென்.தோமஸ் சனசமூக நிலையச் செயலாளர் ம.தயாளனுடன் தொடர்பு கொண்டு பரிசில்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்பு: 077 618 4467

தலைவர்,
பருத்தித்துறை சென். தோமஸ் சனசமூக நிலையம்
காற்கரை வீதி, பருத்தித்துறை. (சி/5120)(5.6)

---

**COME CELEBRATE NEW YEAR DINNER BUFFET WITH US MONDAY DECEMBER 31/12/2012**

Venue: SUBHAS HOTEL,
No. 49, Victoria Road, Jaffna.
Time: 7.30 p.m Onwards
Try our mouthwatering scumptious meal with your family and stand a chance to win a FREE NIGHT STAY* for one Lucky Family at our iconic subhas Hotel. Call to make your Reservations before 30th December 2012.*conditions Apply*
contact us:
021 222 4923, 0779726774 (c/5108)(6.11)

---

**NEW SCIENCE CENTRE**
**வெலிங்டன்சந்தி, யாழ்-நகர்.**

**A/L 2015**

| | |
|---|---|
| PHY | பிரபல ஆசிரியர் (கொழும்பு) பிரபா |
| CHE | அன்பழகன் (அன்பு) சுசாந்தன் |
| BIO MATHS | நித்தியானந்தன் தஜீகரன் |

ஆரம்பம் 30/12/2012
ஞாயிறு 9.00 a.m
(27282)(6)

---

**ஸ்ரீ லங்கா புத்தகசாலை**

முதல் தரமான NO-1 கொப்பிகள் பெற்றுக் கொள்ள நாட வேண்டிய ஒரே இடம். மிக மிகக் குறைந்த விலையில்
ஸ்ரீ லங்கா புத்தகசாலை,
இல. 254,கே.கே.எஸ். றோட்,
யாழ்ப்பாணம்.
T.P: 021 222 2573

**விலைப்பட்டியல்**

| | |
|---|---|
| 80P | 23/= |
| 120P | 30/= |
| 160P | 39/= |
| 200P | 48/= |

(c/5122)(6.11)

- ✱ வியாபாரிகளுக்கு விசேட விலைக் கழிவு வழங்கப்படும்.
- ✱ அனைத்து வாடிக்கையாளர்களின் நலன் கருதி ஞாயிற்றுக்கிழமையும் கடை திறக்கப்படும்.

---

**வீட்டுக்கிருத்திய அழைப்பு**

தோற்றம்
13.01.1938



மறைவு
01.12.2012

அமரர் **கந்தையா அம்பலவாணர்**

(ஓய்வு பெற்ற ஆய்வு கூட உதவியாளர், விக்ரோறியாக்கல்லூரி- சுழிபுரம்)

கடந்த 01.12.2012 சனிக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவரின் வீட்டுக் கிருத்திய கிரியைகள் நாளை (30.12.2012) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெற உள்ளது.
இந்நிகழ்வில் தாங்களும் தங்கள் குடும்பத்தினரும் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்குமாறு தங்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

நாக்கம் தோட்டம், வட்டுதென்மேற்கு,
வட்டுக்கோட்டை.
குடும்பத்தினர்.

---

**மரண அறிவித்தல்**

**சிவபாக்கியம் பழனியப்பா**



வேலணை மேற்கு, தலைகாட்டியைப் பிறப்பிடமாகவும், கரம்பன் கொன்றை, வேலணை 9ஆம் வட்டாரத்தை வசிப்பிடமாகவும், தற்போது லண்டனை வதிவிடமாகவும் கொண்ட சிவபாக்கியம் பழனியப்பா 24.12.2012 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடராசா - பொன்னம்மா தம்பதியரின் சிரேஷ்ட புத்திரியும், காலஞ்சென்றவர்களான தம்பிராசா-தங்கமுத்து தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற தம்பிராசா பழனியப்பாவின் அன்பு மனைவியும், அருளார் அமுதன் (லண்டன்), அருளார் அமலன் (சுவிஸ்), அருளாரூரன் (லண்டன்), அருளார்நிமலன் (சுவிஸ்), அருளார் அகிலன் (சுவிஸ்), அருள்கௌரி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயும், சித்திரா தேவி (லண்டன்), கனகாம்பிகை (சுவிஸ்), சுகந்தி (லண்டன்), ஜெயராணி (சுவிஸ்), சந்திரிகா (சுவிஸ்), கிருஸ்ண குமார் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமியும், காலஞ்சென்ற பரமசிவம் மற்றும் திலகவதி(ஓய்வு பெற்ற ஆசிரியர்-வேலணை சைவப்பிரகாச வித்தியாசாலை), சறோஜினிதேவி (லண்டன்), லக்சுமி (இந்தியா), பத்மாவதி, பாலசுப்பிரமணியம் (பொறியியளாளர், ஆஸ்திரேலியா), காலஞ்சென்ற திருஞானம் ஆகியோரின் சகோதரியும், திருஞானசம்பந்தமூர்த்தி (ஓய்வு பெற்ற சுங்க இலாகா அதிகாரி), கணபதிப்பிள்ளை (ஓய்வு பெற்ற ஆசிரியர்,வேலணை சைவப் பிரகாச வித்தியாசாலை), காலஞ்சென்ற குமாரவேலு மற்றும் கணபதிப்பிள்ளை, திலகவதி (ஆஸ்திரேலியா) ஆகியோரின் மைத்துனியும், காலஞ்சென்றவர்களான விசாலாட்சி, கணேஸ் மற்றும் மகாலட்சுமி (கனடா), மகாலிங்கம்(ஓய்வு பெற்றதபாலதிபர்), திருநாவுக்கரசு(கனடா) ஆகியோரின் அண்ணியும், காலஞ்சென்றவர்களான விசுவலிங்கம், இரத்தினாம்பிகை, இராமசாமி மற்றும் பொன் மயிலாம்பிகை, வள்ளிநாயகி(கனடா) ஆகியோரின் சகலியும், ராஜீவ், ரமேஷ், ரூபேஷ், கிருஷாந்த், கீர்த்தனா, சங்கவி, யதுர்ஷா, யர்ஷிதன், அபிராம், அக்சயன், பிரவீணா, பிரணாஸ் ஆகியோரின் அருமைப்பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (30.12.2012) ஞாயிற்றுக்கிழமை லண்டனில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொ.பே.:+41434950065,
+41797906591

தகவல்:
அகிலன் (மகன்) (27225)(6.11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஒரேசூலில் மூன்று குழந்தைகளைப் பெற்ற தமிழ்த் தாய் ஒருவருக்கு வீடு ஒன்றை அமைத்துக் கொடுப்பதற்காக ஒதுக்கப்பட்ட காணிக்கான உறுதியை முதல் பெண்மணி ஷிரந்தி ராஜபக்ஷ நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை கண்டி ஜனாதிபதி மாளிகையில் வைத்து வழங்கினார். இந்தக் குழந்தைகள் கடந்த 10ஆம் திகதி கண்டி வைத்தியசாலையில் பிறந்தமை குறிப்பிடத்தக்கது.

# வினாத்தாள் மோசடியில் ஈடுபட்டோருக்கு கடும் தண்டனை வழங்கப்பட வேண்டும்

## ஜனாதிபதியிடம் மஹா சங்கத்தினர் வேண்டுகோள்

கொழும்பு,டிசெ.29

பரீட்சைகளில் குளறுபடி ஏற்படும் பட்சத்தில் நாட்டிலும் நெருக்கடிகள் ஏற்படும். பிள்ளைகளின் எதிர்காலம் பெறுமதியானது. எனவே பரீட்சை வினாத்தாள் மோசடிக்காரர்களுக்கு கடும் தண்டனை வழங்க வேண்டும்.

இவ்வாறு மஹாசங்கத்தினர் ஜனாதிபதியிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இந்தநாட்டின் கல்வித்தரம் உயர் மட்டத்தில் காணப்படுகிறது .

எனினும் கல்வித்துறையின் முக்கிய இடத்தை வகிக்கின்ற அரச பரீட்சைகள் திணைக்களம், பல்வேறு மோசடிகளுக்கு உள்ளாகி வருகிறது என்று மஹா சங்கத்தினர் தெரிவித்தனர்.

எனவே, அந்த நிலையை இல்லாதொழிப்பதற்கு பரீட்சைகள் தொடர்பான மோசடிகளில் ஈடுபடுகின்ற அனைத்து நபர்களுக்கும் கடும் தண்டனை வழங்கப்பட வேண்டும் என்று அவர்கள் குறிப்பிட்டனர்.

இந்த ஆண்டு நடைபெற்ற ஜி.சீ.ஈ சாதாரண தரப் பரீட்சை வினாத்தாள் மோசடியில் ஈடுபட்ட அனை வரையும் கட்சி, தராதரம் பாராது தண்டனை வழங்க வேண்டும். எதிர்காலத்திலே அவ்வாறானதொரு நிலை ஏற்படாமல் இருப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

அவர்களுக்கு கடும் தண்டனை வழங்குவதற்கு நடைமுறையில் உள்ள சட்டங்களில் ஏற்பாடுகள் போதியதாக இல்லை. அதனால் புதிதாக சட்டங்களை நிறைவேற்றி தண்டனை வழங்க வேண்டும் என்று அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

இதுதொடர்பாக சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் கம்புறுகமுவே வஜிரதேரர் தெரிவித்ததாவது:-

இதுவரையில் பரீட்சைகள் திணைக்களத்தின்மீது இருந்த நம்பிக்கைக்கு பங்கம் ஏற்படும் வகையில் வினாத்ததாள் மோசடி இடம்பெற்றுள்ளது. எனவே அந்த மோசடியுடன் தொடர்புடையவர் களுக்கு கடும் தண்டனை வழங்க வேண்டும்.

இலட்சக் கணக்கான பிள்ளைகள் மற்றும் பெற்றோர்களின் நம்பிக்கைக்கு பங்கம் ஏற்படும் வகையில் அந்த மோசடி இடம்பெற்றுள்ளது.

அவ்வாறான செயற்பாடுகள் மூலம் பல்வேறு கஷ்டங்களுக்கு மத்தியில் கற்று பரீட்சைக்குத் தோற்றிய அப்பாவி மாணவர்கள் பாதிக்கப்படுகின்றனர்.-என்றார். (ச)

# ஆஸிக்கு ஆள்களை கடத்தும் நபரிடம் ரூபா $1\frac{1}{2}$ கோடி மீட்பு

## புலனாய்வுப் பிரிவினர் தெரிவிப்பு

கொழும்பு,டிசெ.29

சட்டவிரோதமான முறையில் படகு மூலம் ஆஸ்திரேலியாவுக்கு ஆள்களை கடத்திய நபரிடமிருந்து ஒன்றரைக் கோடி ரூபா பணம் மீட்கப்பட்டுள்ளது.

போதைப் பொருள் மற்றும் சட்டவிரோத ஆட்கடத்தல் வர்த்தகங்களுடன் தொடர்புடைய நபர் ஒருவரிடம் இருந்தே இவ்வாறு பணம் மீட்கப்பட்டுள்ளது என்று புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்தனர். சட்டவிரோத ஆள்கடத்தல் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கிய சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்ட நபர் ஒருவரின் வீட்டிலிருந்தே அந்தப் பணம் மீட்கப்பட்டுள்ளது.

அந்தப் பணம் கட்டிலுக்கு அடியில் மறைத்து வைக்கப்பட்டிருந்தது என்று புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்தனர். (ச)

# தனியார் பஸ் பயணத்துக்கு இனி முற்கொடுப்பனவு அட்டை

## 'டிக்கெட்' பெறத் தேவையில்லை; ஜனவரி முதல் புதிய நடைமுறை

கொழும்பு,டிசெ.29

தனியார் பஸ்களில் பயணம் செய்வதற்காக அனுமதிச்சீட்டுக்கு பதிலாக முற்கொடுப்பனவு அட்டை பயன்படுத்தும் புதிய நடைமுறை ஜனவரி மாதம் முதல் அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

இவ்வாறு தேசிய போக்குவரத்து ஆணைக்குழுத் தலைவர் ரொசான் குணவர்தன தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

முற்கொடுப்பனவு அட்டை அறிமுகம் செய்வதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் மொறட்டுவ மற்றும் ஜயவர்த்தனபுர பல்கலைக் கழகங்களினூடாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அது தொடர்பான கொடுக்கல்,வாங்கல் மத்திய வங்கியின் அனுமதியுள்ள வங்கி அல்லது நிதி நிறுவனத்தினூடாக மேற்கொள்ளப்படும்.

அந்தப் புதிய திட்டத்தினூடாக பஸ் உரிமையாளர்களும், பயணிகளும் நன்மையடையவுள்ளனர்.

பஸ் உரிமையாளர்களின் வருமானம் பாதுகாக்கப்படுவதோடு சாரதிகளும் நடத்துநர்களும் நிதி மோசடி செய்வதும் தடுக்கப்படும்.

அந்தப் புதிய திட்டத்தால் பஸ்ஸில் பயணிப்பவர்களுக்கு மிகுதிப் பணம் வழங்காத பிரச்சினை ஏற்படாது.



தொலைபேசி முற்கொடுப்பனவு அட்டை போன்று அதனைப் பயன்படுத்த முடியும். அந்த அட்டை மீளப் பயன்படுத்தக் கூடியதாகவும் இருக்கும்-என்றார். (ச)

### ஆஸ்திரேலியாவில் இருந்து

# நாடு கடத்தப்பட்டோர் கட்டுநாயக்கவில் கைது

கொழும்பு,டிசெ.29

ஆஸ்திரேலியாவிலிருந்து நாடு கடத்தப்பட்டவர்கள் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

சட்டவிரோதமான முறையில் படகு மூலம் குறித்த நபர்கள் ஆஸ்திரேலியாவுக்குள் பிரவேசித்திருந்தனர் என்று கூறப்பட்டது. அவ்வாறு பிரவேசித்த 46 பேரை ஆஸ்திரேலிய அரசு விசேட விமானம் ஒன்றின் மூலம் நாடு கடத்தியிருந்தது.


நாடு கடத்தப்பட்டவர்கள் நீர்கொழும்பு நீதிவான் சமுகத்தில் முன்னிலை செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்களில் 38 பேர் தலா ஐந்து லட்ச ரூபா சரீரப் பிணையில் விடுதலை செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்களில் 38 பேர் தலா ஐந்து லட்ச ரூபா சரீரப் பிணையில் விடுதலை செய்யப்பட்டனர்.

மாத்தறை, காலி, எம்பிலிபிட்டிய, யாழ்ப்பாணம் , வவுனியா ஆகிய இடங்களைச் சேர்ந்தவர்களே இவ்வாறு சட்டவிரோதமான முறையில் ஆஸ்திரேலியாவுக்குப் பயணம் செய்து திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர். (ச)

# தபோவன நீர்த்தேக்கத்தின் 14 வான் கதவுகள் திறப்பு



கொழும்பு,டிசெ.29

புத்தளத்தில் பெய்த கடும் மழையைத் தொடர்ந்து தபோவன நீர்த்தேக்கத்தின் நீர் மட்டம் அதிகரித்துள்ளது.

அதனால் 14 வான் கதவுகளும் திறக்கப்பட்டுள்ளன. இதேவேளை மழை தொடர்ந்து பெய்தால் நீர்த்தேக்கத்தின் மேலும் சில கதவுகள் திறக்கப்படும் என்று நீர்ப்பாசனத் திணைக்கள அதிகாரி தெரிவித்தார்.

கலா ஓயா, தெதுறு ஓயா என்பனவற்றின் நீர் மட்டம் அதிகரித்துள்ளது. எனவே அதனை அண்மித்து வாழும் மக்கள் அவதானமாக இருக்க வேண்டும் என்று இடர் முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது. (ச)

# பிரதம நீதியரசருக்கு எதிரான விசாரணை பக்கச்சார்பானது

## அதனாலேயே வெளிநடப்புச் செய்தோம் என்கிறார் கிரியெல்ல

கொழும்பு,டிசெ.29

பிரதம நீதியரசருக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம் குறித்த விசாரணை பக்கச்சார்பான முறையில் நடத்தப்பட்டது. அதனாலேயே வெளிநடப்புச் செய்தோம். இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

விசாரணைகள் சுயாதீனமானதாக நடைபெற்றன என்று நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் தலைவர் அமைச்சர் அனுர பிரியதர்சன யாப்பா வெளியிட்ட கருத்து நகைப்புக்குரியது என்ற அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பிரதம நீதியரசரை பதவி விலக்க வேண்டும் என்ற நோக்கத்தில் அரசு ஆரம்பம் முதல் செயற்பட்டு வருகிறது. பக்கச்சார்பான முறையில் விசாரணைகள் நடத்தப்பட்டன என்பதை ஏற்றுக்கொள்ள முடியாது. பிரதம நீதியரசருக்கு வழங்கப்பட்ட ஆவணங்கள் குறித்து எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு முன்கூட்டி அறிவிக்கப்படவில்லை.

திட்டமிட்ட வகையில் ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் பிரதம நீதியரசருக்கு எதிரான விசாரணைகளை நடத்தியுள்ளனர்.-என்றார். (ச)

# வெள்ள நிவாரணப் பொருள்கள் சேகரிப்பு நடவடிக்கை ஆரம்பம்

கொழும்பு,டிசெ.29

நாட்டில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணப் பொருள்களை சேகரிக்க கொழும்பு விவேகானந்தா கல்லூரியின் பழைய மாணவர் சங்கம் முன்வந்துள்ளது.

அதற்கமைய உலர் உணவுப் பொருள்களை வழங்க விரும்பும் நலன்விரும்பிகள் அவற்றை இன்று சனிக்கிழமை முதல் எதிர்வரும் 4 ஆம் திகதி வரை கொழும்பு 13, புதுச் செட்டித்தெருவில் அமைந்துள்ள கல்லூரியில் கையளிக்கலாம் என்று குறித்த கல்லூரியின் பழைய மாணவர் சங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பான மேலதிக தகவல்களை 077660 0993, 0755222888, 0777 894460 ஆகிய தொலைபேசி இலக்கங்கள் ஊடாக பெற்றுக்கொள்ளலாம் என்று பழைய மாணவர் சங்கம் அறிவித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேஷம்:** சகோதரரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். வியாபாரத்தில் புதிய முதலீடு செய்யலாம். உத்தியோகத்தில் மூத்த அதிகாரிகள் முக்கிய அறிவுரைகள் வழங்குவார்கள். நீண்ட நாள் பிரார்த்தனைகளை நிறைவேற்றுவீர்கள்.

**இடபம்:** வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். தைரியமாக சில முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள். உத்தியோகத்தில் வேலைச்சுமை குறையும். மேலதிகாரி ஆதரிப்பார். நட்பு வட்டம் விரிவடையும். தாழ்வு மனப்பான்மை நீங்கும்.

**மிதுனம்:** தேவையற்ற அலைச்சலுக்கு ஆளாடுவீர்கள். நீங்கள் ஒன்று பேசப் போய் மற்றவர்கள் அதை வேறுவிதமாகப் புரிந்து கொள்வார்கள். வியாபாரத்தில் வேலையாள்களால் இழப்புகள் ஏற்படும். உத்தியோகத்தில் மறைமுக விமர்சனங்கள் உண்டு.

**கடகம்:** திட்டமிட்ட காரியங்களை அலைந்து முடிக்க வேண்டி வரும். வெளிவட்டாரத்தில் யாரையும் விமர்சித்துப் பேச வேண்டாம். தாழ்வுமனப்பான்மை வந்து நீங்கும். வியாபாரத்தில் புதிய முதலீடு செய்யலாம். உத்தியோகத்தில் சக ஊழியர்களிடம் விட்டுக் கொடுத்து போங்கள்.

**சிம்மம்:** உறவினர்களின் அன்புத் தொல்லைகள் விலகும். எதிர்பாராத பணவரவு உண்டு. வழக்குகள் சாதகமாகும். வியாபாரத்தில் திடீர் லாபம் உண்டு. உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள்.

**கன்னி:** சகோதர வகையில் நன்மை கிட்டும். வெளிவட்டாரத்தில் கௌரவம் கிட்டும். வியாபாரத்தில் அதிரடி மாற்றம் செய்து இலாபம் ஈட்டுவீர்கள். உத்தியோகத்தில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும்.

நாளை

மார்கழி -15 ஞாயிற்றுக்கிழமை 30.12.2012
திதி: துதியை மு.இ 07.15 வரை
நட்சத்திரம்: புநர்பூசம் கா. 08.11 வரை
சுபநேரம்: 09.29- 10.59 வரை
ராகுகாலம்: 04.59- 06.29 வரை

**துலாம்:** சகோதரர்களால் பயனடைவீர்கள். அரசால் அனுகூலம் உண்டு. உங்கள் பலம் பலவீனத்தை உணர்வீர்கள். வியாபார ரீதியாக பிரபலங்களைச் சந்திப்பீர்கள். உத்தியோகத்தில் மேலதிகாரி உங்களை முழுமையாக நம்புவார்.

**விருச்சிகம்:** செலவுகளைக் குறைக்க முடியாமல் திணறுவீர்கள். சிறுசிறு அவமானம் ஏற்படக்கூடும். அடுத்தவர்கள் மனம் காயப்படும்படி பேசாதீர்கள். உத்தியோகத்தில் வளைந்து கொடுத்துப் போவது நல்லது.

**தனுசு:** உறவினர்கள் ஒத்துழைப்பார்கள். இங்கிதமாகப்பேசி கடினமான காரியங்களையும் சாதிப்பீர்கள். பிரபலங்களின் நட்பு கிடைக்கும். உத்தியோகத்தில் மேலதிகாரிகள் அதிசயிக்கும்படி நடந்து கொள்வீர்கள்.

**மகரம்:** உறவினர்கள் பாராட்டுவார்கள். எதிர்பார்த்த வேலைகள் தடையின்றி முடியும். நண்பர்களால் ஆதாயமடைவீர்கள். வியாபாரத்தில் அனுபவம் உள்ள வேலையாள்கள் அமைவார்கள். உத்தியோகத்தில் சவாலான வேலைகளையும் சாதாரணமாக முடிப்பீர்கள்.

**கும்பம்:** புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். நல்ல நண்பர்களைச் சந்திப்பீர்கள். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். உத்தியோகத்தில் மதிக்கப்படுவீர்கள். மாணவர்கள் பரபரப்புடன் காணப்படுவார்கள்.

**மீனம்:** எதிர்பார்த்த இடத்திலிருந்து நல்ல செய்திகள் வந்து சேரும். உடன்பிறந்தவர்களால் ஆதாயம் உண்டு. வியாபாரத்தில் மறைமுகப் போட்டிகளை வெல்வீர்கள். உத்தியோகத்தில் மதிக்கப்படுவீர்கள்.

## சுடோக்கு

### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 9 | | 1 | | | 2 |
| | | 5 | | | 2 | | 3 | |
| 2 | | 7 | 3 | 6 | 8 | | | |
| | 7 | | 4 | | | 6 | 5 | 8 |
| | 3 | | | | | | 1 | |
| 1 | 6 | 8 | | | | | 9 | |
| | | | 5 | 3 | 6 | 8 | | 9 |
| | 8 | | 1 | | | 3 | | |
| 6 | | | 8 | | | | | |

### சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 7 | 2 | 6 | 4 | 5 | 8 | 9 | 1 |
| 8 | 6 | 9 | 1 | 2 | 7 | 5 | 4 | 3 |
| 5 | 4 | 1 | 8 | 9 | 3 | 2 | 6 | 7 |
| 1 | 2 | 6 | 7 | 5 | 8 | 9 | 3 | 4 |
| 7 | 3 | 8 | 4 | 6 | 9 | 1 | 2 | 5 |
| 4 | 9 | 5 | 3 | 1 | 2 | 7 | 8 | 6 |
| 2 | 1 | 4 | 9 | 7 | 6 | 3 | 5 | 8 |
| 9 | 8 | 7 | 5 | 3 | 4 | 6 | 1 | 2 |
| 6 | 5 | 3 | 2 | 8 | 1 | 4 | 7 | 9 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1 – 9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3 ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1 – 9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள்பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1 – 9 இலக்கங்கள் இரட்டிப்படையாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



தோற்றம்
26.01.1992

மறைவு
30.11.2012

# இந்திரன் இராகுலன்

கடந்த 30.11.2012 வெள்ளிக்கிழமை சிவபதமடைந்த எங்கள் அன்புச் செல்வன் இந்திரன் இராகுலனின் அந்தியேட்டிக்கிரியைகள் நாளை (30.12.2012) ஞாயிற்றுக்கிழமை காலை 5.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அந்நிகழ்விலும் தொடர்ந்து நடைபெறும் வீட்டுக்கிருத்தியத்திலும், மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

***குறிப்பு: அழைப்புக் கிடைக்கப் பெறாதவர்கள் இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தருமாறு மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றோம்.***

குடும்பத்தினர்.

**குலானை, கரவெட்டி மத்தி,**
**கரவெட்டி.**

கஜமுகன் ஹாட்வெயார், பிரதான வீதி,
(27042)(6.11) நெல்லியடி. தொ.பே. 0773211276.

# 73 ஆவது பிறந்தநாள் நினைவும் 113ஆம் நாள் நினைவஞ்சலியும்

மண்ணுலக சேவைக்காய்
29 - 12 - 1939



விண்ணுலக வாழ்வுக்காய்
06 - 09 - 2012

## அமரர் சின்னத்தம்பி தர்மராஜன்

(ஓய்வுபெற்ற அஞ்சல் அத்தியட்சகர்-யாழ்ப்பாணம்)

*பூவுலகில் எம்மை மலரவைத்து புன்னகை சிந்த எம்மை மகிழ வைத்து அன்பு, அறிவு, பண்போடு வளர்த்தெடுத்து விழுதெறிந்த பெரு விருட்சமாய் புகழோடு வாழ வழிகாட்டிய எங்கள் அன்புத் தெய்வத்தின் நினைவுகள் என்றும் எங்கள் உள்ளத்தை விட்டு அழியாது அப்பா!*

உங்களது 73ஆவது அகவையில் உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**பாக்கிய விலா**
**கோயில் வீதி, கொக்குவில் கிழக்கு.** (27135)(5.6)

**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பெரும்பாலும்மேகக் கூட்டத்துடன் கூடிய வானிலை நிலவும்.

## ஆன்மிகச் சொற்பொழிவு

வடமராட்சி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் கோயில் சுற்றாடலில் அமைந்துள்ள பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு ''கண்ணன் காட்டிய வழி'' என்னும் தலைப்பில் சொற்பொழிவு இடம்பெறும்.

வல்வெட்டித்துறை சிவ குரு வித்தியாலய அதிபர் ஆ.சிவநாதம் இச் சொற்பொழிவை நிகழ்த்துவார். (ம-8)

அமெரிக்காவுக்கு நாடு கடத்தப்பட்ட

# இரு தமிழர்களின் பிணை மனு ஜன. 9 ஆம் திகதி பரிசீலிப்பு

விடுதலைப் புலிகளுக்கு ஆயுதங்களை வாங்க முயன்றதாக குற்றம்சாட்டி கனடாவில் இருந்து அமெரிக்காவுக்கு நாடு கடத்தப்பட்ட இரு இலங்கைத் தமிழர்கள் தொடர்பான வழக்கு மீதான முதல் விசாரணை அமெரிக்க நீதிமன்றில் இடம் பெற்றுள்ளது.

பிரதீபன் நடராஜா (36), சுரேஸ் சிறீஸ்கந்தராஜா (32) ஆகிய இருவரும் தம்மை அமெரிக்காவுக்கு நாடு கடத்தக் கூடாது என்று கோரி கனேடிய உயர்நீதிமன்றத்தில் சமர்ப்பித்த மனு தள்ளுபடி செய்யப்பட்ட நிலையில், அமெரிக்காவுக்கு நாடு கடத்தப்பட்டுள்ளனர்.

இவர்கள் விடுதலைப் புலிகள் இயக்கத்துக்காக 2004 ஆம் ஆண்டுக்கும் 2006 ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் அமெரிக்காவில் விமான எதிர்ப்பு ஏவுகணைகள் உள்ளிட்ட ஆயுதங்களை வாங்க முயன்றதாக குற்றம்சாட்டப் பட்டுள்ளனர்.

விடுதலைப் புலிகளுக்காக நிதி திரட்டியது, 1 மில்லியன் டொலர் பெறுமதியான, 20 எஸ்.ஏ-18 விமான எதிர்ப்பு ஏவுகணைகள், 10 ஏவுகணை செலுத்திகள், 500 ஏகே-47 துப்பாக்கிகள் உள்ளிட்ட ஆயுதங்களை வாங்கி இலங்கைக்கு அனுப்ப முயன்றதாக இவர்கள் மீது குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது. இவர்கள் மீதான வழக்கு விசாரணை அமெரிக்காவின் புரூக்லின் நீதிமன்றத்தில் நடைபெற்றது.

இந்தக் குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டால், பிரதீபன் நடராஜாவுக்கு குறைந்த பட்சம் 25 ஆண்டுகள் சிறைத் தண்டனை அல்லது ஆகக் கூடியது ஆயுள் தண்டனை விதிக்கப்படும்.

சுரேஸ் சிறிஸ் கந்தராஜாவுக்கு 25 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்படக் கூடும்.

முதல் கட்ட வழக்கு விசாரணை முடிந்துள்ள நிலையில் இவர்களின் பிணை மனு கோரிக்கை எதிர்வரும் 2013 ஆம் ஆண்டு ஜனவரி 9 ஆம் திகதி பரிசீலிக்கப்படவுள்ளது.

தனது கட்சிக்காரரான பிரதீபன், கனடாவில் ஒரு கௌரவமான உழைப்பாளி குடும்பத்தைச் சேர்ந்த மனிதன் எனவும் நீதிமன்றத்தில் தனது பொறுப்பை அவர் நிரூபணம் செய்துள்ளதாகவும் வழக்கறிஞர் சாம் ஏஸ்மித் தெரிவித்துள்ளார்.

மற்றுமொரு சந்தேக நபரான சிறிஸ்கந்தராஜா தனது தாயைச் சந்திக்க வேண்டும் என நீதிமன்றில் அனுமதி கோரிய நிலையில், கனடாவில் இருந்து வந்த தாயை நீதிமன்ற அறையில் வைத்து சந்திக்க அவருக்கு அனுமதி வழங்கப்பட்டது. (3)

## மகரஜோதி பெருவிழா

யாழ்ப்பாணம், டிசெ.29

காரைநகர் வியாவில் ஐயனார் ஆலய மகரஜோதிப் பெருவிழா இன்று சனிக்கிழமை காலை 6 மணிக்கு நடைபெறவுள்ளது.

ஐயப்ப சுவாமிக்கு விசேட அபிஷேகம் நடைபெற்று, மகர ஜோதிக்கு 18 ஆம் படிப் பூசை, சரணகோஷம், பஜனை என்பன இடம் பெறும்.

தொடர்ந்து கலாநிதி பஞ்சாபிகேசனின் பேரப்பிள்ளைகளான விக்னேஸ்வரன் சித்தார்த்தன், விக்னேஸ்வரன் பிரதித்தன் ஆகியோருக்கு நாதஸ்வர கலா மணிகள் பட்டம் வழங்கி தங்கப் பதக்கம் வழங்கும் நிகழ்வும் நடைபெறும். (3)

## வாழ்வகத்துக்கு விண்ணப்பிக்கலாம்

வலி. வடக்கு, டிசெ 29

சுன்னாகத்தில் அமைந்துள்ள வாழ்வகம் விழிப்புலன் வலுவிழந்தோர் நிறுவனத்தில் பார்வையற்ற பார் வைக்குறைபாடு களையுடைய பிள்ளைகளை சேர்த்துக் கொள்வதற்கான விண்ணப்பங்கள் ஏற்கப்பட உள்ளன.

கண் பார்வையற்ற சாதாரணமாக எழுத்தை இயல்பாக வாசிக்க முடியாத அளவு பார்வை குறைந்த பிள்ளைகளின் பெற்றோர் தமது பிள்ளைகளை இணைத்துக் கொள்ள முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

விழிப் புலன் வலுவிழந்த பிள்ளைகளை இந்த நிறுவனத்தில் இணைத்துக் கொள்ள விரும்பும் பெற்றோர்கள் தலைவர் வாழ் வகம் சுன்னாகம் என்னும் முகவரியுடனும் 0212240146 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு அனுமதியைப் பெற்றுக் கொள்ள முடியும்.

வாழ்வகம் நிறுவனத்தில் அனுமதி பெற்று பிள்ளைகளுக்கான உணவு உடை, உறைவிடம், கல்விச் செலவுகள், கல்விக்கான உபகரணங்கள் யாவும் முற்றிலும் இலவசமாக வழங்கப்படவுள்ளதாக வாழ்வகம் நிறுவனத்தினர் அறிவித்துள்ளனர். (3-86)

## 64 இலங்கையர்கள் தாய்லாந்தில் கைது

தாய்லாந்தின் பட்டாய பகுதியில் உள்ள ஹோட்டல் ஒன்றில் தங்கியிருந்த 64 இலங்கையர்கள் அந்த நாட்டின் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வெளிநாடு ஒன்றுக்கு அனுப்பி வைக்க இவர்கள் குறித்த ஹோட்டலில் தங்க வைக்கப்பட்டிருந்தனர் என்று சந்தேகிக்கப்படுகிறது.

இது குறித்து தாய்லாந்து பொலிஸாருக்குக் கிடைத்த தகவலை அடுத்து குடிவரவு அதிகாரிகளுடன் இணைந்து குறித்த இலங்கையர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் தாய்லாந்து முகவர்கள் ஊடாக லீம் சபாங் துறைமுகத்தில் இருந்து படகு மூலம் வேறு நாட்டுக்கு அனுப்பி வைக்கப்படவிருந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு படகு மூலம் 100க்கும் மேற்பட்டவர்கள் தாய்லாந்தில் இருந்து வேறு நாட்டுக்கு ஏற்கனவே அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர் என்று தெரியவந்துள்ளது.

கைது செய்யப்பட்டுள்ள இலங்கையர்களிடம் சுற்றுலா விசா காணப்பட்டதாகவும் அவர்களுடைய கடவுச்சீட்டு பறி முதல் செய்யப்பட்டுள்ளதாகவும் இவர்கள் இலங்கைக்கு திருப்பி அனுப்பப்படவுள்ளதாகவும் தாய்லாந்து குடிவரவு பிரிவு தகவல்கள் தெரிவிக்கின்றன.(3)

## ஆங்கிலத்திறன் ஆற்றுகை நிகழ்வு

வலி. வடக்கு, டிசெ 29

அளவெட்டி அபிவிருத்தி மன்றம் மற்றும் அளவெட்டி மகாஜன சபையின் ஏற்பாட்டில் நடத்தப்படும் ஆங்கில திறன் விருத்தி வகுப்புக்களில் கல்வி கற்கும் மாணவர்களின் திறன் ஆற்றுகை நிகழ்வு ஓய்வு பெற்ற ஆசிரிய ஆலோசகர் க.அருளம்பலம் தலைமையில் அளவெட்டி மகாஜனசபை மண்டபத்தில் இடம்பெற்றது.

மாணவர்களின் திறன் ஆற்றுகை நிகழ்வில் ஆங்கில குழு இசைப்பாடல்கள் கவிதை, பேச்சு, நடன நிகழ்வு, நாடக ஆற்றுகை, குழுநடனம் என்பன இடம்பெற்றன. (3-86)

## அல்லைப்பிட்டி றோ.க.த.க. பாடசாலை ஜனவரி 2 முதல் இயங்கும்

யாழ்ப்பாணம், டிசெ.29

அல்லைப்பிட்டி றோ.க.த.க. வித்தியாலயத்தின் புனரமைப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

எதிர்வரும் ஜனவரி 2 ஆம் திகதி புதன்கிழமை முதலாம் தவணைக்கான பாடசாலைகள் தொடங்கும் போது இந்தப் பாடசாலையும் திறந்து வைக்கப்படவுள்ளது.

கடந்த காலத்தில் போரின் போது இந்தப் பாடசாலை பலத்த சேதங்களுக்கு உள்ளாகியிருந்தது.

புனரமைக்கப்பட்டு மீள ஆரம்பிக்கப்பட இருக்கும் அல் லைப் பிட்டி றோ.க.த. வித்தியாலயத்தின் அதிபராக அல்லைப் பிட்டி பராசக்தி வித்தியாலய அதிபராக கடமையாற்றிய நா. பத்மநாதன் நியமிக்கப் பட்டுள்ளார். (3-7)


## மரண அறிவித்தல்

### ஆறுமுகம் முருகமூர்த்தி



சண்டிலிப்பாய் வடக்கைப் பிறப்பிடமாகவும் வேலணை மேற்கை வசிப்பிடமாகவும் தற்போது வவுனியா, நெளுக்குளம், 2 ஆம் ஒழுங்கையை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் முருகமூர்த்தி 27.12.2012 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார்காலஞ்செனறவர்களான ஆறுமுகம்- காமாட்சி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை- சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மருமகனும்,லீலாவதி (மணி)யின் அன்புக் கணவரும், ராகினியின் (குஞ்சு- நெதர்லாந்து) பாசமிகு தந்தையும், சற்குணராசாவின் (நெதர்லாந்து) பாசமிகு மாமனாரும், றுசாந்தன், சோபனா, தனுசாந் (நெதர்லாந்து) ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான குமாரசாமி, மாணிக்கவாசகர், வள்ளிநாயகி மற்றும் தெய்வநாயகி, ரவீந்திரன், சகாதேவன் (வவா), சாவித்திரி, பரந்தாமன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான ராசாபுஸ்பம், தர்மராசா,இந்திரகுமாரி மற்றும் மல்லிகாதேவி, யோகராசா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நெளுக்குளம்132/14, 2ஆம் ஒழுங்கை எனும்முகவரியில் உள்ள அவரது இல்லத்தில் நாளை (30.12.2012) ஞாயிற்றுக்கிழமை மு.ப 10 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நெளுக்குளம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இல.132/14, 2ஆம்ஒழுங்கை,
நெளுக்குளம்.
ராகினி [illegible]
லீலாவதி [illegible]
(24385) (8.4)

## 7ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
13.01.1932

மறைவு
16.12.2005

அமரர்
முருகேசு தாமோதரம்பிள்ளை
(ஓய்வுபெற்ற ஆசிரியர்)
திதி: அபரபக்க பிரதமை
29.12.2012

எத்தனை உறவுகள் எம்முடன் இருந்தாலும்
எம் தெய்வமே உங்களுக்கு இணையாகுமா
என்றும் உங்கள் நினைவு எம்மை வாட்டுகிறது
அறிவை ஊட்டி அன்பாக அரவணைத்து
வையத்தில் வாழ்வாங்கு வாழ வழி வகுத்த
அன்புத் தெய்வமே என்றும் உங்கள் நினைவு
எம்மை விட்டு நீங்காது.

ஆறாத்துயரில் ஆழ்ந்திருக்கும்
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், மைத்துனி.

''கோகுலம்''
சங்கத்தானை, சாவகச்சேரி.
(4/2853)(4.6)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



திருமதி
திரவியநாயகம் நாகேஸ்வரி

உதிப்பு
06★03★1950

உதிர்வு
29★11★2012

கடந்த 29.11.2012 இல் இறைபதமடைந்த எமது அன்புத் தெய்வத்தின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் வீட்டுக்கிருத்திய நிகழ்வும் இன்று (29.12.2012) சனிக்கிழமை மு.ப 10.30 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெறும். இந் நிகழ்வில் தாங்களும் கலந்து கொண்டு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பதுடன், அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் பங்கு கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மீசாலை மேற்கு, மீசாலை.
(C2854(6.11)
குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூகுளை நம்பியே இன்றைய தலைமுறை

## விஞ்ஞானி பெய்லிஸ் கவலை

லண்டன், டிசெ.29

தற்போதைய தலை முறைகளை இணையம், குறிப்பாக கூகுள் மூளை வறட்சியுடையவர்களாக மாற்றி விட்டது. இது மிக வேதனையாக உள்ளது என்று கூறியுள்ளார் பிரபல பிரிட்டன் விஞ்ஞானி டிரெவர் பெய்லிஸ்.


75வயதான பெய்லிஸ் பல கண்டுபிடிப்புகளை மேற் கொண்டுள்ளார். அதில் முக்கியமானது 'வைன்ட் அப் ரேடியோ'. அவர் இன்றைய குழந்தைகளின் நிலை குறித்து ஆதங்கத்துடன் பேசியுள்ளார்.

இதுகுறித்து அவர் கருத்துத் தெரிவிக்கையில்:

இன்றைய குழந்தைகள் செயல்திறன் பயிற்சியும், திறமையும் அற்றவர்களாக வளர்கின்றனர். எதையும் யோசித்துச் செய்யும் மன நிலையில் அவர்கள் இல்லை. இணையத்தையே முழுமையாகச் சார்ந்திருக்கும் நிலைக்கு அவர்கள் தள்ளப்பட்டுள்ளனர். குறிப்பாக கூகுளுக்கு அடிமையாகி விட்டனர். கூகுள் மூலம் தான் எதையும் தேடும் நிலைக்கு அவர்கள் தள்ளப் பட்டுள்ளனர். இது அவர்களது மூளை வளர்ச்சிக்கு பெரும் குந்தகமாக அமையும், மூளை வறட்சிக்கு வித்திடும். குழந்தைகள் எதையும் சிந்தித்து செயற் பட வேண்டும். அதற்கேற்ப அவர்களைப் பழக்க வேண்டும். கைபேசி, கணினி என்று எதற்கெடுத்தாலும் அதற்கு அடிமையாகியிருக்கக் கூடாது. ஆனால் இன்றுள்ள குழந்தைகள் அப்படியா இருக்கிறார்கள். அவர்களை நினைத்தாலே எதிர்காலத்தை நினைத்துப் பயமாக இருக்கிறது - என்றார். (வ)

# மரண அறிவித்தல்

## செல்லத்துரை கெங்காதரன்



காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும், அளவெட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை கெங்காதரன் நேற்று (28.12.2012) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - இராசம்மா தம்பதியரின் மகனும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - சாந்தகுணம் தம்பதியரின் மருமகனும், மங்கையற்கரசியின் அன்புக் கணவரும், இந்திரமோகனின் (வைத்தியர், யாழ். போதனா வைத்தியசாலை) பாசமிகு தந்தையும், கஜந்தா, சுரேஸ், பிரதீஸ், லவன் ஆகியோரின் அன்பு மாமனும், சந்திரமலர், புஸ்பாஞ்சலி, பஞ்சாட்சரம் ஆகியோரின் சகோதரனும், செல்வவிநாயகமூர்த்தி, விமலானந்தமூர்த்தி, விஜயலக்ஷ்மி, திலகவனிதா, அகிலாண்டநாயகி, ஹேமாவதி, பத்மாவதி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (30.12.2012) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 9.00 மணியளவில் நடைபெற்று தகனக்கிரியைகள் மல்லாகம் இந்துமயானத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அளவெட்டி மத்தி,
அளவெட்டி.

தகவல்:
Dr.K. இந்திரமோகன் (மகன்)

(27336)(3.14)

# கண்ணீர் அஞ்சலி



ஆவரங்காலை வசிப்பிடமாகக் கொண்டவரும், எல்.ஐ.சி யாழ். கிளை நிறுவன உத்தியோகத்தருமான க. கிருபானந்தன் அவர்களின் பாசமிகு தந்தை

## வேலாயுதபிள்ளை கனகரத்தினம்

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு நாமும் இத்துயரில் பங்கு கொள்கின்றோம்.
அன்னாரின் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!

அனைத்து முகாமையாளர்கள்,
உத்தியோகத்தர்கள்
ஆயுள் காப்பீட்டு கூட்டுத்தாபனம் (இலங்கை) வ/து

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அழைப்பும்



தோற்றம்
25.09.1949

மறைவு
29.12.2012

## அமரர் சாம்பசிவம் சுகிர்ணலீலா

பாச மழை பொழிந்து பாரினில் எமை வளர்த்தீர்கள்
பாசமுடன் நாங்கள் தேட பறந்து எங்கு சென்றீர்கள் ?
கலங்கும் விழிகளுடன் இதயமது வெதும்பி நிற்க
இறைஞ்சுகின்றோம் இறைவனிடம் என்றும் ஆத்ம சாந்திக்காய்.

இன்று (29.12.2012) சனிக்கிழமை அந்தியேட்டிக்கிரியைகள் எமது இல்லத்தில் நடைபெற இருப்பதால் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் கலந்து கொண்டு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பதோடு தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

ஊரெழு மேற்கு, ஊரெழு. (27318)(6.10)

குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## சண்முகம் சபா நடேசன்(மாஸ்ரர்)



காரைநகர், இடைப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் 19/27, மகாவித்தியாலய வீதி, கொச்சிக்கடையை வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகம்சபாநடேசன் (மாஸ்ரர்) நேற்று (28.12.2012) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சண்முகம்-மனோன்மணி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற கந்தையாபிள்ளை விசுவலிங்கம்- செல்வராணி தம்பதியரின் அன்பு மருமகனும், ஞானகௌரியின் அன்புக் கணவரும், சயந்தன், சஹானா ஆகியோரின் அன்புத் தந்தையும், அம்பலவாணர், சிவஞானம், சந்திராதேவி, இந்திரா ஆகியோரின் அன்புச் சகோதரரும், புவனேஸ்வரி,உமாதேவி, மகாதேவன், தர்மராஜா, கனகாம்பிகை, சிவானந்தராஜா,சாந்தி ஆகியோரின் அன்பு மைத்துனரும், கருணாகரன்,ஸ்ரீலதா, கஜேந்திரன் ஆகியோரின் அன்புச் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய தகவல்கள் பின்னர் அறியத் தரப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றக்கொள்ளவும்.

புதுறோட் ,காரைநகர்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்

# மரண அறிவித்தல்

## சிவசுப்பிரமணியம் ஜீவரத்தினம்



மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும், உசன், மிருசுவிலை வசிப்பிடமாகக் கொண்டவரும் தற்போது இல.1, வெங்கடேஸ்வரா வீதி, யாழ்ப்பாணத்தில் வசித்துவந்தவருமான சிவசுப்பிரமணியம் ஜீவரத்தினம் 26.12.2012 புதன்கிழமை காலமானார்

அன்னார் காலஞ்சென்ற சிவசுப்பிரமணியத்தின்(மணியம் களஞ்சியம் - கொடிகாமம்) அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான முருகேசு - அன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான நாராயணபிள்ளை - நாகமுத்து தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற நாகராசா மற்றும் ஜெயராசா(லண்டன்),இராஜேஸ்வரி, சாந்தினிதேவி, இரஞ்சன் (ஜீவா ஸ்ரோஸ், மல்லாகம்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், கார்த்திகேசு, சிவகுரு, காலஞ்சென்ற வேலாயுதபிள்ளை ஆகியோரின் மைத்துனியும் ராஜீவன் (நோர்வே), சுரேஸ்குமார் (Softview Computer College) விஜிதா (ஆசிரியர்.நாவாந்துறை RCS),ராஜ்குமார் (லண்டன்), சுஜாதா (சுவீடன்), ஆகியோரின் அன்புத்தாயாரும் விக்ரிஷ் (நோர்வே), சாந்தி (ஆசிரியர், கிளி/புதுமுறிப்பு விக்னேஸ்வரா வித்தியாலயம்), பரம்தில்லைராஜன் (ஆசிரியர், சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி),குணரேகா ,கரன் (சுவீடன் ) ஆகியோாரின் அன்பு மாமியாரும் சாமினி, கபிலா, சந்துரு, கார்முகி ,செந்தூரி ,யதுவந்தி, கபிலினி, தமிழினி, விதுஷன், ஜதுஷன், பிரதீப்ராஜ், அபிராஜ், வித்தகி, சாதனா, அதிசயன் ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (30.12.2012) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் ,உறவினர்கள் , நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல. 01, வெங்கடேஸ்வரா வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
பிள்ளைகள், மருமக்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்



## முருகேசு நல்லலிங்கம்

(ஓய்வு பெற்ற நிதி முகாமையாளர்- இலங்கை துறைமுக அதிகாரசபை)

யாழ்ப்பாணம் பெரியமணல், காரைநகரைப் பிறப்பிடமாகவும், 238, நீதிமன்ற வீதி, திருகோணமலையை வதிவிடமாகவும் கொண்ட முருகேசு நல்லலிங்கம் கடந்த (26.12.2012) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு -அன்னம்மா தம்பதியரின் மூத்த மகனும், காலஞ்சென்றவர்களான கனகசபை- சுந்தரம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற நளாயினிதேவியின் அன்புக் கணவரும், பரராஜலிங்கம் (ஆஸ்திரேலியா), சுந்தரலிங்கம் (வழக்கம்பரை அம்மன் கோயிலடி), திருமதி மரகதவல்லி செகராஜசிங்கம் (திருகோணமலை) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், சரோஜினி தேவி, நடனலிங்கம், ரஞ்சலிங்கம், ரஞ்சினிதேவி, சாந்தினிதேவி, மாதவன், யாதவன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், கனகஞானம், ஜெயலட்சுமி, கிருஸ்ணவேணி, செல்வராஜா, ரமணீகரன், அமுதா, திரிபுவனி ஆகியோரின் பாசமிகு மாமனும், பிரசாந்த், திருமதி பிரசாந்த், நிருஷிகா, வேணுகா, டிலானி, லோஜனா, தர்சிகா, ரிதுஸ்கரன், காயத்திரி, வேணுகானன், வவித்திரா, கோபிகிருஸ்ணா, சரண்ஜா, சாருஜா, வருணி, அபிநயன் ஆகியோரின் பாசமிகு பேரனும் மஹதியின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கடந்த (27.12.2012) வியாழக்கிழமை திருகோணமலையில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் திருகோணமலை இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மு.சுந்தரலிங்கம் (சகோதரன் -கிளாக்கர்)
வழக்கம்பரை அம்மன் கோயிலடி,
சுழிபுரம்.
(27253)(9.14)

## வேலாயுதபிள்ளை கனகரத்தினம்

(ஓய்வுபெற்ற கிளை முகாமையாளர், பல.நோ.கூ. சங்கம், அச்சுவேலி)

ஆவரங்காலைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட வேலாயுதபிள்ளை கனகரத்தினம் நேற்று முன்தினம் (27.12.2012) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் ஜீவானந்தன் (சாவகச்சேரி, நகராட்சி மன்ற உத்தியோகத்தர்), கிருஸ்ணநந்தன் (பௌதீகவியல், ஆசிரியர்), கிருபானந்தன் (LIC விற்பனை மேற்பார்வையாளர்), நித்தியானந்தன் (SINGER நிறுவன அலுவலர்) ஆகியோரின் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (28.12.2012) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் ஆவரங்கால் இந்துமயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சுகிர்தகணேஸ்வரி (லீலா மனைவி)
முத்துமாரி அம்மன் கோயிலடி,
ஆவரங்கால், நெல்லியோடை

# கடல் எல்லை தாண்டும் பிரச்சினைக்கு சென்னை மாணவர்களின் கண்டுபிடிப்பு

## தேசிய அளவில் அங்கீகாரம்

சென்னை, செ.29

கடல் எல்லை தாண்டி, மீன்பிடிப்பதால் ஏற்படும் பிரச்சினையைத் தவிர்க்க, சென்னையைச் சேர்ந்த கல்லூரி மாணவர்களின் கண்டு பிடிப்புக்கு தேசிய அளவில் விருது கிடைத் துள்ளது.

கடல் எல்லை தாண்டி மீன்பிடிப்பதால் இந்திய மீன வர்கள் அடிக்கடி தாக்கப்படுவதும் மீன் வலைகள் அறுத்தெறியப்பட்டு சுட்டுக் கொல்லப்படுவதும் தொடர் கதையாகி வருகிறது. இதைத் தவிர்க்க, சென்னை செயின்ட் ஜோசப் பொறி யியல் கல்லூரி மாணவர்கள் நவீன் நெல்சன் இரு தயராஜ், பிரின்சி பெர்பச் சுவா ஆகியோர் இணைந்து 'கடல் எல்லையைச் சுட்டிக் காட்டும்' கருவியைக் கண்டு பிடித்துள்ளனர்.

அந்தக்கருவி, மூன்று பாகங்களைக் கொண்டது. முதல் பாகத்தில் எல்.சி.டி., திரையும் இரண்டாம் பாகத் தில் ஜி.பி.எஸ்., அன்டனா மற்றும் ஜி.பி.எஸ்., கரு வியும், மூன்றாம் பாகத்தில் எரிபொருள் தடுப்பு கருவி யும் உள்ளது. ஜி.பி.எஸ். அன்டனா, செயற்கைக் கோளில் இருந்து தகவல் பெற்று ஜி.பி.எஸ். டிவைசிற்கு அனுப்பும். அதிலுள்ள திரையின் மூலம், கடல் எல்லையில் பயணிக்கும் இடத்தை தெரிந்து கொள்ள முடியும். எல்.சி.டி. திரையில் 3 நிறங்கள் உள்ளன. அதில் மஞ்சள் நிறம் வந்தால் பாதுகாப்பான பகுதி. பச்சை நிறம் மீன்பிடிக்க தகுந்த பகுதி. சிவப்பு நிறம் வந் தால் ஆபத்தான பகுதி என்று கருதப்படுகிறது.

சிவப்பு நிறம் வந்தால், அபாய ஒலி எழும். அபாய ஒலியைக் கேட்டதும், படகை மீன் பிடி பகுதி அல்லது பாதுகாப்பான பகுதிக்குக் கொண்டு செல்ல வேண்டும். இல்லையென்றால் கடல் எல் லையை நெருங்குவதற்குள், இன்ஜினுக்கு செல்லக் கூடிய எரிபொருளை, கருவி யின் 3 ஆம் பாகம் நிறுத்தி விடும். இதனால், குறிப்பிட்ட கடல் எல்லையைத் தாண்டவே முடியாது.

அந்தக்கண்டுபிடிப்பு, 'இண்டியன் நேஷனல் அகடமி ஒப் இன்ஜினியரிங்' என்ற அமைப்பின் சார்பில் நடைபெற்ற அகில இந்திய அளவிலான பொறியியல் கல்லூரி மாண வர்களின் கண்டுபிடிப்புகளுக்கான போட்டியில்,'சிறந்த கண்டுபிடிப்பு' விருது பெற் றுள்ளது.

எதிர்வரும் ஒக்டோபரில், ஹைதராபாத்தில் மேற்படி பரிசில் வழங்கும் நிகழ்வு இடம்பெறும். இது குறித்து, விருது பெறும் மாணவர்கள், 'பத்திரிகைகளில் வந்த எங்கள் கண்டுபிடிப்பைப் பார்த்து, ஆந்திர மாநில மீன்வளத்துறை எம்மை அழைத்துப் பேசியது. ஆனால், தமிழர் நலனுக்காக நாங்கள் கண்டுபிடித்ததை யாருமே கண்டுகொள்ளாமல் இருப்பது மிகுந்த வேதனை அளிக்கிறது -என்றனர். (வ)

# மரண அறிவித்தல்



## தம்பிப்பிள்ளை குலசிங்கம்

காரைநகர் தங்கோடையைப் பிறப்பிடமாகவும், வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிப்பிள்ளை குலசிங்கம் நேற்று முன்தினம் (27.12.2012) வியாழக்கிழமை கொழும்பில் இறையடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை- பொன்னரியம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற வித்துவான் முருகேசு மற்றும் லீலாவதி தம்பதியரின் அன்பு மருமகனும்,திருமதி தில்லைக்கரசியின் பாசமிகு கணவரும் , நமணன், ரமேஸ், பிரிய தர்சினி ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்றவர்களான நடராசா, பூபாலபிள்ளை, பூரணம், நேசம்மா, நல்லதம்பி, வெற் றி வேல், தங்கம்மா, இரத்தினசபாபதி, துரைசிங்கம் மற்றும் நவர த் தினம் ஆகியோரின் அன்புச் சகோ தரனும், கணேசலிங்கம், சர்மிளா, சிந்துஜா ஆகியோரின் அன்பு மாமனாரும், தருணிகா, பிரணவி, ஆரனி ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று(29.12.2012) சனிக்கிழமை மு.ப. 9.00 மணிமுதல் கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு நளைமறுதினம்(31.12.2012) திங்கட்கிழமை காலை 8.30மணியளவில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று மு.ப. 10.00மணியளவில் தகனக் கிரியைக்காக பூதவுடல் கல்கிசை பொது மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


NO, 14, 2/9, 37th lane,
wellawatta, colombo - 06
Tel- 077 3946968,
0115748341

தகவல்:
மனைவி,
பிள்ளைகள்.

# மரண அறிவித்தல்

## பொன்னம்பலம் பாலசிங்கம்

(இடைப்பிட்டி, காரைநகர் - இளைப்பாறிய உதவி அரசாங்க அதிபர், நெடுந்தீவு)



விளானைப் பிறப்பிடமாகவும், இடைப்பிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் பாலசிங்கம் நேற்று (28.12.2012) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அம்பலவாணர் பொன்னம்பலம் - பார்வதிப்பிள்ளை தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும், காலஞ்சென்ற சங்கரப்பிள்ளை - பார்வதிப்பிள்ளை தம்பதியரின் அருமை மருமகனும், சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும், ஞானாம்பிகை, கமலாம்பிகை (உப அதிபர், சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாலயம், காரைநகர்), கனகாம்பிகை (பிரான்ஸ்), சவுந்தராம்பிகை (ஜேர்மனி), தனலக்ஷ்மி, மோகனாம்பாள் (கனடா), நேசமலர் (பிரான்ஸ்) ஆகியோரின் அருமைத் தந்தையும், சிவசோதி (யாழ்ப்பாணம்), லிங்கேஸ்வரன் (ஆசிரியர், யா/கலாநிதி ஆ.தியாகராசா மத்திய மகா வித்தியாலயம்), கெங்காதரன் (பிரான்ஸ்), விஜயசிங்கம் (ஜேர்மனி), சிவானந்தன் (கொழும்பு), உருத்திரலிங்கம் (கனடா), அருள்நாதன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு மாமனும், அருட்குமரன் (பான் ஏசியா வங்கி, யாழ்ப்பாணம்), ஜனனி (இலங்கை வங்கி, யாழ்ப்பாணம்), ரமேஸ், சிவப்பிரியன், அபிராமி, சதீஸ், தினேஸ், கீதவேணி, கஜனி, ஜீவினி, பிரதாப், வனிதா, தனுஷன், மயூரன், மயூரி, கஜன் ஆகியோரின் அன்புப் பேரனும், திருவாதிரை (ஓய்வுபெற்ற தபாலதிபர்) மற்றும் காலஞ்சென்ற ஈஸ்வரி வள்ளியம்மை ஆகியோரின் சகோதரனும், லோகேஸ்வரி (ஓய்வுபெற்ற தாதிய உத்தியோகத்தர்), காலஞ்சென்றவர்களான பாலசுப்பிரமணியம், சுந்தரமூர்த்தி, சிவகலை, சிவப்பிரகாசம் மற்றும் ஒப்பிலாமணி, சிவமணி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (30.12.2012) ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக சாம்பலோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்
இடைப்பிட்டி,
காரைநகர்.
(சி/5132)(3.14)

# மரண அறிவித்தல்

## இளையதம்பி கந்தையா நாகராசா

(இளைப்பாறிய ஆசிரியர்-வேலணை மத்திய கல்லூரி)



யாழ்ப்பாணம் வேலணை கிழக்கு 1ஆம் வட்டாரத்தைப்பிறப்பிடமாகவும், யா/பிறவுண் வீதியை வதிவிடமாகவும், கொழும்பு-06 ஐ தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட E.K.நாகராசா நேற்றுமுன்தினம் (27.12.2012) வியாழக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் திருமதி திவ்யசிரோன்மணியின் (இளைப்பாறிய அதிபர், யா/இந்து மகளிர் கல்லூரி) அன்புக்கணவரும், காலஞ்சென்றவர்களான கந்தையா-பொன்னம்மா தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும், காலஞ்சென்றவர்களான தம்பிமுத்து-இலட்சுமி தம்பதியரின் அன்பு மருமகனும், E.K. தியாகராஜா JP (யா/எலக்றிக் லைன்ஸ், சில்வர் ஸ்ரோர்ஸ்), காலஞ்சென்றவர்களான E.K.தங்கராஜா (E.K.T.RICE MILL), யோகராசா (யாழ்ப்பாணம்) மற்றும் E.K. செல்வராசா(இந்தியா), தவமணிதேவி(அமெரிக்கா), காலஞ்சென்ற லீலாதேவி மற்றும் லலிதாதேவி (மணி-வேலணை) ஆகியோரின் அன்புச் சகோதரரும், அரசரத்தினம்(இளைப்பாறிய தபாலதிபர்), காலஞ்சென்ற திருமதி சிவயோகம்(குணம்), திரு.ப இராசரத்தினம், திருமதி திலகவதி இராசரத்தினம், ப.சீவரத்தினம்(பிரான்ஸ்), திருமதி தனேஸ்வரியோகநாதன், செல்வி கமலாதேவி ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரனும், இலட்சுமி(இளைப்பாறிய ஆசிரியை), காலஞ்சென்ற இராசலெட்சுமி மற்றும் அலிஸ் யோகராசா(இளைப்பாறிய ஆசிரியை), புஸ்பவதி(இந்தியா), சிறீதரன்(வேலணை), காலஞ்சென்றவர்களான திருக்குலசிங்கம், சிவபாலசிங்கம், வரதசிரோன்மணி, தனபாலசிங்கம், பூபாலசிங்கம், ஜெய மங் களசிரோன்மணி ஆகியோரின் அன்பு மைத்துனரும், றஜனி(முன்னாள் யா/பல்கலைக்கழக உதவிப் பதிவாளர்- ஆஸ்திரேலியா), அசோகன்(புரூணை), கல்யாணி(லண்டன்), சுமதி (ஆசிரியை- பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி), உதயணன்(விமலன்-கொழும்பு) ஆகியோரின் அன்புத் தந்தையும், இராமே ஸ் வரன் (ஆஸ்திரேலியா),வசந்தி(புரூணை), நடராசா(லண்டன்), ரஞ்ச குமார் (ஆஸ்திரேலியா), ரதினி(ஆசிரியை, யா/சன்மார்க்க மகா வித்தியாலயம்) ஆகி யோரின் அன்பு மாமனும், நிரூஷன், ஜனனி, அஷ்வின், அக்ஷரா, அருணன்,சாம்பவி, தனிஷ்கன், தனிஷ்கா ஆகியோரின் ஆசைப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நளை(30.12.2012) ஞாயிற்றுக்கிழமை கல்கிசை மஹிந்த மலர்ச்சாலையில் மு.ப. 09 மணிமுதல் 12மணிவரை அஞ்சலிக்காக வைக்கப்பட்டு தகனக்கிரிகையின் பின்னர் கல்கிசை பொது மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
அன்பு மனைவி, பிள்ளைகள், சகோதரர்கள்,மருமக்கள்.
T.P. 0112367673

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உ
## தசாகாதி கிருஹயஜ்ஞ அழைப்பு

நிகழும் நந்தன வருஷம் மார்கழி மாதம் 07ஆம் நாள் (22.12.2012) சனிக்கிழமை அமரத்துவமெய்திய எங்கள் குடும்பத்தலைவர் ***ச.சிவசாமி ஐயர்*** அவர்களின் ஆத்ம சாந்திக் கிரியைகள் பின்வரும் தினங்களில் நடைபெறும்.

மார்கழி 16ஆம் நாள் (31.12.2012) திங்கள் காலை 10.00 மணி
தசாகம்

மார்கழி 17ஆம் நாள் (01.01.2013) செவ்வாய் காலை 10.00 மணி
ஏகோதிஷ்டம், மாசிகம்

மார்கழி 18ஆம் நாள் (02.01.2013) புதன் காலை 10.00 மணி
சபிண்டீகரணம்

மார்கழி 19ஆம் நாள் (03.01.2013) வியாழன் காலை 11.00 மணி
கிருஹயஜ்ஞம், மதிய போசனம்

இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று இந்நிகழ்வுகளில் கலந்து கொண்டு ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திப்பதுடன் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

**'சரஸ்வதி வாசா', வீரபத்திரர் கோயிலடி, பழம் றோட், கோப்பாய் தெற்கு.** (2/249)

**தகவல்: குருபத்தினி. 0212250118**


உதயன் விளம்பரத் தொடர்புக்கு—
advt@uthayan.com
0215671111



# Mega Sale

30.12.2012 மட்டும் மாபெரும் ஏல விற்பனை

இன்னும் 3 நாள்கள் மட்டுமே

Mega Sale

ஆரம்பமாகிறது

## மங்களா காட்சியறை

இல.536, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்



**வீடு வாடகைக்கு**

யாழ். பலாலிவீதி கந்தர்மடத்தில் அலுவலகத்திற்கு/களஞ்சியத்திற்கு உகந்த வாகனத் தரிப்பிட வசதியுடன் கூடிய வீடு வாடகைக்கு

தொடர்பு:- 0777558340



**கணினி திருத்தம் Computer Repair**

உங்கள் கணினிகள் பழுதடைந்து விட்டனவா? உடன் உங்கள் வீடுகளுக்கே வந்து திருத்தி தருகின்றோம். அழையுங்கள் -0779086737

GUNAA BEST PC 52, HOSPITAL ROAD, JAFFNA.



# புதுவருடத்தை முன்னிட்டு

## JAFFNA ELECTRICAL (SHOW ROOM) நிறுவனத்தின்

விசேட விலைக்கழிவும் இலவச கொடுப்பனவுகளும் கையிருப்பு உள்ளவரை

Mega Sales

LG No 1 Dealer in SriLanka







**Abans** நிறுவனத்தின் உத்தரவாதத்துடனும் இலவச விநியோக சேவையில் பெற்றிட

### மேலும் கீழ்வரும் பொருள்களுக்கும் அதி விசேட விலைக்கழிவுகள் வழங்கப்படும்

DVD Player, Home Cinema System, Celling Fans, Stand Fan, Table Fan, National Electric Oven, Tosters, Mixcer Grinders (Preethi, Butterfly, Kanchan) Iron Box, Electric Kettle, Gas cookers, Watter Filter, Rice cookers, Induction cookers, Rechargeable Torch and Non Stick Items, Pressure cooker.

(C2608) (10.6.7)

# LG JAFFNA ELECTRICAL (Show Room)

141, Power House Road, Jaffna. T.P: 021 222 8378, 5766.

No.135, A9 Road, Kilinochchi. T.P: 021 228 0008

Authorized Dealer for **Abans**


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# யாழ். பல்கலை மாணவர்கள் குறித்து ஐ.நா. செயலாளருக்கு அவசர கடிதம்!

## அனுப்பிவைத்தார் கனேடிய நகர சபை உறுப்பினர்

யாழ். பல்கலைக்கழக மாணவர்களின் கைது தொடர்பாகக் கனடாவின் ரொரென்ரோ நகர சபையின் சிரேஷ்ட உறுப்பினர்களில் ஒருவரான றேமன் சோ ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ மூனுக்கு அவசரக் கடிதமொன்றை எழுதியுள்ளார்.

யாழ். பல்கலைக்கழகத்தில் கல்வி கற்றுவரும் மாணவர்கள் பலர் அண்மையில் இலங்கை இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டுப் பின்னர் அதில் நால்வர் கொடிய சிறைகளில் அடைத்து வைக்கப்பட்டிருப்பது குறித்தும், மேற்படி மாணவர்களின் கைது தொடர்பாகக் கனடாவில் தனது நகரசபை வட்டாரத்தில் வாழ்ந்துவரும் ஈழத் தமிழர்கள் கவலைகொண்டிருப்பது குறித்தும் றேமன் சோ தனது அவசரக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

''எனது நகரசபை வட்டாரத்தில் வாழும் தமிழ் பேசும் வாக்காளப் பெருமக்கள் சார்பாக நான் இந்தக் கடித்தை எழுதுகின்றேன். தங்கள் உறவுகள் இலங்கை அரசின் கோரப் பிடிக்குள் சிக்கித் தவிக்கும் பரிதாபத்தைக் கண்டு மனம் நொந்துபோயுள்ளார்கள்.

''அங்கு மாணவர்கள் மட்டுமல்ல, அப்பாவித் தமிழ் மக்களும் தொடர்ந்து இராணுவத்தால் கொடுமைப்படுத்தப்பட்டு வருகின்றார்கள். ''எனவே, இங்குள்ள தமிழ் மக்களின் சார்பில் நான் நியூயோர்க் நகருக்கு வந்து தங்களை நேரடியாகச் சந்தித்து தமிழ் மக்களின் பிரச்சனைகள், வேண்டுகோள்கள் ஆகியவை தொடர்பாக உரையாட சந்தர்ப்பம் வழங்குமாறு தங்களைப் பணிவாகக் கேட்டுக்கொள்கினறேன்''

- இவ்வாறு நகர சபை அங்கத்தவர் றேமன் சோ ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகத்திற்கு எழுதிய அவசரக் கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

# வவுனியாவில் சிறுமியை கடத்தியவர் கைதானார்

யாழ்ப்பாணம், டிசெ. 29

வவுனியாவில் 14 வயதுச் சிறுமியைக் கடத்திய குற்றச்சாட்டில் மடுவட பகுதியைச் சேர்ந்த சுமனபாலகே கசூன் என்ற இளைஞர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

கடந்தவாரம் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. சிறுமி தனியே நின்றிருந்த போதே குறித்த சந்தேக நபர் சிறுமியைக் கடத்திச் சென்றுள்ளதாகத் தெரியவந்துள்ளது. சந்தேகநபர் தற்போது கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை,

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் யுவதி ஒருவரை வன்புணர்வு செய்த குற்றச்சாட்டில் அதே பிரிவவைச் சேர்ந்த ஒருவர் கடந்த 20 ஆம் திகதி கைது செய்யப்பட்டுள்ளார். அவர் நீதிமன்றில் முன்னிலைப் படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார் என்று யாழ். பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எம்.எம்.ஜெப்றி தெரிவித்தார்.

(த-4-86)

# கஞ்சா, கோடா வைத்திருந்த 6 பேர் பொலிஸாரால் கைது

யாழ்ப்பாணம், டிசெ. 29

வவுனியா, மாங்குளம் பகுதிகளில் சட்டவிரோதமாக 148 கிராம் கஞ்சா, 210 லீற்றர் கோடா வைத்திருந்த சந்தேகத்தில் தென்பகுதியைச் சேர்ந்தவர்கள் உட்பட 6 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று யாழ். பிராந்திய சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் எம்.எம்.ஜெப்றி தெரிவித்தார்.

நேற்று அவரது அலுவலகத்தில் நடந்த வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது :-

வவுனியா மருதமடுவில் 2 கிராம் கஞ்சா வைத்திருந்த தம்பன்பல என்ற இடத்தைச் சேர்ந்த பிறேமஸ்ரீ என்பவர் கைது செய்யப்பட்டுள்ளார். அதேபோன்று வவுனியா செட்டிகுளம் பகுதியில் ஜெசீல் என்ற இளைஞரை 106 கிராம் கஞ்சா போதைப் பொருளுடன் பொலிஸார் கைது செய்துள்ளனர். அதே பகுதியில் 38 கிராம் கஞ்சாவுடன் சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். பிறிதொரு இடத்தில் 2 கிராம் கஞ்சாவுடன் மொகதீன் என்ற இளைஞர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவை தவிர மாங்குளம், மல்லாவியில் சட்டவிரோத கசிப்பு உற்பத்திக்குப் பயன்படுத்துவதற்காக 192 லீற்றர் கோடா பெரல் உள்ளிட்ட உபகரணங்களுடன் ஒருவர் கடந்த 19 ஆம் திகதி கைது செய்யப்பட்டார்.

அதேபோன்று மாங்குளம் பகுதியிலும் சுமார் 18 லீற்றர் கோடா வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் - என்றார். (த-சி-4)

# முன்னுக்குப் பின் முரணான தகவல் கூறுகிறார் தாக்கப்பட்ட மருத்துவர்

## சந்தேகத்தில் ஒருவர் கைது

யாழ்ப்பாணம், டிசெ.29

வாள்வெட்டுக்கு இலக்கான யாழ். போதனா வைத்தியசாலை வைத்திய நிபுணர் முன்னுக்குப் பின் முரணாகத் தகவல்களைத் தெரிவித்துள்ளார். எனினும் சந்தேகத்தின் பெயரில் பொலிஸார், ஒருவரைக் கைது செய்துள்ளனர் என்று யாழ். பிராந்திய சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் எம்.எம்.கெப்றி தெரிவித்தார்.

எனினும் சந்தேகநபர் பற்றிய தகவல் எதனையும் அவர் வெளியிடவில்லை.

அவரது அலுவலகத்தில் நேற்று வெள்ளிக்கிழமை வாராந்த ஊடகசந்திப்பின் போதே சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

யாழ். போதனா வைத்தியசாலையில் பணி புரியும் காது, மூக்கு, தொண்டை சிகிச்சை நிபுணர் பி.திருமாறன் கடந்த 20 ஆம் திகதி யாழ். பலாலி வீதியில், முன்னர் இந்தியத் துணைத் தூதரகம் இருந்த இடத்துக்கு அண்மையில் வைத்து இனந் தெரியாதோரின் வாள்வெட்டுக்கு இலக்கானார். அவரைப் பின்தொடர்ந்து சென்றவர்கள் இரண்டு தடவைகள் முயற்சி மேற்கொண்டும் பயனளிக்கவில்லை. மூன்றாவது தடவையாக அவரை நெருங்கியவர்கள், தாம் வைத்தியர் ஒருவரது சகோதரர்கள் என்று கூறிக்கொண்டு அவரின் கையில் வாளால் வெட்டி விட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

வைத்தியர் திருமாறனிடம் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது. அவரது முறைப்பாடு முன்னுக்குப் பின் முரணானதாக உள்ளது. குறிப்பாகச் சம்வம் நடந்த இடத்தை வைத்தியர் ஒழுங்காக அடையாளம் காட்டவில்லை. தனக்கு எதிரிகள் எவரும் இல்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

எனினும் நான் உட்பட பொலிஸ் உயர் அதிகாரிகள் பலர் இந்தச் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்தனர். இரகசியப் பொலிஸாரும் விசாரணை மேற்கொண்டனர். சந்தேகத்தின் பேரில் ஒருவரைக் கைது செய்துள்ளோம் - என்றார்.

ஆயினும் சந்தேகநபர் பற்றிய தகவல் எதனையும் அவர் வெளியடவில்லை.

(த-4-86)

# முடிவுக்கு வந்தது மருத்துவர்களின் பணிப்புறக்கணிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 29

யாழ். போதனா வைத்தியசாலை வைத்தியர்கள் மேற்கொண்டுவந்த ஒருமணி நேர பணிப்புறக்கணிப்பு முடிவுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது என்று யாழ். வைத்தியர் சங்கத் தலைவர் எஸ்.நிமலன் தெரிவித்தார்.

காது, மூக்கு, தொண்டை சிகிச்சைப்பிரிவு வைத்திய நிபுணர் பி.திருமாறன் மீது வாள் வெட்டு நடத்தப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடையவர்களைக் கைது செய்யுமாறு கோரியும், வைத்தியர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு கோரியும் கடந்த செவ்வாய்க்கிழமை தொடக்கம் நேற்று வெள்ளிக்கிழமை வரை வைத்தியர்கள் பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டு வந்தனர்.

வைத்தியர் சங்கக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதற்கு அமைவாக அவ்வாறு நடத்தப்பட்டது.

தற்போது சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதோடு,சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகமும் இதில் கவனம் செலுத்தியுள்ளதால் பணிப்புறக்கணிப்பு நிறைவுக்குக் கொண்டுவரப்பட்டது என்று வைத்தியர் சங்கத் தலைவர் கூறினார்.(த-4)




# மரண அறிவித்தல்

## முத்தையா ஞானவதி



தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட முத்தையா ஞானவதி நேற்று (28.12.2012) வெள்ளிக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்தையா நாகரத்தினம் தம்பதி யரின் புதல்வியும் தங்கராணி, விமலாவதி, சிவானந்தன் ஆகியோரின் அன்புச்சகோதரியும், சாந்தகுமார், உதயகுமார், ஆஷா, கிருஸ்ணமேனன்(கண்ணன்) ஆகியோரின் சித்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.12.2012) சனிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தெல்லிப்பழை கொத்தியாலடி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பார் லேன்,
தெல்லிப்பழை கிழக்கு,
0776093977.

(27250)

தகவல்:
கிருஷ்ணமேனன்(கண்ணன்)

# உப பொலிஸ் பரிசோதகர் கைது

பொது இடத்தில் மது போதையில் பிறருக்கு இடையூறு விளைவித்த குற்றச் சாட்டில் உபபொலிஸ் பரிசோதகர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று யாழ். பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எம்.எம்.பெரேரா தெரிவித்தார். நேற்று இடம் பெற்ற வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார். வவுனியா பொலிஸ் நிலையத்தில் பணியாற்றும் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். அவரிடம் விசாரணை மேற்கொள்ளப்படுகிறது என்று அவர் மேலும் கூறினார். (த-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தினால் வடமாகாண விளையாட்டு அமைச்சுகளுக்கு இடையே நடத்தப்பட்ட பெண்களுக்கான கயிறு இழுத்தல் போட்டியின் இறுதியாட்டங்கள் அண்மையில் நல்லூர் ஸ்தான சி.சி.த.க. பாடசாலையில் நடைபெற்றது. இதில் ஆளுநர் கொத்தணி வீராங்கனைகளும் உள்ளூராட்சி அணியினரும் பலப்பரீட்சை நடத்துகின்றனர். (ங-23)

# அளவெட்டி ஞானவைரவர் அபாரம் வல்வை இளைஞர் அணி வீழ்ந்தது

யாழ்ப்பாணம்,டிசெ.29

வல்வெட்டித்துறை நெற் கொழு கழுகு விளையாட்டுக்கழகத்தின் 60 ஆவது ஆண்டு நிறைவையொட்டி யாழ்.மாவட்ட ரீதியாக நடத்தப்படும் 11 பேர் பங்குபற்றும் 10 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டித் தொடரின்ஆட்டம் ஒன்றில் அளவெட்டி ஞானவைரவர் விளையாட்டுக்கழக அணி 8 இலக்குகளால் வெற்றி பெற்றது.

அண்மையில் நடைபெற்ற இந்தப் போட்டியில் வல்வெட்டி இளைஞர் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து அளவெட்டி ஞானவைரவர் விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது.

இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய வல்வெட்டி இளைஞர் விளையாட்டுக் கழக அணி 10 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 9 இலக்குகளை இழந்து 49 ஓட்டங்களை பெற்றது.

இதில் ரவி, சுஜீவன் ஆகியோர் தலா 6 ஓட்டங்களையும், சிந்துஷன் 10 ஓட்டங்களையும், பாபு 15 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் ஞானவைரவர் விளையாட்டுக்கழக அணி சார்பில் பிரசாந் வினோத் ஆகியோர் தலா 2 இலக்குகளையும், கட்சன் 3 இலக்குகளையும் வீழ்த்தினர்.

50 ஓட்டங்களை வெற்றி இலக்காக கொண்டு பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய அளவெட்டி ஞானவைரவர் விளையாட்டுக்கழக அணி 2 இலக்குகளை மாத்திரம் இழந்து, எட்டு இலக்குகள் வித்தியாசத்தில் வெற்றியீட்டியது.

இதில் கபிலன் 24 ஓட்டங்களையும், விஜோ 12 ஓட்டங்களையும், தம்பி 7 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் வல்வெட்டித்துறை இளைஞர் விளையாட்டுக்கழக அணி சார்பில் சுஜிவன், குரு ஆகியோர் தலா ஒவ்வொரு இலக்கினை வீழ்த்தினர். (ங-23)

## கிரிக்கெட் போட்டி மீண்டும் ஆரம்பம்

யாழ்ப்பாணம்,டிசெ.29

வி.டி.ஜெயரெட்ணசிங்கம் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்காக யாழ் .சென்றல் விளையாட்டுக்கழகம் நடத்திவந்த 50 பந்துப் பரிமாற்றங்கள்கொண்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டிகள் தவிர்க்க முடியாத காரணங்களால் இடை நிறுத்தப்பட்டிருந்தது.

எனினும் இடைநிறுத்தப்பட்ட சுற்றுப்போட்டியின் ஆட்டங்கள் யாவும் ஜனவரி மாதம் 6 ஆம் திகதி முதல் மீண்டும் ஆரம்பமாகவுள்ளன.

இந்தத் தகவலை யாழ். சென்றல் விளையாட்டுக் கழகத்தின் கிரிக்கெட் செயலாளர் எஸ். விமலதாசன் தெரிவித்துள்ளார். (ங-23)

# இன்றைய ஆட்டம்

யாழ்ப்பாணம், டிசெ. 29

வவுனியா யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தின் 18 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டும் கழகத்தின் முன்னாள் வீரர்களான சாந்தன், யூட்கசன் ஆகியோரின் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்காகவும் 11பேர் பங்குபற்றும் லீக் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடர் ஒன்றை நடத்திவருகிறது.

இந்தச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று சனிக்கிழமை மின்னொளியில் நடைபெறவுள்ள ஆட்டத்தில் மோதவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:

**மாலை 6 மணி**

ஈகிள்ஸ் விளையாட்டுக் கழகம் எதிர் 786 விளையாட்டுக் கழகம். (ங-23)

# வடக்கு-தெற்கு நல்லுறவு கரப்பந்து மகாஜனாவில்

யாழ்ப்பாணம்,டிசெ.29

''தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி கரப்பந்தாட்ட அணிக்கும் இரத்தினபுரி மாவட்ட கரப்பந்தாட்ட தெரிவு அணிக்கும் இடையிலான வடக்கு- தெற்கு உறவுப்பால கரப்பந்தாட்ட போட்டி எதிர் வரும் ஜனவரி மாத நடுப்பகுதியில் இடம் பெறவுள்ளது''- என்று தெரிவித்தார் மகாஜனாக் கல்லூரியின் பயிற்றுநர்.

வடக்கு- தெற்கு மாகாணப் பாடசாலைகளுக்கு இடையிலான உறவினை வலுவூட்டும் வகையில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி கரப்பந்தாட்ட அணிக்கும் இரத்தினபுரி மாவட்ட தெரிவு அணிக்கும் இடையிலான போட்டி ஒன்று கடந்த வருடம் இரத்தினபுரியில் இடம் பெற்றது .

அதனைத் தொடர்ந்து குறித்த திட்டத்தின் தொடர்ச்சியாக இந்த வருடம் மகாஜனக் கல்லூரியில் அதே அணிகளுக்கு இடையில் கரப்பந்தாட்டப் போட்டி நடைபெறவுள்ளது. குறித்த போட்டிக்கான சகல ஏற்பாடுகளையும் மகாஜனக் கல்லூரி மேற்கொண்டு வருகின்றது.(ங-23)

# யாழ். மாவட்ட பூப்பந்து வெற்றியீட்டிய அணிகள்

யாழ்ப்பாணம்,டிசெ.29

வடமாகாண பூப்பந்தாட்டச் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ். மாவட்ட ரீதியிலான பூப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடர் நேற்று முன்தினம் வியாழக்கிழமை மானிப்பாய் இந்துக் கல்லூரி பூப்பந்தாட்டத் திடலில் இடம் பெற்றது.

இதில் ஆண்கள் பிரிவில் வெற்றிபெற்ற அணிகளின் விவரங்கள் வருமாறு:-

முதலாமிடம்- உடுவில் மான்ஸ் விளையாட்டுக்கழகம்

இரண்டாமிடம் - மானிப்பாய் பரிஷ் விளையாட்டுக் கழகம்

மூன்றாமிடம்- ஜொனியன்ஸ் விளையாட்டுக்கழகம்

பெண்கள்பிரிவில் வெற்றி பெற்ற அணிகள் விவரங்கள் வருமாறு:-

முதலாமிடம்:- உடுவில் மான்ஸ் விளையாட்டுக்கழகம்

இரண்டாமிடம்-சுண்டுக்குழி விளையாட்டுக்கழகம். (ங-23)

## திருமலை உதைபந்து ஜனவரியில்

திருகோணமலை உதைபந்தாட்ட லீக், தனது அங்கத்துவக் கழகங்களுக்கு இடையில் நடத்தும் 11 பேர் பங்கு பற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடர் ஆட்டங்கள் ஜனவரி மாதம் நடுப்பகுதியில் திருகோணமலை மக்கெய்சர் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளது. (ங-23)

## கரம்போட்டி இன்று ஆரம்பம்

யாழ்.மாவட்ட கரம் சங்கம் நடத்தும் கழகங்களுக்கிடையேயான ஆண், பெண் இரு பாலாருக்குமான கரம் சுற்றுப் போட்டித் தொடர் இன்று சனிக்கிழமை காலை 8 மணிக்கு யாழ். மத்திய கல்லூரி றொமெய்ன் மண்டபத்தில் ஆரம்பமாகவுள்ளது. மேற்படி சுற்றுப் போட்டியின் இறுதியாட்டமும் பரிசளிப்பு வைபவமும் நாளை ஞாயிற்றுக் கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெறவுள்ளது.(ங-23)

## கரப்பந்து விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம்,டிசெ.29

கிளிநொச்சி மாவட்ட கரப்பந்தாட்டச் சங்கத்தினால் 2013 ஆம் ஆண்டில் நடத்தப்படவுள்ள கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இதில் பங்குபற்ற விரும்பும் விளையாட்டுக் கழகங்கள் கிளிநொச்சி மத்திய கல்லூரிக்கு முன்பாகவுள்ள மனோ றெக்கோடிங் சென்ரர், பரந்தன் அவிஷன் புத்தகசாலையில் இன்று முதல் விண்ணப்பங்களைப் பெற்றுக்கொள்ளலாம் என்றும், குறித்த விண்ணப்பங்களை எதிர்வரும் ஜனவரி மாதம் 4 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்களை பெற்ற கடையிலேயே அதனை ஒப்படைக்குமாறும் கிளிநொச்சி மாவட்ட கரப்பந்தாட்டச் சங்கத்தினர் கேட்டுக்கொண்டுள்ளனர்.(ங-23)

# யாழ். உதைபந்து லீக்கின் விலகல் முறைத் தொடர்

தென்மராட்சி,டிசெ.29

இராஜேஸ்வரன் மகிதரனின் ஆதரவுடன் யாழ். உதைபந்தாட்ட லீக் தனது அங்கத்துவக் கழகங்களுக்கு இடையே நடத்தும் 7 பேர் பங்கும் பற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடர் எதிர்வரும் ஜனவரி மாத நடுப்பகுதியில் இடம்பெறவுள்ளது.

மேற்படி போட்டிக்கான போட்டி அட்டவணை தயாரிக்கும் நிகழ்வு யாழ். துரையப்பா விளையாட்டு மைதானத்தில் எதிர்வரும் 6 ஆம் திகதி முற்பகல் 11 மணியளவில் இடம்பெறவுள்ளது. எனவே விளையாட்டுக் கழகங்களின் பிரதிநிதிகளை இதன்போது தவறாது சமுகம் தருமாறு போட்டி ஏற்பாட்டுக் குழுவின் தலைவர் சுரேந்திரன் கேட்டுக் கொண்டுள்ளார். (ங-23)

## கூடைப்பந்தாட்ட அட்டவணை தயாரிப்பு

யாழ்.மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கத்தினால் 2013 ஆண்டில் நடத்தப்படவுள்ள சுற்றுப் போட்டிகளுக்கான போட்டி அட்டவணை தயாரிக்கும் நிகழ்வு யாழ். மத்திய கல்லூரி கூடைப்பந்தாட்ட திடலில் இன்று சனிக்கிழமை மாலை 5 மணியளவில் இடம் பெறவுள்ளது. (ங-23)

## 40 வயதுப் பிரிவுக்கான உதைபந்து யாழ். மாவட்டத்தில் ஜனவரியில்

யாழ்ப்பாணம்,டிசெ.29

யாழ். உதைபந்தாட்ட லீக் தனது அங்கத்துவ கழகங்களுக்கிடையில் நடத்தும் 40 வயது பிரிவுக்கு மேற்பட்டோருக்கான 9 பேர் பங்கு பற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடர் எதிர்வரும் ஜனவரி மாதம் நடுப்பகுதியில் இடம்பெறவுள்ளது.

மேற்படி போட்டிக்கான போட்டி அட்டவணை தயாரிக்கும் நிகழ்வு யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் ஜனவரி மாதம் 6 ஆம் திகதி மு.ப. 11 மணியளவில் நடைபெறவுள்ளது. எனவே அன்றைய தினம் குறித்த போட்டிக்கு விண்ணப்பித்த விளையாட்டுக்கழகங்களின் பிரதிநிதிகளை தவறாது சமுகம் தருமாறு போட்டி ஏற்பாட்டுக் குழுவின் தலைவர் கேட்டுக்கொண்டுள்ளார்.(ங-23)



... யில் வவுனியா மாவட்ட ரீதியாக நடத்திய பூப்பந்தாட்டச் சுற்றுப் ... யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகம், இரண்டாமிடத்தைப் பெற்றுக் கொண்ட வவுனியா தமிழ் யூனியன் விளையாட்டுக்கழக வீரர்கள் விளையாட்டு உத்தியோகத்தர் கமலனுடன். (ங-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பழி தீர்த்தது இந்தியா



யுவராஜ் சிங்கின் அதிரடித் துடுப்பாட்டத்தின் மூலம் பாகிஸ்தான் அணியைப் பழிவாங்கி, இரண்டாவது 20/20 போட்டியை வென்றது இந்தியா.

இந்திய-பாகிஸ்தான் அணிகள் மோதும் இரண்டு போட்டிகள் கொண்ட 20/20 தொடரில் முதலாட்டத்தை பாகிஸ்தான் வென்றிருந்தது. இந்த நிலையில் நேற்றைய போட்டியை வென்றால் மாத்திரமே கிண்ணத்தை பாகிஸ்தானிடம் தாரைவார்ப்பதைத் தவிர்க்க முடியும் என்ற நிலையில் இந்திய அணிகளமிறங்கியது.

அகமதாபாத்தில் பகல்-இரவு ஆட்டமாக நேற்று நடைபெற்ற இரண்டாவது போட்டியில் நாணயச் சுழற்சியில் வென்ற பாகிஸ்தான் முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

இந்திய அணியின் கம்பீரும், ரகானேயும் சிறப்பாக பாகிஸ்தானின் பந்துவீச்சை எதிர்கொண்டு ஆடத்தொடங்கினர். ஆயினும் அவர்கள் இருவரையும் தனது வேகத்தில் வெளியேற்றினார் உமர் குல். கம்பீர் 21 ஓட்டங்களுடனும், ரகானே 28 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர்.

அதன் பின்னர் விராட் ஹோக்லியும், யுவரஜ் சிங்கும் இணைந்து ஆடத்தொடங்கினர். 27 ஓட்டங்களுடன் ஹோக்லி 'ரன் அவுட்' ஆனார். ஆயினும் மறுமுனையில் டோனியுடன் இணைந்து பாகிஸ்தான் பந்துவீச்சைச் சிதறடித்தார் யுவராஜ்.

இவரது சிக்ஸர் மழையில் இந்திய அணியின் ஓட்ட எண்ணிக்கை எகிறத்தொடங்கியது. 7 சிக்ஸர்கள், 4 பவுண்டரிகள் அடங்கலாக 72 ஓட்டங்களை விளாசிய யுவராஜ், உமர் குல்லின் பந்தில் மாலிக்கிடம் பிடிகொடுத்து வெளியேறினார்.

டோனியும் 33 ஓட்டங்களுடன் உமர் குல்லின் பந்தில் 'போல்ட்' ஆனார். 20 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் இந்திய அணி 5 இலக்குகளை இழந்து, 192 ஓட்டங்களைக் குவித்திருந்தது. களத்தில் ரெய்னா 1 ஓட்டத்துடனும், ரோஹித் சர்மா 4 ஓட்டங்களுடனும் இருந்தனர்.

பாகிஸ்தான் அணி சார்பில் உமர் குல் அபாரமாகப் பந்து வீசி, 4 இலக்குகளைச் சரித்திருந்தார்.

192 ஓட்டங்கள் என்ற 'இமாலய இலக்கு' நோக்கி ஆடத்தொடங்கிய பாகிஸ்தானுக்கு அதன் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களான ஜம்ஷெட்டும், அஹமட்



ஷெக்ஸட்டும் நம்பிக்கையூட்டினர். இவர்கள் இருவரும் இணைப்பாட்டமாக 74 ஓட்டங்களைப் பகிர்ந்துகொண்டனர்.

அஸ்வினின் சுழலில் ஜம் ஷெட் 41 ஓட்டங்களுடன் வெளியேறினார். அடுத்த பந்துப்பரிமாற்றத்தில் யுவராஜின் பந்துக்கு இரையானார் ஷெக்ஸட். இவர் 31 ஓட்டங்களை எடுத்திருந்தார்.

தொடர்ந்தும் உமர் அக்மலும் மொஹமட் ஹபீசும் ஆட்டத்தைத் தங்கள் கையில் எடுத்துக்கொண்டனர். எனினும் டின்டாவின் வேகத்தில் 24 ஓட்டங்களை எடுத்திருந்த உமர் அக்மல் சரிந்தார்.



அதன் பின்னர் களமிறங்கிய அப்ரிடி அதிரடியில் குதித்தார். இவரின் ஆட்டத்தில் அனல் பறந்தபோதும், அவரும் நீடிக்கவில்லை. 5 பந்துகளில் 11 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் அப்ரிடி ஆட்டமிழந்தார்.

இதேநேரம் பொறுப்பாகவும், அதிரடியாகவும் ஆடிக்கொண்டிருந்த பாகிஸ்தான் அணித்தலைவர் ஹபீஸ் அரைச்சதம் கடந்தார். வெற்றியை பாகிஸ்தான் நெருங்கிக்கொண்டிருந்த சமயத்தில் டின்டாவின் பந்தில் ஹபீஸும், கம்ரன் அக்மலும் அடுத்தடுத்து வீழ்த்தப்பட்டனர். இதனால் ஆட்டத்தின் போக்கே மாறியது.

இறுதியில் பாகிஸ்தான் அணியால் 7 இலக்குகளை இழந்து 181 ஓட்டங்களை மட்டுமே பெறமுடிந்தது. இந்திய அணி சார்பில் அசோக் டின்டா 3 இலக்குகளைக் கைப்பற்றினார்.

இதனால் 11 ஓட்டங்களால் வெற்றியீட்டிய இந்திய அணி 1-1 என்ற ரீதியில் தொடரைச் சமநிலைப்படுத்தியது.

ஆட்டநாயகனாக யுவராஜ் சிங்கும், தொடர்நாயகனாக ஹபீஸும் தெரிவாகினர். (ந)

# இலங்கையை இரையாக்கியது ஆஸி.

ஆஸ்திரேலிய அணிக்கு எதிராக மெல்பேர்னில் நடைபெற்ற இரண்டாவது டெஸ்டில் இலங்கை அணி இன்னிங்ஸ் தோல்வியைச் சந்தித்துள்ளது.


ஆஸ்திரேலியா சென்றுள்ள இலங்கை அணி 3 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் பங்கேற்கிறது.

முதல் டெஸ்டில் ஆஸ்திரேலியா வென்றிருந்தது. இந்த நிலையில் இரண்டாவது டெஸ்ட் மெல்பேர்னில் நடைபெற்றது.

இதில் முதல் இன்னிங்ஸில் இலங்கை அணி 156 ஓட்டங்களுக்குள் சுருண்டது. இரண்டாவது நாள் ஆட்ட நேர முடிவில், ஆஸ்திரேலிய அணி முதல் இன்னிங்ஸில் 8 இலக்குகள் இழப்புக்கு 440 ஓட்டங்கள் எடுத்திருந்தது. ஜோன்சன் 73 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தார்.

நேற்று நடைபெற்ற மூன்றாம் நாள் ஆட்டத்தில் முதல் இன்னிங்ஸைத் தொடர்ந்த ஆஸ்திரேலிய அணிக்கு லியான் (1) நிலைக்கவில்லை. அடுத்து வந்த பேர்ட் 'டக் - அவுட்'டாக முதல் இன்னிங்ஸில் ஆஸ்திரேலியா 460 ஓட்டங்களுக்கு அனைத்து இலக்குகளையும் இழந்தது. ஜோன்சன் 92 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தார்.





பின் 304 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் இரண்டாவது இன்னிங்ஸைத் தொடங்கிய இலங்கை அணி, ஆஸ்திரேலிய வேகத்தில் தடுமாறியது.

ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் கருணாரத்ண 1 ஓட்டம் எடுத்த நிலையில் ஆட்டமிழந்தார். டில்ஷன், அணித்தலைவர் ஜெயவர்த்தன, சமரவீர என்று தொடர்ச்சியாக முன்வரிசை வீரர்கள் ஆட்டமிழக்க இலங்கை அணி தடுமாறியது.

இது போதாதென்று ஆஸியின் பந்துவீச்சை ஓரளவு சமாளித்து சங்ககார, ஜோன்சன் வேகத்தில் காயம் அடைந்து வெளியேறினார்.

அடுத்து வந்த பிரசாத் (17) லியான் சுழலில் ஆட்டமிழந்தார். பிரசன்ன ஜெயவர்த்தன, வெலகெதர ஆகியோர் காயம் காரணமாக களமிறங்கவில்லை.

எனவே இலங்கை அணியின் இரண்டாவது இன்னிங்ஸ் 7 இலக்குகள் இழப்புக்கு 103 ஓட்டங்கள் எடுத்த நிலையில் முடிவுக்கு வந்தது. இதையடுத்து ஆஸ்திரேலியா ஒரு இன்னிங்ஸ் மற்றும் 201 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. அத்துடன் இலங்கைக்கெதிரான 3 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரையும் 2-0 என ஆஸ்திரேலியா கைப்பற்றியது. ஆட்ட நாயகனாக ஜோன்சன் தெரிவானார். (ந)

# சங்காவுக்கு காயம்



இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் அணித்தலைவர் குமார் சங்ககாராவுக்குக் கையில் எலும்புமுறிவு ஏற்பட்டுள்ளது. இதனையடுத்து அவருக்கு நேற்று மாலை அறுவைச் சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது.

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில், குமார் சங்ககார விளையாடிக்கொண்டிருந்த போது ஆஸ்திரேலிய வீரர் மிட்சல் ஜோன்சன் வீசிய பந்து சங்ககாரவின் இடது கையைத் தாக்கியது.

இதனால் உடனடியாக மைதானத்தை விட்டு வெளியேறினார் சங்ககார. இதன் பின் நடத்தப்பட்ட பரிசோதனையில் அவரது சுட்டுவிரலில் முறிவு ஏற்பட்டிருப்பது கண்டறியப்பட்டது.

இதனையடுத்து நேற்று மாலை அவருக்கு அறுவைச் சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. இதன் காரணமாக 6 வாரங்கள் சங்ககார போட்டிகளில் பங்கேற்க முடியாது என்று வைத்தியர்கள் தெரிவித்தனர். இதனால் அவர் ஆஸ்திரேலியத் தொடரில் இனி நடைபெறவுள்ள ஆட்டங்களில் பங்கேற்க மாட்டார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விற்பனைக்கு

கறுப்பு பிளஷர் (plesure) VDxxx, இறக்குமதி செய்யப்பட்ட கண்ணாடி சாப்பாட்டு மேசை விற்பனைக் குண்டு.

# 175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு advt@uthayan.com 0215671111

புதிய முகவரி
ஹரன் ஜுவல்லர்ஸ்
நகை - வைர வியாபாரிகள்
இல: 217, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021-2226083, 0714182480

தமிழில் நற்சிந்தனைகள் துளிர்விட
வாக்கிய பஞ்சாங்க யுனிலங்காஸ் நாட்காட்டிகள்
தினசரி ராசிபலன்கள், சுபமுகூர்த்த தினங்கள், சான்றோர் பொன்மொழிகள், அழகுதரும் இந்து, கிறிஸ்தவ தெய்வீக வண்ணப்படங்களுடன் விலை 200/-
யுனிலங்காஸ் வாக்கிய பஞ்சாங்க கலண்டர்
முற்றிலும் வண்ணமயமான அச்சில் வாக்கிய பஞ்சாங்க குறிப்புகளுடன், தெய்வீக வண்ணப்படங்களுடன், கலண்டரின் பின்பகுதியில் வடபழனி முருகு பாலமுருகன் அவர்களால் கணிக்கப்பட்ட 12 மாதங்களுக்கும் ராசிப்பலன்கள், சுபமுகூர்த்த தினங்கள் அடங்கியது விலை 140/-
யுனிலங்காஸ் வாக்கிய பஞ்சாங்க கலண்டர்
முற்றிலும் வண்ணமயமான அச்சில் வாக்கிய பஞ்சாங்க குறிப்புகளுடன், கலண்டரின் பின்பகுதியில் ஜோதிட பீஷ்மாச்சாரியார் திண்டுக்கல் Dr. கே.எம். முருகேசன் அவர்களின் எண்கணித பலன்கள் ஒவ்வொரு மாதத்திற்கும் பிறந்த திகதி பலன்கள், சுபமுகூர்த்த தினங்கள் அடங்கியது விலை 90/-
வியாபாரிகளுக்கு விசேட கழிவு ராசிபலிஇலும் கிடைக்கும்
வெளியீடு: யுனிலங்காஸ்-077 6258778
இல.32, செட் அந்தனீஸ் மாவத்தை கொழும்பு 13.
பேரம் பார்த்து வாங்க அல்ல தரம் பார்த்து வாங்க யுனிலங்காஸ்

விகினா கல்வி நிறுவனம் 52, ஸ்ரான்லி வீதி,யாழ்.
A/L 2015
கலை, வர்த்தக வகுப்புக்கள்
ஆரம்பம்:6.1.2013 காலை 9 மணி
(முதல் அனுமதி பெறும் 100 மாணவர்களுக்கு அனுமதிக் கட்டணம் இலவசம்)

A/L - 2015
கலை வர்த்தகம்
ஆரம்பம் - 05.01.2013
சனி - காலை - 9.00
DCM

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்கு தோற்றும் 2013 மாணவர்களுக்கு
புலமைச்சங்கமம்
(புதிய பாடத்திட்டத்திற்கு அமைவானது)
ஆக்கம்: சன் சுதர்ஷன்
விலை 450/-
வெளியீடு: யுனிலங்காஸ்-077 6258778
எல்லா புத்தகசாலைகளிலும் கிடைக்கும்

CHEMISTRY
83/19, அரசடி வீதி, யாழ்ப்பாணம்.
2015 A/L ஆரம்பம்:- 30.12.2012 ஞாயிறு, 5.30pm
Day Class 2013 A/L ஆரம்பம்:- 30.12.2012 ஞாயிறு, 4.30pm
N.கலா

உயிரியல் பூங்கா
இன்று ஆரம்பம்
Biology - 2015
ஆரம்பம் 5.pm
க. பொன்திவாகரன்
மானிப்பாய்

A/L 2015
கலை, வர்த்தக
கணித உயிரியல் பிரிவு
ஜனவரி 05 சனி 8.00மணி
புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன.
NEC பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

THE SCIENCE CORNER
Clock Tower Lane - Jaffna
PHYSICS 2015
Batch - I -Sat, Sun 8.00 - 9.30 am
Batch - II -Tue, Thu 3.00 - 4.30 pm
By - செல்வன்

CHEMISTRY COURT
80, ARASADY ROAD, JAFFNA.
இரசாயனவியல்
2015 A/L
ஆரம்பம்: 31.12.2012
நேரம்: 4.00pm
(தமிழ், ஆங்கில மொழிமூல வகுப்புக்கள்)
By - RAJAH

நியூமிறைற் கல்வி நிலையம்
95, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
14 வருட சேவையில்.........
தரம் 3 4 5 6 7 8 9 10 11(O/L)
எமது முன்னணி ஆசிரியர்கள்
கணிதம்:- திரு.R.K மேனன், திரு. பகிரதன், செல்வி யசோதா
விஞ்ஞானம்:- திரு.குமரன், திரு.அரசகுல சூரியன்
தமிழ்:- திரு.ஜனகன், திரு. நமணன், திரு.சுமநன்
வரலாறு / புவியியல் / குடியுரிமை :- திரு.திருச்செல்வநாதன், திரு.குகனேசன், திரு.சதீஸ்
ஆங்கிலம்:- திரு.மதன், திரு.மயூரன், செல்வி சிந்துஜா
வணிகக் கல்வியும் கணக்கீடும்:- திரு. கலிஸ்ரஸ்
ஆரம்பம்: 02.01.2013
புதன் மாலை 3 மணி
அனுமதிகளைப் பெற்றுக் கொள்ளவும்.
இயக்குநர்.

BRITISH COLLEGE OF HIGHER STUDIES
BCHS
2013 புதுவருடத்தை முன்னிட்டு
விசேட கட்டணக் கழிவில் சர்வதேசத் தரங் கொண்ட கற்கை நெறிகள்
BI Exam - Student Visa முறை UK செல்பவர்களுக்கானது
City & Guilds இன் B1 பரீட்சை ஏனைய ஆங்கிலப் பரீட்சைகளை விட மிகவும் இலகுவானதுடன் இது G.C.E. (O/L) English இற்கு ஒப்பானது. இது British High Commission னால் முற்றிலும் அங்கீகரிக்கப்பட்டதுடன் எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கும் தோற்றமுடியும்.
Duration : 2 Months
Spoken English With Grammar - Quick Learning Course (1 1/2 Months)
ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்க விரும்புவர்களுக்காகவே நடாத்தப்படுகிறது. தொழில் புரிபவர்களுக்கு பிற்பகல், சனி மற்றும் ஞாயிறு வகுப்புக்கள் உண்டு.
A/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கு இது மிகவும் சிறந்தது.
வகுப்புக்கள் யாவும் புதிய தொழில் நுட்பத்திற்கமைவாகவும் (Video & Audio Visuals) கூடுதலான பயிற்சிகளுடன் நடாத்தப்படுகிறது.
Diploma In English (2 Months)
ஒரு தொழில் தேடுவதாயினும் சரி உயர் கல்வியினைத் தொடருவதாயினும் சரி ஆங்கிலத்தின் தற்காலத்தேவையும் அதிலே உங்களின் புலமை என்பதும் இன்றியமையாதது. இத்தேவைகேற்ப எமது பாடத்திட்டங்களும் வகுப்புக்களும் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது.
தொழில் புரிவோர் மாணவர்களுக்கென வகுப்புக்கள் உண்டு.
A1 Exm - Sponsor / Settlement Visa மூலம் UK செல்பவர்களுக்கான பரீட்சை
U.K. அரசாங்கத்தினால் சிபார்சு செய்யப்பட்டது
எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கு தோற்ற முடியும்
சான்றிதழின் வலிது கால எல்லை அற்றது.
நம்பிக்கைக்குரிய சர்வதேச பரீட்சை
ஏனைய பரீட்சைகளை விட மிகவும் இலகுவானது
புதிய வகுப்புகள் Batch I : 07-01-2013 Batch II : 12-01-2013 Batch III : 14-01-2013 Batch IV : 19-01-2013
மேலதிக விபரங்களுக்கும் இலவச ஆலோசனைகளுக்கும் இன்றே எம்மைத் தொடர்பு கொள்ளவும்.
Jaffna Branch: No. 15, Sirambiyady Lane, off Stanley Road, Jaffna. Tel: 021 222 4550
Vavuniya Branch: No. 3, 6th Lane, Vairavarkovil Veethy, Vairavarpulliyamkulam, Vavuniya.
Hot Lines : 0777222422 0777585913, 0714299935, 0777730074

க.பொ.த.(சாதாரண)பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கான
ஆங்கிலம் மற்றும் கணினி கற்கை நெறிகள்
Study English language and get FREE DIPLOMA IN Information Technology Course
ENGLISH courses for student visa/settlement visa/work visa
IELTS ETS TOEIC ETS TOEIC Bridge
Spoken English / Basic English /English for work
General English
KET (Key English Test) A1
PET (Preliminary English Test) B1
• விசேட தகமையுடைய ஆசிரியர்களால் வகுப்புக்கள் நடாத்தப்படுகின்றன.
• சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்கள்.....
மேலதிக தொடர்புகளுக்கு:
International knowledge pool
19, 3rd floor , stanley road, Jaffna.
[People's Bank Building]
T.p 0212221864, 0771895164

யாழ் நகரில் முதன் முதலாக
முற்றுமுழுதான நவீன உபகரணங்களுடனான
அழகுக்கலை
சிகை அலங்காரம்
முக ஒப்பனை
நக அலங்காரம்
மணப்பெண் அலங்காரம்
மட்டுப்படுத்தப்பட்ட ஆசனங்கள் மட்டுமே பதிவுகளை உடனடியாக மேற்கொள்ளவும்.
3,6 மாத கால பயிற்சி நெறிகள்
வெளிநாடு செல்வோருக்கான குறுகிய கால பயிற்சி நெறிகள்
Sunny Shears
19, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் (மக்கள் வங்கிக் கட்டிடம் 3வது மாடி)
2221864 / 0771895164
Beauty & Hair Academy and Service Centre


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 29.12.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

ஒரு தவறைச் செய்யும் மனிதன் அதனைத் திருத்திக் கொள்ளாவிட்டால் அதுவும் ஒரு தவறே
-கன்பூசியஸ்

# வார வசந்தம்

01

உதயன் | 29 டிசெம்பர் 2012 | சனிக்கிழமை | பக்கங்கள்: எட்டு

# உதவுவது உபத்திரவம் கொடுக்குமா..?



■ ராஜராஜன்

மற்றவர்களுக்கு உதவுவது என்பது தெய்வ குணமாகும். மனிதனாய்ப் பிறந்த ஒவ்வொருவரும் தமது சக்திக்கு ஏற்றவாறு ஏனையோருக்கு உதவ முடியும். இதில் கிடைக்கும் மகிழ்ச்சியும் மன நிம்மதியும் எதிலும் கிடைக்காதவை. அதிலும் உண்மையாகவே உதவி தேவைப்படும் ஒருவருக்கு உரிய நேரத்தில் உதவும்போது கிடைக்கும் மன ஆறுதல் மகத்தானது.

ஆனால் எம்மில் பலருக்கு இந்த எண்ணம் ஏனோ தோன்றுவதில்லை. உதவி செய்வதை உபத்திரமாகவே இவர்கள் நோக்குகின்றனர்.

மேலும் பலர் பணத்துடன் தொடர்புடைய விடயமாகவே இதனைக் கருதுகின்றனர். இது முற்றுமுழுதாகத் தவறானதொரு சிந்தனையாகும். பல்வேறு விதங்களில் நாம் உதவ முடியும்.

பசியென்று வருபவர்களுக்கு உணவை வழங்கி அவர்களின் பசியைப் போக்குவதும் ஆபத்து வேளையில் ஒருவருக்கு உதவுவதும் மன வேதனையில் மூழ்கியிருக்கும் ஒருவரை ஆறுதல் படுத்தி அமைதியை ஏற்படுத்துவதும் உதவிகள்தான்.

மேலும் மிகச் சிறிய விடயங்களில் கூட எமது உதவும் மனப்பான்மையை நாம் வெளிப்படுத்த முடியும்.

ஆனால், தற்போது சிக்கலானதொரு நிலை தோன்றியுள்ளது. உதவி செய்வதற்கு தகுதியானவர்கள் யாரென்பதைத் தீர்மானிப்பதுதான் அது. இதில் நாம் விழிப்புடன் இருக்க வேண்டும். இல்லாவிட்டால் உபத்திரவம்தான் எமக்கு மிஞ்சும்.

ஏனென்றால் மனிதர்கள் தற்போது நன்றாகவே நடிக்கப் பழகிவிட்டார்கள். இவர்களை எடை போடுவதென்பது எம்மால் முடியாத காரியம்.

பிச்சைக்காரர்களாக அலைபவர்கள் எல்லோருமே ஏழ்மை நிலையிலுள்ளவர்கள் என்ற நிலை மாறி பிச்சையெடுத்தே லட்சாதிபதிகளாக மாறியவர்கள் தொடர்பான செய்திகள் அடிக்கடி வெளிவந்து கொண்டிருக்கின்றன.

இதனால் உதவும் மனப்பான்மையுடையவர்கள் ஒதுங்கிக்கொள்ள உண்மையாகவே பிச்சையெடுத்துப் பிழைப்பவர்களும் பாதிக்கப்படுகின்றனர்.

அண்மையில் யாழ். நகரில் மினிபஸ் ஒன்றினுள் நடந்த சம்பவமொன்று உதவி செய்வதற்கு விரும்புபவர்களுக்கு ஒரு தடுமாற்றத்தை ஏற்படுத்தியதென்பதில் ஐயமில்லை.

அந்த மினிபஸ்ஸின் இருக்கைகள் நிறைந்து காணப்பட்டன. பல பிரயாணிகள் இருப்பதற்கு இடமின்றி நின்று கொண்டிருந்தனர். திடீரென ஒரு முனகல் ஒலி கேட்கின்றது. அதனைத் தொடர்ந்து இருமலும் சேர்ந்து 'என்னால் முடியவில்லை' என்ற சொற்கள் முனகலின் சுருதியுடன் இணைந்து கேட்கின்றன. மினிபஸ்ஸின் உள்ளேயிருந்த பிரயாணிகள் திரும்பிப் பார்க்கின்றனர். நடுத்தர வயதுடைய பெண்ணொருவர் இருமியவாறு முனகல் ஒலியுடன் உள்ளே நுழைகின்றார். அவரது செய்கைகள் அவரொரு மோசமாகப் பாதிக்கப்பட்ட பெண் என்பதைக் காட்டி நிற்கின்றன.

மற்றவர்கள் தன்னைத் திரும்பிப் பார்ப்பதை உணர்ந்ததும் அந்தப் பெண் தமது வேதனையின் வெளிப்பாடுகளை அதிகரித்துக் காண்பிக்கின்றார்.

ஒருசில அனுபவசாலிகள் இதனை அவதானித்ததும் கண்களை மூடிக் கொண்டு நித்திரையில் ஆழ்ந்திருப்பதைப் போன்று பாசாங்கு காட்டுகின்றனர். ஆனால் நாகரிகமாக உடையணிந்து இரண்டு பொருட்கள் அடங்கிய பைகளை வைத்திருந்த பெண்ணொருவர் எழுந்து அந்த முனகல் நங்கைக்கு இடம்கொடுக்கின்றார். இடம் கிடைத்ததும் இருமலும், முனகல் ஒலியும் அந்தப் பெண்ணிடமிருந்து விடைபெற்றுக் கொள்கின்றன. அவரது முகத்தில் ஒரு வெற்றிப் புன்னகை. இதனைத் தொடர்ந்து கையில் வைத்திருந்த கச்சானின் கோதுகளை உடைத்து விதைகளை ஒவ்வொன்றாக வாயினுள் தள்ளுகின்றார். அப்போது கூட இருமல் அவரை அணுகவில்லை. இவருக்கு இடம்கொடுத்த அந்தப் பெண்மணி கைகளில் பைகளைத் தாங்கிய வண்ணம் நெரிசலில் நசிபட்டு அவஸ்தைப்பட்டுக் கொண்டிருக்கின்றார்.

இந்தச் சம்பவத்தை அவதானித்த எவராவது இனிமேல் வேறு எவருக்காவது தாம் அமர்ந்திருக்கும் ஆசனத்தை வழங்குவதற்குத் துணிவார்களா? இதனால் பாத்திரமறிந்து பிச்சை இடு என்று எமது முன்னோர்கள் கூறினார்கள்.

உண்மையாகவே உதவி தேவைப்படுவோருக்கு உதவுவது எமது தலையாய கடமையாகும். இதுவே சிறந்த மனிதப் பண்புமாகும்.

இங்கு இடம்பெற்ற இறுதிக் கட்டப் போரின் போது பயங்கரவாதத்தை ஒழித்து மக்களை மீட்பதற்கான மனிதாபிமான போர் என்ற சுலோகத்தை நம்பியதால் அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலக நாடுகள் இலங்கை அரசுக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் வாரி வழங்கின. ஆனால் போர் ஓய்ந்த பின்னரே உண்மை நிலையை அவை உணர்ந்து கொண்டன. இதுவொரு காலம் கடந்த ஞானமாகப் போனதால் பயன் எதுவும் கிடைக்கவில்லை. போருக்கு முன்னர் உண்மைநிலை தெரிந்திருக்குமாயின் இங்கு நிகழ்ந்த அழிவுகளும், அவலங்களும் தடுக்கப்பட்டிருக்கும்.

இவ்வாறு பல சம்பவங்களை அடுக்கிக் கொண்டே போகலாம்.

முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என். சில்வாவின் நீதிமன்றத் தீர்ப்புக்கள் மிகவும் பிரசித்தமானவை. வடக்கு கிழக்கு மாகாணங்களின் இணைப்புக்கு எதிரான தீர்ப்பு, சுனாமிக் கட்டமைப்பிலிருந்து புலிகளை ஒதுக்கி வைப்பதற்கான தீர்ப்பு ஆகியவற்றைத் தமிழ் மக்கள் என்றென்றும் நினைவில் வைத்திருப்பர். மேலும் தற்போதைய ஜனாதிபதி பிரதமராக இருந்தபோது அவருக்குச் சாதகமாக வழங்கப்பட்ட வழக்கொன்றின் தீர்ப்புத் தொடர்பாக சரத் என் சில்வா தற்போது கவலை தெரிவித்து அறிக்கை விடுகின்றார். தாம் தவறான வகையில் உதவி புரிந்ததாக அவர் புலம்புவது துலாம்பரமாகத் தெரிகின்றது. இது போன்றவர்களின் இலட்சணம் இதுதான்.

ஆகவே நாம் மற்றவர்களுக்கு உதவ வேண்டுமென்பதில் கருத்து வேற்றுமையே இல்லை. ஆனால் 'பாத்திரமறிந்து பிச்சை எடு' என்பதையும் ஒரு கணம் சிந்திக்க வேண்டும்.

ஏனென்றால் எமது உதவிகள் உரியவர்களைச் சென்றடைகின்றனவா என்பதை நாம் ஒரு கணம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். தவறானவர்கள் உதவி பெறுபவர்களாயின் அது உபத்திரவமாக எமக்கு எதிராக மாறும் நிலையும் தோன்றலாம். சில வேளைகளில் மகாபாரதத்தில் கர்ணனுக்கு நிகழ்ந்த கதியும் எமக்கு ஏற்படலாம். ஆகவே உதவுவதற்கு முன்னர் நன்கு சிந்தியுங்கள். சிந்தித்த பின்னர் தாமதமின்றி உதவ முன்வாருங்கள். இத்தகைய உதவிகள் உதவி பெறுபவருக்கு மட்டுமல்லாது எமக்கும் மன நிறைவைக் கொடுக்கும். ஆகவே சிந்திப்போம், உதவுவோம் என்ற தாரக மந்திரம் எமது மனங்களில் என்றுமே நிலைக்கட்டும். ★

> " பசியென்று வருபவர்களுக்கு உணவை வழங்கி அவர்களின் பசியைப் போக்குவதும் ஆபத்து வேளையில் ஒருவருக்கு உதவுவதும் மன வேதனையில் மூழ்கியிருக்கும் ஒருவரை ஆறுதல் படுத்தி அமைதியை ஏற்படுத்துவதும் உதவிகள்தான். தற்போது சிக்கலானதொரு நிலை தோன்றியுள்ளது. உதவி செய்வதாகத் தகுதியானவர்கள் யாரென்பதைத் தீர்மானிப்பதுதான் அது. இதில் நாம் விழிப்புடன் இருக்க வேண்டும். இல்லாவிட்டால் உபத்திரவம்தான் எமக்கு மிஞ்சும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெற்றுக் கனவுகள் ...



■ இணையோன்

வாழ்க்கை என்ற தேர் வெற்றிப் பாதையில் நகர மூன்று குதிரைகள் பூட்டப்பட்டிருக்க வேண்டும். அறிவு, உணர்வு, செயல்திறன்.

உணர்வுத் திறனையும் அறிவுக் கூர்மையையும் வளர்த்துக் கொள்ளும் வழிகளைப் பற்றி இதுவரை பார்த்தோம்.

செயல்திறன் என்கிற குதிரைதான் மையமாக இருக்க வேண்டிய குதிரை. பல சிறந்த, அறிவாற்றல் நிறைந்த சிந்தனையாளர்கள் கூடத் தூங்கி வழிந்து தோற்றுப் போவதை நாம் பார்க்கிறோம். நல்ல உணர்வுப் பக்குவம் உடையவர்கள் கூடச் செயல்படாவிட்டால் பயனில்லை.

எனவே வெற்றிக்குச் செயல்திறன் மிக மிக அவசியம். வெற்றிக்கு வழிகாட்டும், பல நூல்கள் இன்று வெளிவருகின்றன. இவை பெரும்பாலும் செயல்திறன் வளர்ச்சி பற்றித்தான் வலியுறுத்துகின்றன.

வெற்றிக்கு அடித்தளம் கனவு என்கிறார்கள்! உயர்ந்த கனவு! லட்சியக் கனவு! நெடு நோக்குடைய கனவு!

ஆனால் கனவு மட்டும் போதுமா? கனவு மெய்ப்பட வேண்டாமா? அதற்கு என்ன செய்வது?

நம்மில் பலரும் ஆசைப்படுகிறோம். கனவும் காண்கிறோம்! நான் மட்டும் ஒரு கோடீஸ்வரனாக இருந்தால்... நான் மட்டும் முதலமைச்சரானால்...

இது வெறும் பகல் கனவு! செயலுக்கு வழி வகுக்காத கனவு! வெற்றுக் கனவு!

இப்படிப்பட்ட கனவுகள் பல நேரங்களில் கையில் இருப்பதையும் அழித்து விடும்!

இந்த நேரத்தில் ஒரு கதை நினைவுக்கு வருகிறது.

முட்டை விற்பதற்காகத் தலையில் கூடையுடன் நடந்து போகும் பெண் பகற்கனவு காண்கிறாள்! அதிக லாபம் பெற்று... மேலும் அதிக முட்டை விற்று முட்டைக்கடை வைத்து... வீடு கட்டி... நகை போட்டு... ஜொலிப்பேன்... என்னைக் கட்டிக் கொள்ள ஆண்கள் வரிசையில் வருவார்கள்... மாட்டேன் மாட்டேன் என்று தலையை ஆட்டுவேன்... என்று தலையை ஆட்டிப் பார்த்தாள். முட்டைக்கூடை கீழே விழுந்தது. முட்டைகள் உடைந்து நொறுங்கின. இது முட்டையில் கட்டிய கனவுக் கோட்டை.

இன்னும் சிலர் அவசரக் கனவு காண்கிறார்கள்... பணத்தை இரட்டிப்பாக்கும் உத்தி... பல தவறான குறுக்கு வழிகள்... இப்படிப்பட்ட குறுக்கு வழிக் கனவுகள் எங்கே கொண்டு போய்விடும்... உள்ளத்தையும் இழந்து விட்டு நடுத் தெருவுக்கு வருவதைத் தவிர வேறு வழி?

இன்னும் சிலர் எதையாவது செய்து கொண்டிருந்தால் வெற்றி பெற்று விடலாம் என்று நம்புகிறார்கள்... இவர்கள் மிகவும் சுறுசுறுப்பாக எதையாவது செய்து கொண்டிருப்பார்கள்! ஓடி ஆடி அலைந்து கொண்டே இருப்பார்கள்! கடைசியில் என்ன மிச்சம் என்று கேளுங்கள்! ஒன்றும் இருக்காது!

ஓர் இளைஞன் எதிரே வந்த பெரியவரைப் பார்த்துக் கேட்டானாம், இந்தப் பாதை எங்கே போகிறது என்று?

பெரியவர் கேட்டார், தம்பி நீ எங்கே போக வேண்டும் என்று?

பையன், குறிப்பாக எங்குமில்லை என்றான்.

பெரியவர் சொன்னார் அப்படியானால் போய்க்கொண்டிரு, இந்தப் பாதை எங்கு போனால் என்ன?

இன்று இந்த இளைஞனைப் போல் தான் நிறையப் பேர் இருக்கிறோம். ஒவ்வொரு நாளும் மளமளவென்று எதை எதையோ செய்து கொண்டிருக்கிறோம். எதற்காகச் செய்கிறோம்? ஏன் செய்கிறோம் என்று தெரியாமலேயே பல வேலைகளைச் செய்கிறோம்.

பகல் கனவு! குறுக்கு வழிக் கனவு! தெளிவில்லாத கனவு! செயற்படாமல் மந்திரத்தில் மாங்காய் காய்த்துவிடும் என்று ஜோதிடத்தை நம்பிக் காத்துக் கிடக்கும் சோம்பல் கனவு!


இந்தக் கனவுகள் எதுவும் நமது வெற்றிக்குப் பயன்படாது.

நாம் நிச்சயம் கனவு காண வேண்டும். இளம் வயது முதலே சிறந்த இலட்சியக் கனவுகளை வளர்த்துக் கொள்ள வேண்டும்! ஆனால் அது செயல்படுத்தக் கூடிய கனவாக இருக்க வேண்டும். செயலுக்குரிய அடுத்த கட்டங்களைத் தெளிவாகச் சுட்டிக் காட்டக் கூடிய கனவாக இருக்கவேண்டும்.

எங்கே எப்படிப் போகவேண்டும் என்பதைப் படிப்படியாக பட்டியலிட்டு சுட்டிக்காட்டும் கனவாக இருக்கவேண்டும்.

பகல் கனவு, குறுக்கு வழிக் கனவு, அவசரக் கனவு, சோம்பல் கனவு என வெற்றுக் கனவுகள் பலவகை! நாம் காணும் வெற்றிக் கனவு தெளிவானதாக, விரிவானதாக, படிப்படியாகச் செயலுக்கு வழிகாட்டக் கூடியதாக இருக்க வேண்டும்.

# வாழ்க்கை சுமையா? சுவையா?



**வாழ்க்கை சுமை என்று நாம் உறுதியாக நம்பினால் அது நிச்சயம் எதிர்மறைப் பார்வை என்பார்கள். இந்தப் பார்வை உடையவர்கள் தங்களையே நம்ப மாட்டார்கள். துணிச்சலாகப் புதிய முயற்சிகளில் ஈடுபட மாட்டார்கள்.**

**முன்னேறுபவர்களைப் பார்த்துப் பொறாமைப்படுவார்கள், குமுறுவார்கள், மற்றவர்களையும் நம்பமாட்டார்கள்! இவர்களுக்கு நல்ல உறவும் நட்பும் குறைவாகவே இருக்கும்.**

**மன அழுத்தம், மன இறுக்கம் போன்றவை இவர்களைப் பற்றிக் கொள்ளும். மன இறுக்கம் தொடர்பான இரத்த அழுத்தம், பக்கவாதம் உள்ளிட்ட நோய்கள் இவர்களைத் தாக்கும் வாய்ப்புகள் அதிகம்.**

பாகற்காய் கசக்கும்தான்! ஆனால் அதை விரும்பிச் சாப்பிடுபவர்கள் ஏராளம்பேர். பாகற்காயின் மருத்துவக் குணங்களுக்காக அல்ல! கசப்பைச் சுவைப்பவர்களே ஏராளம்.

சர்க்கரை இனிப்புதான்! ஆனால் இனிப்பை வெறுப்பவர்கள் நிறையப்பேர் இருக்கிறார்கள். தங்களுக்குச் சர்க்கரை நோய் இருப்பதால் இனிப்பை வெறுப்பவர்களைச் சொல்லவில்லை! இனிப்புச் சுவையையே பிடிக்காதவர்கள் இருக்கிறார்கள்.

வாழ்க்கை கசக்கிறதா? இனிக்கிறதா? என்ற கேள்விக்குரிய பதிலும் இப்படிப்பட்டதுதான்.

ஒரே வகுப்பு! ஒரே பாடம்! சிலருக்குப் பாடம் பிடிக்கிறது. சிலருக்குப் பிடிக்கவில்லை! காரணம் பாடமா அல்லது படிப்பவரின் மனநிலையா?

பலர் தேர்வை எழுதுகிறார்கள். முதல் மதிப்பெண் கிடைக்கவில்லையே என்று பலர் அழுகிறார்கள்! கடைசி வரிசையில் பலர் வழக்கம் போல் சிரிக்கிறார்கள். காரணம் மதிப்பெண்களா? மனநிலையா?

கடன் ஒரு பெரிய வாழ்க்கைச் சுமைதான். என் நண்பர் ஒருவர் பல சகோதரிகளுக்கு மணம் முடித்துத் தந்தையாய் நின்றவர். கடன் சுமையில்லா நாளில்லை! ஆனால் எப்போதும் மகிழ்ச்சிப் புன்னகை. கடன் சுமையைச் சுமப்பதே ஒரு சுவையாகிப் போய்விட்டது என்கிறார்!

மகிழ்ச்சியாக வாழும் ஏழைகளும் உண்டு!

சோகத்தில் மூழ்கியிருக்கும் பணக்காரர்களும் உண்டு!

படித்த ஏமாளிகளும் உண்டு! படிக்காத மேதைகளும் உண்டு!

வாழ்க்கை சுவையா, சுமையா என்பது நாம் எங்கே எப்படி இருக்கிறோம் என்பதைப் பொறுத்தது அன்று! நமது சூழல் நமக்குச் சாதகமாக இருக்கிறதா என்பதைப் பொறுத்ததும் அன்று!

வாழ்வின் சுவையும் சுமையும் நமக்கு வெளியே இல்லை! அது நமக்குள்ளே இருக்கிறது! சுவைக்க தெரிந்த மனிதருக்கு வாழ்க்கை கரும்பு! சுவைக்கத் தெரியாத மனிதருக்கு அதுவே கற்பாறை!

வாழ்க்கை சுவையானது என்று நாம் உறுதியாக நம்பினால் அது சுவையானது தான். அதுவே சுமையானது என்று நாம் உறுதியாக நம்பினால் அது நிச்சயம் சுமையானதுதான்.

வாழ்க்கை சுமை என்று நாம் உறுதியாக நம்பினால் அது நிச்சயம் எதிர்மறைப் பார்வை என்பார்கள்.

இந்தப் பார்வை உடையவர்கள் தங்களையே நம்ப மாட்டார்கள். துணிச்சலாகப் புதிய முயற்சிகளில் ஈடுபட மாட்டார்கள்.

முன்னேறுபவர்களைப் பார்த்துப் பொறாமைப்படுவார்கள், குமுறுவார்கள், மற்றவர்களையும் நம்பமாட்டார்கள்! இவர்களுக்கு நல்ல உறவும் நட்பும் குறைவாகவே இருக்கும்.

மன அழுத்தம், மன இறுக்கம் போன்றவை இவர்களைப் பற்றிக் கொள்ளும். மன இறுக்கம் தொடர்பான இரத்த அழுத்தம், பக்கவாதம் உள்ளிட்ட நோய்கள் இவர்களைத் தாக்கும் வாய்ப்புகள் அதிகம்.

வாழ்க்கை சுவை என்று கருதுபவர்களை நாம் நேர்வழிச் சிந்தனையாளர்கள் என்கிறோம்.

இவர்கள் எப்போதும் புன்னகையோடும் தன்னம்பிக்கையோடும் செயற்படுவார்கள். தயங்காமல் புதிய முயற்சிகளில் இறங்குவார்கள். தோல்வியைக் கண்டு கலங்க மாட்டார்கள்.


தங்கள் முயற்சிகளில் மற்றவர்களையும் சேர்த்துக் கொள்வார்கள். இதன் மூலம் வெற்றி வாய்ப்பைப் பெருக்கிக் கொள்வார்கள். இவர்களுக்கு எல்லாப் பக்கங்களிலும் நட்பும் உதவியும் காத்திருக்கும்.

மிகக்கடுமையான நோய்கள்கூட இவர்களின் தன்னம்பிக்கையை பாதிக்காது! இத்தகைய மனநலம் அதிசயிக்கத் தகுந்த உடல் நலத்தைக் கொடுப்பதும் உண்டு.

நமக்குத் தேவை வாழ்வு சுமை என்கிற சரிவுப் பார்வையல்ல! வாழ்க்கை சுவை என்கிற உயர்வுப் பார்வைதான்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# தை பிறந்தால்

தை பிறந்தால் வழி பிறக்கும். இது நாங்கள் அறிந்த பழமொழி.

தை மாதத்து மங்கையை 'தைப்பாவை' என அழைப்போம். தைப்பாவை மார்கழியின் மகளாகப் பிறந்தவள். மாசிக்கு அவள் தாயாகப் புகழ் பெற்றவள். தைப்பொங்கல் பண்டிகையின் போது வீடெல்லாம் மங்கலம். ஊரெல்லாம் மங்கலம். காளை மாடுகளின் கழுத்து மணியின் இனிமை, நெல் மணிகளின் ஒலி, வாழையிலை காற்றில் சலசலக்கும் ஓசை, பெண்மணிகளின் கைவளையல்களின் இனிய ஒலி. தாழைமடல் ஓசை, பொங்கல் தயிரை மத்தினால் கடையும் ஓசை, குழந்தைகளின் மழலை அமுத மொழி, ஆழ்கடல் அலைகளின் ஓசை, மங்கலமாகப் பெருக்கெடுக்கும் பொங்கல் பண்டிகைக் காலம் இது.

தோழியர்கள் துணைவர தைப்பாவை தன் பொன் அடிகளை எடுத்து வைத்து உழவர் இல்லங்களில் எல்லாம் மகிழ்ச்சி பொங்க அருள் பொலியும் நன்னாள் தைப்பொங்கல். இந்தத் திருநாள் பற்றி கவிஞர் கண்ணதாசனின் பாடல்வரிகள் இவை.

''காளை மணியோசை களத்து மணி நெல்லோசை
வாழை இலையோசை வஞ்சியர் கை வளையோசை
தாழை மடலோசை தாயார் தயிர் மத்தோசை
கோழிக் குரலோசை குழவியர் வாய்த் தேனோசை
ஆழி அலையோசை அத்தனையும் மங்கலமாய்
வாழிய பண்போடு மாயமொழி கோடிலையோ
தோழியர் கைத்தாங்கத் தூக்கிய பொன் அடிநோக
மேழியர் தம் இல்லத்து மேலெழுவாய் தைப்பாவாய்''

சி.ஹரிஹரன்
யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை

# மழை



நீல நிறத்து வானமதில்
மேகக் கூட்டம் கூடியே
மின்னல் மின்னி இடி இடித்து
சோஎன மழை பொழியுது
காற்றடிக்கும் திசையிலே
காகிதக் கப்பல் செலுத்தியே
கொட்டும் மழையில் நனைந்துமே
குதித்தே விளையாடுவோம்

சி.சுவேத்தா, 4பி
யா/புனித ஜோன்பொஸ்கோ
வித்தியாலயம்

## புரிந்து கொள்ளுங்கள்

★பாசம் கொள்வது இயற்கையின் அழகு
பழகிப் பிரிவது மனிதனின் இயல்பு
★பிரிந்தவர்கள் பழகியதை மறவாமலும்
பழகியவர்களை மறக்காமலும் இருப்பது தான்
உண்மையான பாசம் வைத்தவரின் பண்பு
★அன்பை எதிர்பார்த்திருப்பவர்கள் அமைதியானவர்கள்

★ஒருவன் யாரை அதிகம் வெறுக்கிறானோ
அவனைத்தான் அதிகம் நேசிக்கின்றான்
★ஒருவன் தான் நேசிக்கும் ஒருவன் மீது கோபம் கொள்ளும் போதுதான் அவனது உண்மையான அன்பின் ஆழம் வெளிப்படும்

ற.றமில்டன், மண்குழி வீதி
ஊர்காவற்றுறை.

## பொது அறிவு

1.வேகமாக நீந்தும் உயிரினம் எது?
சுறா
2.உலகில் மிக உயர்ந்த மலைச்சிகரம் எது?
எவரெஸ்ட்
3.உலகில் மிக நீளமான நதி எது?
நைல்நதி
4.உலகில் மிக உயரமான நீர்வீழ்ச்சி எது?
ஏஞ்சல்
5.சிறிய இதயம் கொண்ட மிருகம் எது?
சிங்கம்
6.உலகில் மிக வேகமாக ஓடக்கூடிய மிருகம் எது?
சிறுத்தை

உ.ஜனனன், தரம்-6
யா/வல்லை இவகுரு
வித்தியாசாலை

# ஆணவம் அழிவைக் கொடுக்கும் ஒற்றுமை பலத்தைத் தரும்


சென்றவாரத் தொடர்ச்சி.......

''பாம்பாரே உமக்குத் தீங்கு செய்யாத எம்மைத் தீண்டாமல் எம்மோடு நீரும் ஒரு நண்பராக சேர்ந்து கொள்ளும், என்று கேட்போமே'' என்றது மைனா. ஆவலோடு கேட்டுக் கொண்டிருந்த பறவைகளின் முகங்கள் மீண்டும் சோர்ந்தன. மைனாவின் யோசனை நல்ல யோசனையாக ஏனைய பறவைகளுக்குத் தென்படவில்லை.

ஆனாலும் மைனாவின் மனதை புண்படுத்த விரும்பாமல் ''நல்ல யோசனை தான். சென்று கேட்டுப் பார்ப்போம்'' என்று கூறி எல்லாப் பறவைகளும் பறந்து சென்று பாம்பின் இருப்பிடத்துக்கு அருகேயுள்ள பட்ட மரத்திலிருந்து ஆர்ப்பரித்தன.



பறவைகளின் ஆரவாரம் கேட்ட பாம்பு சருகுக் கும்பிக்குள் இருந்து வெளியே வந்தது. பாம்பைக் கண்ட பறவைகள் நடுங்கின. பாம்பாருக்கு அருகில் எப்படிப் போவது ''எனக்குப் பயமாக இருக்கிறது'' ''எனக்குப் பயமாக இருக்கிறது'' என்று பறவைகள் பாம்பாரை நெருங்கப் பயந்து ஒருவரை ஒருவர் நீ போ, நீ போ எனத் தள்ளிக் கொண்டன.



வெளியே வந்த பாம்பார் பட்டமரத்தில் இருக்கும் பறவைகளைப் பார்த்து ஆணவமாகச் சிரித்தார். பாம்பின் சிரிப்பைக் கண்டு சீற்றம் கொண்ட மைனாவே பாம்பாரை நெருங்கியது. ''மரத்தில் வாழும் எமக்கெல்லாம் ராசாவாக விளங்கும் பாம்பு ராசாவே பாவமெதுவும் அறியாத எம்மை தினமும் நீரேன் பழி வாங்குகிறீர். உமக்கு நாம் என்ன குற்றம் செய்தோம். ஏன் எமது சந்தோசமான வாழ்வைப் பறிக்கின்றீர், இனிமேல் மட்டும் இப்படிச் செய்யாமல் எமது நண்பர்களில் நீரும் ஒருவராக சேர்ந்து கொள்ளலாமே'' என்றது.

''ஏய் அற்ப மைனாவே வார்த்தைகளால் என்னை வசப்படுத்திக்கொள்ள நினையாதே. எனக்குப் பசி வந்தால் பாவ புண்ணியம் பாரேன். உங்களைப் போல் அலைந்து திரிந்து உணவு தேடமாட்டேன். சுலபமாக பக்கத்தில் இருக்கும் உணவை உண்டு பசிதீர்த்துக் கொள்வேன். இதுதான் எனது பழக்கம்'' என்று ஆணவமாகப் பதிலளித்தது பாம்பு.

''அப்படி என்றால் ஏன் எங்களை மட்டும் நீர் அழித்து வருகின்றீர்?'' எனக் கேட்டது மைனா. ''எனக்கு அருகில் வாழ்ந்து வருவதால் தான் உங்களை உண்டு பசி தீர்த்துக் கொள்கின்றேன். என்னால் உமது இனத்துக்கு துன்பமெனில் இந்த இடத்தை விட்டு போகலாமே தவிர என்னை உங்களால் ஒன்றும் செய்து விடமுடியாது'' என்றது பாம்பு.

பாம்பின் ஆணவம் பிடித்த பேச்சைக் கேட்டு பொறுமை இழந்த கரிக்குருவி ''திமிர்பிடித்த பாம்பே பரம்பரையாக வாழும் எம்மையா இடத்தை விட்டுப் போகச் சொல்கிறாய்? உனது பேச்சைக் கேட்டு போவதற்கு நாங்கள் புத்தி கெட்டவர்கள் அல்ல. இதுவரையும் நாம் பொறுமையாக இருந்தது போதும். இனி உன்னை உயிரோடு விட்டு வைக்க மாட்டோம்'' என்றது.

அற்பக் குருவியே என்னுடனா போட்டி போடப் பார்க்கின்றாய். என்னிடம் இருக்கும் விஷத்துடனா போட்டி போடுகிறாய். உன்னை என்ன செய்கிறேன் பார்'' எனக் கறுவியது பாம்பு.

எல்லாப் பறவைகளும் எழுந்து பறந்தன. தொலைவிலே இருந்த ஒரு மரத்தில் அமர்ந்து கொண்டன. அப்போது குஞ்சுக் கிளி ''கரிக் குருவியாரே பாம்புடன் சவால் கூறி வந்து விட்டீர், எப்படி அந்த நச்சுப் பாம்பை அழிப்பது?'' எனக் கேட்டது. ''அதற்குத்தான் நாம் எல்லோரும் ஆலோசனை செய்து இன்றுடனே பாம்பாரை அழித்துவிட வேண்டும். அதற்கு நல்லதொரு யோசனை செய்வோம்'' என்றது கரிக்குருவி.

எல்லாப் பறவைகளும் அமைதியாக இருந்தன. சிறிது நேரத்தின் பின் சிட்டுக்குருவி ஒன்று ''பறவை நண்பர்களே அதோ பாருங்கள் அந்த இடத்திலே நெருப்பு எரிந்து கொண்டு இருக்கிறதே. அங்கே போவோம். அந்த நெருப்பிலே தீப்பிடித்த தடி இருக்கும். அதனைத் தூக்கி வந்து பாம்பார் இருக்கும் சருகுக் கும்பிமேல் போட்டு விடுவோம். இன்றுடன் பாம்பாரின் கதை முடிந்துவிடும்'' எனக் கூறியது.

''நல்ல யோசனைதான்'' என்று கூறிய எல்லாப் பறவைகளின் முகங்களும் மலர்ந்தன. உடனே எல்லோரும் எழுந்து பறந்து நெருப்பெரியும் இடத்துக்குச் சென்றன. அங்கே தடிக்குச்சி ஒன்று எரிந்து கொண்டிருந்தது. உடனே கிளியார் தனது சொண்டினால் நெருப்புப் பிடித்த தடியைத் தூக்கியது.

பாம்பாரின் உறைவிடத்துக்கு மேலாக வட்டம் போட்டுப் பறந்தது. அப்பொழுதுதான் வெளியே சென்ற பாம்பு தனது சருகுக் கும்பியினுள் சென்றது. கிளி நெருப்புத் தடியை சருகுக் கும்பிமேல் போட்டது.

எல்லாப் பறவைகளும் தமது மரத்தில் இருந்து வேடிக்கை பார்த்தன. சருகுக் கும்பிக்குள் இருந்து புகை சிறிது சிறிதாக எழுந்தது. சில நிமிடங்களின் பின் அந்தக் கும்பி சுவாலை விட்டு எரிந்தது.

எரியும் நெருப்பின் வெப்பத்தைத் தாங்க இயலாத நச்சுப் பாம்பு தப்பினால் போதுமென்று அந்த இடத்தைவிட்டு ஓடத்தொடங்கியது. மரத்தில் அமர்ந்திருந்த பறவைகள் அனைத்தும் வெற்றிக் களிப்பால் ஆர்ப்பரித்து ஆரவாரம் செய்தன.

சரமிளா,
நாரந்தனை.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வானத்தில் ஒளிரும் கலைநிலா தூரிகைகளே...

சங்ககாலம் தொடங்கி-இந்த
சமையலறை வரைக்கும்-எங்கும்
சந்தண மல்லிகைகள்-எங்கும்
சாந்தம் குறையவில்லை

வீட்டில் வாழும் மங்கையரைவிட-பெரும்
காட்டில் வாழும் கலைமான்களுக்கே-என்றும்
மட்டில்லா சுதந்திரம்-இது பல
நாட்டில் வாழும் கஸ்தூரிமான்களுக்கும் வரவேண்டும்

பாரதி மறைந்த பின்னும்-இந்த
பார்தனில் மங்கையர் துன்பம் மறையவில்லை-அவர்
பாட்டில் படித்த கவியை பலர் படித்தும்-அவரின்
பாசக் கனவுகளை பட்டினியில் வாட்டினர்

சீதன வரதட்சணக் கொடுமை-அன்று
சீதைக்கும் இருந்துவிட்டால்-அவள்
சீரான வதனத்தை எண்ணி மெய் மறந்து-எம்
சிறீராமர்கூட சீதாதேவியை கரம்பிடித்தாரா?
சொர்க்கத்து பூக்களை-ஏன் பூகம்பமாய்
சோகத்தில் தினம் வாட்டுவீர்-அவர்கள்
சோலைப் பூக்களாய் பார்வைதனில்-பல பூஞ்
சோலைகளை பூமி மீது ஒளிரவிடுவர் நாள் எல்லாம்

கம்பன் வடித்த பெண்களை-ஏன்
கண்ணீர் துளி வடிக்க விடுகிறீர்கள்-அவர்கள்
கஸ்ரத்திலும் ஒளிரும் காதல் கஸ்தூரிமான்களே-பெரும்
கலைகளை உருவாக்கும் கலைநிலா தூரிகைகளே!

வசந்தத்தை வரவழைக்கும்-புது பூங்காற்று
வசந்தகால கனவுகளை-பூமி மீதுவீச
வண்ண வானவில்களை வளைத்து ஊக்கமாய்
வானம் மீது ஒளிர புது பாதைகளை அமைத்திடுவோம்

இ.இசைப்பிரியன்
உடுத்துறையூர்

# மனிதக் கையின் வ



இயற்கையின் தேர்வானது
மாக பயன்படுத்துவதற்
திருக்கிறது. அத்துடன் மு
ததை விட மனித வளர்ச்சி
ஆக்ரோசம் பெரும்பங்கை

மனிதனின் கையானது கரு
துவதை இலக்காக கொண்டு து
பொத்திப் பிடித்து சண்டை யிடு
கொண்டும் பரிணாம வளர்ச்சி கண்
ஆய்வு கூறுகின்றது.

இயற்கையின் தேர்வானது
படுத்துவதற்கு சாதகமாக இருந்
ன் முன்னர் நினைத்ததை வி
களின் ஆக்ரோசம் பெரும்பங்
அமெரிக்காவின் பரிணாம
நம்புகிறார்கள்.


கைகளின் அமைப்பான
வாக்கியுள்ளது.

மனிதக் குரங்கு
சண்டை யிடுவதற்கு
கண்டுள்ளன.

விஞ்ஞானிக
துவத்தை தற்க
டம் பரிசோ

# வளிமண்டலமும் தூமகேதுக்களின் பரிணாமமும்

(சென்றவாரத் தொடர்ச்சி)



அருணா தருமலிங்கம்

ஆதியில் வாயுமண்டலத்தின் தன்மையை அறிய வானிலை ஆராய்ச்சி மையங்கள் ராட்சத பலூன்களைப் பயன்படுத்தின. வாயு மண்டலத்தால் எமக்குப் பலவித நன்மைகள் உண்டாகின்றன. நாம் உயிர் வாழ்வதற்கு காற்று இன்றியமையாதது. புற ஊதாக் கதிர், ஸ்மிக்கதிர் என்பவை எம்மை அணுகாமல் பாதுகாக்கின்றது எனலாம்.

இரவு வேளையில் பூமியின் ஒரு பகுதி சூரியனைக் காண முடியாது. அந்தநேரம் அந்தப் பகுதி மிகவும் குளிர்ச்சியடையாமல் இருக்க காற்று சீரான வெப்பநிலையை உண்டாக்குகின்றது. மேலும் சிறிய அளவிலான விண்கற்கள் மின்னல் வேகத்தில் பூமியை நோக்கி விழுகின்ற போது காற்றினால் ஏற்படும் உராய்வின் நிமித்தம் எரிந்து சாம்பலாகின்றது. வளிமண்டலம் இல்லாவிட்டால் விண்கல் விழும் இடம் முற்றாக எரிந்துவிடுவதை தவிர்க்க முடியாது.

பூமியும் ஏனைய கிரகங்களும் சூரியனைச் சுற்றி வருகின்றன. அதேவேளை மிக அபூர்வமான வால் நட்சத்திரமும் கதிரவனை நீள் வட்டப்பாதையில் வலம் வரும். வால் நட்சத்திரம் உண்மையில் ஒரு நட்சத்திரமல்ல அது சூரிய குடும்பத்தைச் சேர்ந்த ஒளிரும் பொருள் ஆகும். இதைத் தூமகேது என்றும் அழைப்பதுண்டு.

சூரியனிலிருந்து வெளிநோக்கிப் பாயும் கதிர்கள் மிகுந்த அழுத்தம் உள்ளவை. ஆதலால் வால் நட்சத்திரம் சூரியனுக்கு அருகில் வரும்போது தலைப்பகுதியில் உள்ள வாயுவையும் துகள்களையும் அது எதிர்த்திசைக்கு தள்ளுகின்றது. ஏலவே அந்தப் பகுதி நீண்டு எமக்கு வால் போல் தோற்றமளிக்கிறது. மிக சிறிய ரக வால் நட்சத்திரங்கள் அதிகமாக உள்ளன. பெரும்பாலானவை கண்ணுக்குத் தெரிவதில்லை. தூரதிருஷ்டி கண்ணாடி மூலம்தான் பார்க்க முடியும். வால்நட்சத்திரத்தின் மையப்பகுதி மிகுந்த ஒளியுடையது. அதைச் சுற்றி வாயுக்கள் நிரம்பியுள்ள பகுதியும் சேர்ந்துள்ளவை இதன் தலைப் பகுதி ஆகும். இது சுமார் 50 ஆயிரம் கிலோமீற்றர் வரை விட்டம் உள்ளது. சிலவற்றின் வால்பகுதி மட்டும் சுமார் 16 கோடி கிலோமீற்றர்வரை நீண்டிருக்கும் என்று விஞ்ஞானிகளது கணிப்பாகும்.


என்கே என்ற வால் நட்சத்திரம் 1986 இல் வானில் தோன்றிது. 1910 ஆம் ஆண்டு மே மாதம் ஹலி என்ற வால் வெள்ளி வானில் தென்பட்டது. அதனுடைய வால் மட்டும் ஏறக்குறைய மூன்று தசம் இரண்டு கோடி நீளமாகும். ஹலியின் வாலூடாக பூமி சென்ற வேளையிலும் புவிக்கு விபரீதங்கள் ஏற்படவில்லை. ஆனால் தலை பூமியுடன் மோதினால் பயங்கர ஆபத்து உண்டாகும். 1974 ஆம் ஆண்டு தோன்றிய கொஹுடெக் என்ற வால் நட்சத்திரம் உலகின் பல பாகங்களிலும் பார்க்கக் கூடியதாக இருந்தது. பூமியைச் சூழ உள்ள வாயுமண்டலங்களும் தூமகேதுக்களின் அவ்வப்போதைய பரிமாணங்களும் விஞ்ஞான ஆராய்ச்சியாளருக்கு உறுதுணை புரிகின்றன என்பது மறுப்பதற்கில்லை. (முற்றும்)



# 5 ல
# மு
# அ

அந்தாட்டிக்கா துருவப்பிர
உறைபனிக்கு கீழே சுமார் 5 ல
முன்னர் புதையுண்டுபோன ம
ஏதாவது உயிரினங்கள் இருக்கி
ஆராய்வதற்காக ஐக்கிய இராஜ்
பிரிஸ்டல் பல்கலைக்கழக பேரா
தலைமையிலான 12 விஞ்ஞானிக
ருக்கிறார்கள்.

ஏறக்குறைய 16 ஆண்டுகால தி
அந்தக் குழுவினர் தற்போது அந்த
பனியில் தங்கி தங்களின் ஆய்வுக
அந்தாட்டிக்காவின் உறைப
யுண்டு போயிருக்கு
என்கிற அந்த ஏ
நீளம், 3 கி.மீ
ஆழம் 
கிறது.



ஏரித்தண்ணீர் மற்றும் அதன் சகதிகளில் கண்டிப்பாக நுண்ணுயிரிகள் இருக்கும் என்று விஞ்ஞானிகள் எதிர்பார்க்கின்றனர். அவ்வாறு இருக்கும்பட்சத்தில், நுண்ணுயிர்களின் உயிர்வாழும் தன்மை குறித்த புதிய புரிதலை இது மனித இனத்துக்கு அளிக்கும் என்பது அவர்களின் எதிர்பார்ப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...ன் வளர்ச்சி

...ர்வானது கைகளை ஆயுத
...துவதற்கு சாதகமாக இருந்
...்துடன் முன்னர் நினைத்
...த வளர்ச்சியில் கைகளின்
...ம்பங்கை ஆற்றியிருகிறது


...னது கருவிகளைச் செய்து பயன்படுத்
...கொண்டது. மாத்திரமன்றி கைகளை
...ண்டையிடுவதை அடிப்படையாகக்
...ளர்ச்சி கண்டிருக்கிறது என்று ஒரு புதிய

...வானது கைகளை ஆயுதமாகப் பயன்
...மாக இருந்திருக்கிறது என்றும், அத்து
...த்தை விட மனித வளர்ச்சியில் கை
...பெரும்பங்கை ஆற்றியிருகிறது என்றும்
...ணாம வளர்ச்சியியல் விஞ்ஞானிகள்

...அமைப்பானது சண்டையிடுவதை இலகு
...து.

...க் குரங்குகளை விட எமது கைகள்
...யிடுவதற்கு ஏற்ற வகையில் வளர்ச்சி
...ள்ளன.

...ஞ்ஞானிகள் தமது இந்த புதிய தத்
...த்தை தற்காப்புக் கலை கலைஞர்களி
...ம் பரிசோதித்துள்ளனர்.



(சென்றவாரத் தொடர்ச்சி)

# நடுவு நிலைமை

■ இராமஜெயபாலன்

ஒருவரிடம் ஐந்து உணவுப்பண்டங்கள் உள்ளன. அவை
களை இருவருக்கும் நடுவுநிலையாகப் பகிர்ந்தளிக்க வேண்
டும். ஆனால் ஒருவர் இரண்டுக்கு மேற்பட்டவற்றை
உண்ணமாட்டார். இன்னொருவர் மூன்றுக்கு குறைத்த
வற்றை உண்ணமாட்டார். ஆக நடுவுநிலையானவர்.
இரண்டு பேருக்கும் சமனாகக் கொடுப்பது நடுவுநிலையா?
அவர்களின் தேவை கருதிக் கொடுப்பது நடுவுநிலையா?
என்ற கேள்வி எழுகிறது. ஆகவே சில வேளைகளில்
முரண்பாடுகளில் கூட நடுநிலையிருக்கிறது. ஆயினும்
சட்டத்தின் முன் சகலரும் சமனே. மேலும் புராணங்கள்
(சமயங்கள்) பலவாக இருந்தபோது ஒரே இறைவ
னையே வெவ்வேறு வடிவில் கண்டு வழிபடுகின்றன.
எனவே புராணங்கள் கூட அந்தப் பாரம்பரியங்களை
ஏற்றுக் கொண்டவையாகவே உருவாகிக் கூட இருக்
கின்றன. அதாவது சிவனே முழுமுதல் கடவுளாக ஏகன்
அனேகனாகப் போற்றப்படுகின்றான். அதுபோல் சக்தி
(தேவி) புராணத்தில் அண்டங்கள் அனைத்தையும்
படைத்துக் காப்பதாய் காண்கிறோம். மேலும் விஷ்ணு
புராணத்தில் விஸ்ணுவே முழுமுதற் கடவுளாகவும்
விநாயக புராணத்தில் விநாயகனே முழுமுதல் கடவு
ளாகவும் கந்தபுராணத்தில் கந்தனே முழுமுதற் கடவு
ளாகவும் காண்பதும் முரண்பாடுகளிடையே நடுநிலையாகும்.

ஒருவர் தான் விரும்பும் மதத்தைப் பெருமைப்
படுத்துவதும் பின்பற்றுவதும் அடிப்படை மனித
உரிமையாகும். ஆனால் அதற்காக ஒருவர் இன்
னொருவர் மதத்தை நிந்திப்பதும் இழிவுபடுத்துவதும்
எல்லோருக்கும் இருக்க வேண்டிய அடிப்படை மனித
உரிமையாகக் கொள்ள முடியாது. இவ்வாறு செய்தால்
யாராக இருந்தாலும் தண்டனைக்குரிய குற்றமே.

எவ்வாறாயினும் பல்வகை சமய கலாசார பண்
பாடுகளின் தோற்ற மாற்றங்களை ஆராய்கின்றபோது
பெரும்பாலும் ஒற்றுமைத் தன்மைகளே கூடுதலாகக்
காணப்படுகின்றன. ஆனாலும் வேற்றுமைகள் பெரிது
படுத்தப்படுவதால் ஒரே சமயத்துக்குள்ளேயே பல்வேறு
உட்பிரிவுகள் ஆனாலும் புரிந்துணர்வை வளர்ப்பதுவே
நடுவுநிலையாகும்.

“ ஒருவர்தான் விரும்பும் மதத்தைப் பெருமைப் படுத்துவதும் பின்பற்றுவதும் அடிப்படை மனித உரிமையாகும். ஆனால் அதற்காக ஒருவர் இன்னொருவர் மதத்தை நிந்திப்பதும் இழிவுபடுத்துவதும் எல்லோருக்கும் இருக்க வேண்டிய அடிப்படை மனித உரிமையாகக் கொள்ள முடியாது.



# ...லட்சம் ஆண்டுகளுக்கு முன் புதையுண்ட அந்தாட்டிக்கா ஏரியில் ஆய்வு

...துருவப்பிரதேசத்தில் இருக்கும்
...மார் 5 லட்சம் ஆண்டுகளுக்கு
...போன பிகப்பெரிய ஏரியில்
...் இருக்கின்றனவா என்பதை
...ய இராஜ்ஜியத்தில் இருக்கும்
...முக பேராசிரியர் மார்டின் சீகர்ட்
...ஞ்ஞானிகள் தற்போது ஈடுபட்டு

...டுகால திட்டமிடலுக்குப் பின்னர்
...னது அந்தாட்டிக்காவின் உறை
...ஆய்வுகளை ஆரம்பித்துள்ளனர்.
... உறைபனிக்குக் கீழே புதை
...யிருக்கும் எல்ஸ்வொர்த் ஏரி
... அந்த ஏரி, சுமார் 14 கி. மீ.
...், 3 கி.மீ. அகலம் 160 மீற்றர்
... ஆழம் கொண்டதாக இருக்
கிறது. சுமார் 5 இலட்சம்
ஆண்டுகளாக சூரிய
ஒளிபோபடாதஇருண்ட
ஏரியில் இருக்கும்
அந்தத் தண்

ணீரில் ஏதாவது உயிரினம் வாழுகிறதா என்பதைக் கண்ட
றிவதுதான் அந்த ஆய்வின் பிரதான நோக்கம் என்கிறார்
ஆய்வுக்குழுவின் தலைவர் பேராசிரியர் மார்டின் சீகர்ட்.

அந்த ஆய்வின் முதல் சவால், ஏரியை மூடியிருக்கும் 3 கி.மீ.
அடர்த்தியான உறைபனியை உடைப்பது. அவ்வாறு
உடைக்கப் பயன்படுத்தும் இயந்திரங்கள் அதிகபட்சம் சுத்தமாக
இருக்கவேண்டும். இல்லாவிட்டால் அந்த உபகரணங்களில்
இருக்கும் கண்ணுக்குத் தெரியாத நுண்ணுயிரிகள் எல்ஸ்வொர்த்
ஏரித்தண்ணீரை மாசுபடுத்திவிடும் ஆபத்துள்ளது. எனவே,
அதில் பயன்படுத்தப்படும் உபகரணங்கள் அனைத்துமே
ஸ்டெரைல் என்று ஆங்கிலத்தில் வர்ணிக்கப்படும் அதிகபட்ச
தூய்மையானவையாகத் தொடர்ந்தும் வைக்கப்பட்டிருக்கவேண்டும்.

அந்த உபகரணங்களைப் பயன்படுத்தி பனிப்பாறையில்
துளை ஏற்படுத்தி அந்தத் துளைவழியாக குழாய் அனுப்பி ஏரியின்
தண்ணீரை மேலே எடுத்து ஆராய்வது தான் அந்தப் பரிசோதனை
முயற்சியின் முக்கிய குறிக்கோள். அதற்கடுத்து, அந்த ஏரியின் கீழ்ப்
பகுதியில் இருக்கும் சகதியையும் இதே துளைவழியாக மேலே
எடுத்து அதையும் ஆராய்வது விஞ்ஞானிகளின் அடுத்த இலக்கு.

குறிப்பிட்ட ஏரித்தண்ணீர் மற்றும் அதன் சகதிகளில் கண்டிப்
பாக நுண்ணுயிரிகள் இருக்கும் என்று விஞ்ஞானிகள் எதிர்
பார்க்கின்றனர். அவ்வாறு இருக்கும் பட்சத்தில், நுண்ணுயிர்
களின் உயிர்வாழும் தன்மை குறித்த புதிய புரிதலை இது மனித
இனத்துக்கு அளிக்கும் என்பது அவர்களின் எதிர்பார்ப்பு.

■ இணையவன்







# பாம்புக்கு சவால்விடும் சிலந்தி

பூமியில் படைக்கப்பட்ட ஒவ்வொரு இனத்திற்கும் உணவுத் தேவை உள்ளது. அவை, தமக்குத் தேவையான உணவுகளை வேட்டையாடி உண்பது என்பது யதார்த்தம். நாகரிக மனிதன் கூட வேடையாடியே உணவை உண்ணுகிறான். அந்த வகையில் சிறிய பூச்சி இனத்தைச் சேர்ந்த ஒன்று, பெரிய இனத்தைச் சேர்ந்த ஒன்றை அடித்துச் சாப்பிடுகிறது என்று சொன்னால் நம்புவீர்களா? தங்கச் சிலந்தி இனத்தைச் சேர்ந்த சிலந்தி ஒன்று பாம்பொன்றை வேட்டையாடி உண்ணும் விசித்திரத்தை இங்கு காணலாம்.

ஆஸ்திரேலியாவிலுள்ள குயின்ஸ்லாந்தின் காடுகளில் இந்த வகை சிலந்திகள் காணப்படுகின்றன. தங்க சிலந்திகள் பின்னும் வலைகள் மிகக் கடினமாக இருப்பதால் இதில் பாம்பு, பறவைகள் ஆகியவை எளிதாகச் சிக்கிக் கொள்கின்றன.

-றஜி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தகசாலை

## நூல்— வித்தகர்



வித்தகர் என்ற நாமம் தாங்கி யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி, இந்து மா மன்றம் வித்தக விநாயகர் ஆலயத்தின் இரண்டாவது மகா கும்பாபிஷேக சிறப்பு மலரை வெளியிட்டுள்ளது.

சிரேஷ்ட விரிவுரையாளர் முருகேசு கௌரிகாந்தனை மலர் ஆசிரியராகக் கொண்டு ஆக்கம் பெற்றுள்ள சிறப்பு மலர் சமயப் பெரியார்களின் அருளாசிகளையும், அறிஞர்களின் ஆசிச் செய்திகளையும் முதற்பக்கங் களில் ஏற்று வெளிவந்துள்ளது.

மலராசிரியரின் வித்தக விநாயகர் ஆலய வரலாற்றுச் சுருக்கத்தைத் தொடக்கமாகக் கொண்டு பல அறிஞர்களின் பயன்மிகு கட்டுரைகள் மலரில் இடம்பெற்றுள்ளன.

கலாகீர்த்தி பேராசிரியர் சி.தில்லைநாதன், சிவஸ்ரீ நிவாச நாகேந்திரக் குருக்கள், பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன், பேராசிரியர் கலாநிதி ஆ.வேலுப்பிள்ளை, சிரேஷ்ட விரிவுரையாளர் மா.பிரபாகரன் ஆகியோரின் ஆன்மிக வழிபாடுகள், செயற்பாடுகள் சார்ந்த கட்டுரைகளும் மலராசிரியரின் ''சைவாலயங்களில் பலியிடல்'' குறித்த ஒரு கண்ணோட்டமும் நூலின் மதிப்புயர்த்தியுள்ளன.

விநாயகரின் பதினாறு தோற்றங்களையும் ரேகை வரைபிலும் விநாயகரையும் ஊர்த்துவரையும் மூர்த்திகளையும் புகைப்படங்களாகவும் தந்துள்ளனர். ஆலயத்தின் வளர்ச்சியில் கடந்த கால நிகழ்வுகளின் வண்ணப்படக் காட்சிகளும் மலரில் இணைக்கப்பட்டுள்ளன. சிறிய கையடக்கமான சிறப்பு மலர் நிறைவான விடயங்களுடன் ஆலயத்தின் சிறப்புரைத்து வாசகருக்கு அருள்மொழி வழங்குகிறது.

பா.தர்மினி

## நூல்— கிராமியப் பாடசாலைகளில் பதின்ம வயதினர்





பாலியல் சார்ந்த பல்வேறு பிரச்சினைகள் சமூகத்தில் விளைந்து விபரீதமான முடிவுகளுக்கு வழிசமைத்துள்ளன. இந்தக் கால கட்டத்தில் பதின்ம வயதினர், கிராமியப் பாடசாலைகளில் எதிர்கொள்ளும் பாலியல் பிரச்சினைகளையும் பால்நிலைச் சமத்துவமின்மையையும் கருத்தில் கொண்டு, ''கிராமியப் பாடசாலைகளில் பதின்ம வயதினர்'' எனும் நூலை எழுதி வெளியிட்டுள்ளார் கணேசபிள்ளை சிவகரன். வலிகாமம் கல்வி வலயத்தில் சமூகவிஞ்ஞான ஆசிரிய ஆலோசகராகப் பணி தொடரும் நூலாசிரியர் இன்றைய கல்விப் புலத்துக்குத் தேவையான ஒரு பால்நிலைச் சமத்துவ நோக்கு பற்றிய ஆய்வினை முன்வைத்துள்ளமை பாராட்டுக்கு உரியதாகும்.

பால்நிலைச் சமத்துவம் பேணப்படுவதன் அவசியத்தையும் பாடசாலைகளில் அவை சார்ந்த சிந்தனைகள் மேம்படவும் பருவ வயதினரின் நடத்தைக் கோலங்கள் சீரமைக்கப்பட வேண்டியதன் தேவையையும் ஆராய்ந்து விளக்கி எழுதியுள்ள இந்நூல் உளவியல் நோக்கில் பதின்ம வயதினரின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் முயற்சிக்கு உதவுகின்றது. ஆசிரியராக, ஆசிரிய ஆலோசகராக நூலாசிரியர் பெற்ற அனுபவத்தின் வழி ஆய்வுகளின் மூலம் பயன்மிக்க உளவியல் வெளிப்பாடுகளை நூல் வாசகருடன் பேசுகின்றது. இந்த நூல் கல்விப் பேருலகிற்குப் பெரும் பயன் நல்கும் பாலியல் சமத்துவ நோக்குசார் பார்வையை வலுப்படுத்தும் என நம்பலாம். பாடசாலைச் சமூகம் கற்றுயர வேண்டிய நன்னூலாகும்.

மகேஷ்

## நூல்— நங்கூரம் சஞ்சிகை — மார்கழி




இயற்கையை நீ அழித்தால் இயற்கையால் நீ அழிவாய் என்ற பாடத்தை உரக்கப் போதித்துச் சென்ற 2004 ஆம் ஆண்டு மார்கழி 26 ஆம் திகதி சுனாமி பேரனர்த்தத்தை மீண்டும் நினைவுபடுத்தும் வகையில் கடற்கோள் கற்றுத் தந்த பாடம் எனும் கட்டுரை நங்கூரம் அலை 11.12 இல் இடம்பெற்றுள்ளது. இயற்கையே மனிதனை வாழ வைக்கிறது. அந்த இயற்கையின் பேராற்றலைப் புரிந்துணர்ந்து வாழப்பழகுங்கள் என்பதைக் கட்டுரை வலியுறுத்துகிறது.

சிரித்து வாழ்வதே இன்பம் என்பதை விளக்கும். 'மனம் விட்டுச் சிரித்தால் மருந்தின்றி வாழலாம்' எனும் வைத்தியகலாநிதி து.விக்னராசாவின் கட்டுரை ஒவ்வொருவரினதும் ஆரோக்கியத்துக்கும் உறுதுணையாய் கருத்துரைக்கிறது.

சிரிப்பின் மகத்துவத்தைப் பல திசைகளிலிருந்தும் ஆய்ந்தும், அனுபவித்தும் எழுதியுள்ளார் அருமையான கட்டுரை. யோகேஸ்வரி சிவப்பிரகாசம் தந்துள்ள சிறுகதை 'காவோலை' கற்பகதருவான பனை மரத்தின் சிறப்புக்களை சம்பவக் கோவையாக தந்துள்ளார். இளைய தலைமுறையினரின் எழுச்சி கண்டு தெய்வானைப்பிள்ளை மகிழ்ந்து சிரிக்கிறார். எதிர்காலம் பனை மரத்திலின்று பெருகும் பயன்களை அனுபவிக்கத் துடிக்கும் ஆர்வத்தைச் சிறுகதை பறைசாற்றுகிறது. சமூக அறிவியல் ஏடான நங்கூரம் அழகிய அட்டைப்படத்துடன் இணையம் புத்தகக் சிந்தனையைச் சுருக்கி வருகிறது என்ற கருத்தாடலுடன் த.தவரூபன் தந்த நேர்காணல் கணினி பற்றிய பயனுள்ள பாவனைக்கு வழிகாட்டுகிறது. முழுமையாக நங்கூரம் கார்த்திகை மார்கழி 2012 இதழ் ஒரு சமூக சஞ்சிகையின் சிறப்புக் கூறும் வகையில், தமிழ் நதி எழுதியுள்ள 'நெடுங்கோடை' எனும் கவிதை. கேள்விகளினூடாக ஓர் அறிவியல் பயணம், தகவல் களஞ்சியம் ஆகிய விடயங்களை உள்ளடக்கியுள்ளது. அறிவியல் ஏடான நங்கூரத்தின் வரவை ஆவலோடு எதிர்பார்க்கும் வாசகர்களை மேலும் கவரும் வகை செய்யட்டும் சஞ்சிகைகள் வெளியீட்டும்.

மகேஷ்

# ஆண்களின் நட்பு இறுதிவரை... பெண்களின் நட்பு...?



கண்ணன்

நட்பு என்பது சொந்த பந்தங்களைத் தாண்டி ஒருவர் மீது இன்னொருவருக்கு ஏற்படும் பாசம், அன்பு அதையும் தாண்டியது. தங்கையோடு அண்ணன் நட்போடு இருக்கலாம். அக்காவோடு தங்கை நட்போடு இருக்கலாம். ஆனால் ஊர் வேறு , மொழி வேறு என ஒரு சொந்தமும் இல்லாமல் வருவது நட்பு .

எத்தனைபேருக்கு ஆத்மார்த்தமான நண்பர்கள் கிடைக் கின்றார்கள். தனது நண்பருக்காக எதையும் செய்யும், செய்யத் துணியும் நட்பு கொண்டவர்கள் எத்தனை பேர். அப்படி இருப்போர் அபூர்வம். விரல் விட்டு எண்ணக் கூடியவர்கள்தான் உள்ளனர்.

நமக்கு நல்ல பெற்றோர் கிடைத்தால் நாமும் நல்லவர்களாக, சமுதாயத்தில் ஒரு நல்ல பிரஜையாக வாழ்வோம். நல்ல நட்பு கிடைத்தால் அவன் எமது வாழ் நாள் பூராக நன்றிக் கடன் பட்டவனாகவும் , எமது நன்மை, தீமைகளுக்கு உறுதுணையாகவும், சோர்ந்து இருக்கும் போது தட்டி தூக்கி விடுபவனாகவும், ஆபத்தில் உதவி செய்ய முன் நிற்பவனாகவும், எமக்கு ஒரு பிரச்சினை என்றால் தீர்த்து வைக்கும் ஒருவனாகவும், எமது கவலைகளை அவனிடம் கொட்டி தீர்த்து அதற்கு ஒரு தீர்வு சொல்லும் ஓர் ஆசானாகவும் இருக்கிறான் நண்பன்.

சிறுவயதில் பழகிய நட்பு நாம் வாழும்வரைக்கும் தொடர்கிறது என்றால் அந்த நட்பில் ஒரு களங்கமும் இராது. அது சிறந்த நட்பு. எப்போதும் எதையும் விட்டுக் கொடுத்து, தமது கவலைகளை சொல்லித் தீர்த்து இருவரும் தமது முன்னேற்றப் பாதையில், வாழ்வில் சிறந்து விளங்குவார்கள். ஆண்களின் நட்பு இறுதிவரை செல்கிறது. ஆனால், பெண்களின் நட்பு அப்படி தொடர்வது குறைவு. திருமணம் செய்தவுடன் அந்த நட்பு சிலருக்கு தொடர்வதில்லை.

சிலர் நாம் எப்போதும் நண்பர்கள் என அந்த நட்பை தொடர்கிறார்கள். பெண்கள் ஓர் ஆணுக்கு நண்பியாக இருக்கும்போது அந்த நட்பு காதலாக மாறி திருமணத்தில் முடிவடைகிறது. ஆனால், சிலரது நட்பு அப்படி இல்லை. கடைசி வரைக்கும் அவன் ஒரு நண்பனாக இருக்கிறான். அவன் வேறு ஒருவரை திருமணம் செய்கிறான். அவள் வேறோ ஒருவரை திருமணம் செய்கிறாள். ஆனாலும், அவர்கள் நண்பர்களாக தமது இன்ப, துன்பங்களை பகிர்ந்து கொள்கிறார்கள்.

ஆனால் , எல்லா இடங்களிலும் இப்படி நடப்பதில்லை. அவளுடைய கணவன் சந்தேகப்பட்டால் அவளது வாழ்க்கையில் சண்டை, சச்சரவு வந்து இவர்களின் பழைய நட்பால் விவாகரத்துவரை செல்வதும் உண்டு . அதற்கு ஏற்ற படி நடந்து கொள்ள வேண்டியது அவரவர் பொறுப்பு .

நட்புக்கு எல்லை இல்லை. நல்ல நட்பால் சாதித்தவர்கள் அதிகம். நட்பு என்ற போர்வையில் சீரழிந்தவர்களும் உண்டு. நமக்கு ஏற்ற நண்பர்களை தேர்வு செய்து அவனது பழக்கவழக்கங்கள், குணங்கள் எமக்கு பிடித்திருந்தால் அவனை எமது நண்பனாக ஏற்றுக் கொள்ளலாம். அவன் தீய பழக்கங்களுடன் இருக்கிறான் என்றால் அவனை விலத்தி நாமும் விலகி நடப்பது நமக்கு நல்லது.

வெளிப் பார்வைக்கு எல்லாம் நன்றாகத்தான் இருக்கிறது. வெளுத்ததெல்லாம் பால் என்று நினைக்கக் கூடாது. எல்லோருக்கும் ஒவ்வொரு கால கட்டத்தில் பல நண்பர்கள் வருவார்கள், பழகுவார்கள். ஆனால், அவை நிலைப் பதில்லை. சிலருக்கு சிலரது நட்பு பாடசாலை முடிந்ததும் முடிவடைகிறது. சிலரது நட்பு தொடர்கிறது.

இன்னும் சிலரது நட்பு வேலை செய்யும் இடங்களில் இருந்து ஆரம்பிக்கிறது. ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org